20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் ™
VLAMBARAM™
☎ 416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978


RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | August 15, 2010

# தேன்கூட்டிற்கு கல் எறிந்தவன் நிலை மேற்குலகம்!

இலங்கையிலிருந்து 490 தமிழ் மக்கள் கப்பல் மூலமாக கனடாவிற்கு வருகை. மேற்குலக நாடுகள் எல்லாம் சேர்ந்து இலங்கை அரசிற்கு உதவி உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வந்தார்கள். நடந்தது என்ன? அவர்களால் இலங்கை அரசை தமிழர் பிரச்சனைக்கு தீர்வுக்காண வலியுறுத்த முடியவில்லை.



இலங்கை அரசு தான் நினைத்த மாதிரி தமிழர்களை வதைக்கிறது. இலங்கையை ஆளுகின்றது. போரின் பின் இலங்கை அரசு மேற்குலக நாடுகளின் வேண்டுகோளுக்கோ அல்லது பயமுறுத்தலுக்கோ பணிய மறுத்து வருகிறது. இதன் விளைவு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். கடந்த ஒக்ரோபர் மாதம் 76 தமிழர்கள் Ocean Lady என்ற கப்பலில் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தின் வன்கூவர் தீவில் உள்ள விக்டோரியா நகரிற்கு வந்தார்கள், அதேபோல் ஆகஸ்ட் 13, 2010 ஆம் நாள் 490 தமிழர்கள் MV Sun Sea என்னும் கப்பலில் அதே இடத்திற்கு வந்தார்கள். இணையச் செய்திகளின் படி மேலும் இரண்டு கப்பல்கள் இலங்கையை விட்டு புறப்பட்டுள்ளன.

MV Sun Sea என்ற கப்பலில் வந்த 490 பேரும் 90இற்கு மேற்பட்ட நாட்கள் கடலில் 59 மீற்றர் நீளமான ஒரு தாய்லாந்தை சேர்ந்த சிறிய கப்பலில் இருந்திருக்கிறார்கள். இவ்வாறான சிறிய கப்பலில் இந்த அளவு மக்கள் பயணம் செய்தமையை நம்ப முடியவில்லை என்று கனேடிய தமிழ் காங்கிரஸின் சட்டத்தரணியான ஹரி ஆனந்தசங்கரி கப்பல் தரித்திருக்கும் இடத்திலிருந்து தெரிவித்தார். கப்பல் வியாழக்கிழமை கனேடிய எல்லைக்குள் வந்ததும் விக்டோரியாவிலுள்ள ஸ்குயர்மோல் கடற்படைத்தளத்தைச் சேர்ந்த இரண்டு கப்பல்களில் பாதுகாப்பு படையினர் சென்று MV Sun Sea கப்பலை வழிநடத்தி கடற்படைதளத்திற்கு வெள்ளிக்கிழமை காலை ஆறுமணி அளவில் கொண்டு வந்தார்கள்.

கடற்படைத்தள இறங்கு துறையில் முன்கூட்டியே இவர்கள் வரவை எதிர்பார்த்து கட்டப்பட்டிருந்த வெள்ளைக் கூடாரங்களுக்கு கப்பல் பயணிகள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். ஒரே ஒருவர் மாத்திரம் Stretcher இல் வைத்து இறக்கப்பட்டு அம்புலன்ஸ் வண்டியில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். விசாரணையின் பின்னர் பத்துப்பேர் வரையில் வைத்தியசாலைக்கு சுகாதார பரிசோதனைக்கு அனுப்பப்பட்டார்கள். கப்பலில் வந்த 490 பேரில் இரண்டு கர்ப்பிணிகள் உட்பட 90 பெண்களும் 45 சிறுவர்களும் இருக்கிறார்கள் என உறுதி செய்யப்படாத தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

கனேடிய அரசாங்கம் இந்தக் கப்பலின் வருகையை எதிர்பார்த்து முன்கூட்டியே திட்டமிட்டு பல வேலைகளை செய்திருந்தது. பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருக்கும் Maple Ridge சிறைச்சாலை விசாரணைக் கைதிகளை வைத்திருப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. கசம் போன்ற தொற்று வியாதிகளுடன் பிரயாணிகள் வந்தாலும் என்று விக்டோரியா பொது மருத்துவமனையில் 100 படுக்கை வசதிகள் ஒழுங்கு செய்து வைக்கப்பட்டருந்தது. விக்டோறியா சுகாதாரசேவை உத்தியோகத்தவர்களுக்கு தொற்றுநோய் பரவலைத்தடுக்கும் திட்டம் (Pandemic - Plan Mode) அமல்படுத்தப்பட்டிருந்தது. இதைப்பற்றி தெரிவித்த Janet Dirks நாங்கள் கப்பலில் வருபவர்கள் நல்ல உடல் நிலையில் இருக்கவேண்டும் என விரும்பிக்கொண்டு எந்தவிதமான ஆபத்தான நிலைக்கும் எம்மை தயார்படுத்திக் கொண்டிருந்தோம் என்றார்.

கனேடிய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரான Captain Dermot Mulholland ஊடகவியளாளர்களுக்கு தெரிவிக்கையில் தாங்கள் MV Sun Sea கப்பலை முதலில் தொடர்பு கொண்டதில் இருந்து எல்லாமே திட்டமிட்டபடியும் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடந்தேறியது என்றார். தங்கள் கப்பலிற்குள் பிரவேசித்தவுடன் தாங்கள் இட்ட கட்டளைகளை கப்பலில் வந்தவர்கள் விளங்கிக் கொண்டார்கள். அதன்படி கேட்டு நடந்தார்கள். கப்பலும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் செலுத்துவதற்கு ஏற்ற நல்லநிலையிலும் பாதுகாப்பானதுமாக இருந்தால் அதை அவர்களால் இலகுவாக செலுத்தி கடற்படைதளத்திற்கு கொண்டு வந்து நங்கூரமிட முடிந்தது என்றார்.

கப்பலில் வந்தவர்களை முதலில் விசாரணைக்கு உட்படுத்தும் பொறுப்பு CBSA எனப்படும் கனேடிய எல்லை பாதுகாப்பு படைக்கே (Canada Border Service Agency) உரியது. இவர்கள் விசாரணைகள் முடிய குறைந்தது மூன்று நாட்கள் எடுக்கும். CBSA யை சேர்ந்த Rob Johnston தெரிவிக்கையில் தாங்கள் ஒவ்வொருவரையும் படம், மற்றும் கைவிரல் அடையாளங்கள் எடுப்பதுடன் அவர்கள் குற்ற செயலில் ஈடுபட்டவர்களா என்ற விசாரணையும் செய்வோம் என்றார். தாங்கள் சந்தேகப்படுபவர்களை மட்டுமே சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்போம். ஏனையவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அருகிலுள்ள CBSA அலுவலகத்திற்கு தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுவார்கள்.

கனேடிய பொதுமக்கள்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
905-565-6555
1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessories
» Racks
» Shopping Cart & Baskets
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........

நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம்.
355 Admiral Blvd, Unit #5
Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
HomeLife
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# தேன்கூட்டிற்கு கல்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



நலன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் விக்ரோவில் (Victowes) ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில் ஆட்களை கடத்துபவர்களும் (Human Smugglers) பயங்கரவாதிகளும் (Terrorists) கப்பலில் வந்தவர்களில் இருக்கிறார்களா என விசாரணை மூலம் கண்டறியப்படுவார்கள். இவர்கள் கனடாவின் சட்டங்களை பாவித்து மிகவும் பாரதூரமாக தண்டிக்கப்படுவார்கள். கனடா, அகதிகளை வரவேற்று முறையாக நடத்தும் ஒரு நாடு ஆனால் ஆட்களை கடத்துபவர்களும் பயங்கரவாதிகளும் இந்த சலுகையை துஷ்பிரயோகம் செய்யவிடமாட்டோம் என்றார்.

கனடாவிற்கான இலங்கை தூதுவர் சித்திராங்கனி வாகீஸ்வரா (Chitranganee Wagiswara) ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில் கப்பலில் வந்தவர் பலர் ஆளுக்கு $50,000 கனேடிய டொலர் செலுத்தியவர்கள் என்றார். இந்த பணம் புலிகளுக்கு போய் சேரும் என்றார். அவர் கனடிய அரசாங்கம் அகதிகளை நடுக்கடலில் வைத்து திருப்பி அனுப்பி இருக்கவேண்டும். இவ்வாறு செய்யாதது கனடிய அரசின் தவறு என்றார்.

புதிய ஜனநாயகம் கட்சியை சேர்ந்த ஒலிவியா சோ (Olivia Chow) தெரிவிக்கையில் கனேடிய அரசாங்கம் ஆட்களை கடத்துபவர்களை தண்டித்தும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கருணையும் காட்டவேண்டும் என்றார்.

கனேடிய தமிழ் காங்கிரஸை சேர்ந்தவர்களும் சட்டத்தரணிகளும் அகதிகள் வந்து இறங்கிய இடத்தில் இருந்தார்கள். அவர்கள் CBC க்கு அளித்த பேட்டியில் தாங்கள் அகதிகளாக வந்தவர்களின் நலனைக் கவனிப்பார்கள் என தெரிவித்தார்கள். கனேடிய தமிழ் காங்கிரஸ்தான் Ocean Lady யில் வந்து இறங்கிய 76 தமிழர்களின் நலனை கவனித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கனடிய தமிழ் காங்கிரஸ் ரொரன்ரோவில் தம்முடன் தொடர்பு கொள்வதன் மூலம் அகதிகளாக வந்தவர்களுக்கு உதவலாம் என தெரிவித்துள்ளது.

முன்னாள் கனேடிய தூதுவர் James Bissett, CTV தொலைக்காட்சிக்கு தெரிவிக்கையில் கனடாவிற்கு வருடம் தோறும் 36 ஆயிரத்திற்கு மேற்பட்ட அகதிகள் வருகிறார்கள் அதாவது மாதம் ஒன்றிற்கு 3 ஆயிரம் பேர் வருகிறார்கள். அகதிகளாக வருபவர்கள் எல்லோருமே ஏதோ ஒருவருகையில் ஆட்களை கடத்துபவர்கள் மூலமாக தான் வருகிறார்கள். இப்போது வந்தவர்கள் கப்பலில் வந்தார்கள் என்பதை தவிர வழமையாக கனடா வரும் அகதிகளுக்கும் இவர்களுக்கும் வேறு ஒரு வித்தியாசமும் இல்லை என்றார். 2008 இல் கனடாவிற்கு 37,000பேர் அகதியாக வந்தார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் கணக்கெடுப்பின்படி முன்னேற்றம் அடைந்த நாடுகளில் அகதி கோரும் மக்களில் முதல் ஐந்து இடத்தையும் பிடித்திருக்கும் நாடுகள் முறையே மெக்சிக்கோ, ஹங்கேரி, கொலம்பியா, செக்குடியரசு மற்றும் சீனா ஆகும்.

# அமெரிக்கப் பயணம் - 9

**விநோத நிலப்பகுதி - திறந்த திகதி ஜூலை 17 - 1955**

டிஸ்னி பூங்காவிலுள்ள திட்டமிடப்பட்ட நிலப்பகுதிகளில் விநோத நிலப் பகுதியும் ஒன்று. ஆரம்ப காலத்தில் இங்கே, நுழைவாயிலின் முன்னே ஆர்தர் அரசின் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. இதன் முன்னால் ஒரு பட்டறைக் கல்மேல் வாள் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் பலதடவை ஒரு குள்ளன் அந்த வாளை ஒரு பிள்ளை தூக்குவதற்கு உதவி செய்வது போன்று செய்து வைக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் தாம் வாசிக்கும் விநோதக் கதைகளில் வரும் பாத்திரங்கள் போல் நடந்து கொள்ளவும், பழகவும் விரும்புவது இயற்கையே. குறிப்பாக பீற்றர் பானுடன் (Peter Pan) பறப்பது, அலிசின் விநோத உலகில் சஞ்சரிப்பது போன்றவை, குழந்தைகளுக்கு விருப்பமான செயல்கள்.



இப்பகுதி 1983 இல் பெரும் மாற்றத்துக்குள்ளாகியது. இதன் காட்சிச்சாலைகள் பவேரியன் கிராமியச் சூழலைப் பிரதிபலிப்பது போன்று மாற்றியமைக்கப்பட்டன. இதன் நுழைவாயில் தூங்கும் அழிகியின் மாளிகைக் கூடாக அமைக்கப்பட்டது. இம்மாளிகையின் முற்றத்தில், டிஸ்னி உலகின் வரலாற்று உறை (Time Capsule) புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு விளம்பரப்பட்டயம் அமைக்கப்பட்டுள்ளது. இது பூங்காவின் 40 ஆண்டு நிறைவின் போது புதைக்கப்பட்டது. இது 2035 இல் திறக்கப்பட உள்ளது. இந்த நிலப்பகுதியில் விநோத வாணவேடிக்கை முதலில் 1956 இல் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com


## REAL ESTATE வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (*Real Estate*) வகுப்பு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: ***Vanessa - 416.321.6969***



# பயங்கரவாதத்திற்கு எதிரான போர் முடிந்தது என்றால் இனப்பிரச்சினை தீர்வதற்கு வழியென்ன?

இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

'இலங்கையில் முப்பது வருடங்களாக இருந்து வந்த பயங்கரவாதத்திற்கு முடிவு காணப்பட்டுவிட்டது. பயங்கரவாதிகளான விடுதலைப்புலிகளை அழித்துவிட்டோம்.' - என்பது இலங்கை அரசாங்கத்தின் கூற்று. நாட்டில் இறுதி யுத்தம் முடிந்து பதினைந்து மாதங்களாகின்றன. ஆனால் அரசாங்கத்தினால் குறிப்பிடப்படுகின்ற பயங்கரவாதத்திற்குக் காரணமான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற கேள்விக்கு அரசு சளாப்பலாகவே பதிலளிக்கின்றது.

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தம் என்பது மிகவும் கோரமானது. இறுதிச் சமரின்போது – அந்த இறுதி நாட்களின்போது ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பது ஐக்கிய நாடுகள் அமைப்பின் கணிப்பாகும். ஆனால் 40 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் என இறுதிச் சமரை நேரில் கண்டவர்களும், அந்த வேளையில் அங்கிருந்து உயிர்தப்பியவர்களும் தெரிவித்திருக்கின்றார்கள் என்ற தகவலும் உள்ளது.

அந்த இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பது பற்றிய உண்மைகள் இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமே தெரியும். இறுதிச் சண்டைகளின் போது அதனை வழிநடத்திய விடுதலைப் புலிகளின் தலைமை இப்போது இல்லை. அது அழித்தொழிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட முக்கிய உயர் மட்டத் தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டிலும்கூட வெள்ளைக் கொடிகளை ஏந்தி, சமாதானம் பேசுவதற்காக அல்லது சரணடைவதற்காக வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்ற விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களாகிய பா.நடேசன், புலித்தேவன் ஆகியோருக்கு என்ன நடந்தது எப்படி அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதற்கு அரசாங்கம் தெளிவான தகவல்களை இதுவரையில் வெளியிடவில்லை.

இந்த வெள்ளைக்கொடி விவகாரமும், இறுதிச் சண்டைகளின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற விடயமும், சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனக் கூறப்படுகின்ற நிராயுதபாணிகளை இராணுவத்தினர் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொல்லுகின்ற காட்சிகள் அடங்கிய வீடியோ விடயம் உட்பட இன்னும் எத்தனையோ விடயங்கள் தொடர்பாக ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக அனைத்துலக மனித உரிமைகள் அமைப்புக்களும், ஐநா அமைப்பும் கூறுகின்றன. இந்த ஆதாரங்களின் அடிப்பயையில் இறுதி யுத்தத்தின்போது அரச படைகளும், விடுதலைப்புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்ததாகப் பகிரங்கமாக இந்த அமைப்புக்கள் இலங்கை மீது குற்றம் சுமத்தியிருக்கின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் தமக்கு எந்தவிதமான பங்கும் இல்லை என்பது இலங்கை அரசாங்கத்தின் பிடிவாதமான நிலைப்பாடாக இருக்கின்றது. ஒரு கையில் மனிதநேயத்தையும் மறுகையில் துப்பாக்கியையும் ஏந்திய வண்ணம்தான் அரச படைகளைச் சேர்ந்த சிப்பாய்கள் பயங்கரவாதிகளான விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கூற்றாக இருக்கின்றது.

> “ அரசியல் உரிமைகளுக்காகப் பேராராடியவர்களைக் குற்றவாளிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் சித்தரித்துக் கொண்டு அவர்கள் ஒரு கொடியின் கீழ் ஓர் ஒற்றையாட்சியின் கீழ் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அல்லது அத்தகைய ஒரு தெரிவு மாத்திரமே உங்களுக்கு இருக்கின்றது என்ற செய்தியை பல்வேறு செயற்பாட்டு வடிவங்களின் ஊடாக அரசாங்கம் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது. ”

ஆனால், இடம்பெயர்ந்து இப்போதும் இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கின்றவர்களும், மீள்குடியேற்றத்திற்காக வன்னிப்பிரதேசத்தில் உள்ள தமது சொந்த இடங்களுக்குச் சென்றிருப்பவர்களும் கூறுகின்ற கதைகள் அனைத்தும் ஜனாதிபதியின் கூற்றுக்கு நேர் எதிர்மாறானவையாகவே இருக்கின்றன. தமது உடன் பிறப்புக்களையும், பிள்ளைகளையும், கணவன் மனைவியையும், உறவினர்களையும் இழந்துள்ளவர்களின் நேரடி அனுபவங்கள், இறுதிச் சண்டைகளின்போது இராணுவமும் விடுதலைப் புலிகளும் எந்த அளவிற்கு மோசமாக நடந்து கொண்டார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுவதாக இருக்கின்றன.

சண்டைத்தளங்களில் இருந்து இழப்புகளோடு வெளியேறி, இராணுவத்தினரிடம் சரணடைந்த பொதுமக்கள், மனிக்பாம் முகாமில் முள்ளுக்கம்பி வேலிக்குள் பல மாதங்களாக அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அப்போது அவர்களின் அடிப்படை உரிமைகள் பல்வேறு வடிவங்களில் மீறப்பட்டன. மீள்குடியேற்றம் என்ற பெயரில் இப்போது கண்துடைப்பான வேலைத்திட்டங்களே நடைபெற்று வருகின்றன. போர்க்களப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி, அரசாங்கத்தின் பொறுப்பில் வந்தபின்னரும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை உரிய முறையில் அரசாங்கம் கவனிக்கவில்லை என்பது இத்தகைய யதார்த்த நிலைமைகளின் மூலம் உலகமறிந்த இரகசியமாக இருக்கின்றது.

மோசமான ஒரு யுத்தத்தின் முடிவில் பாதிக்கப்பட்ட மக்களை ஏனையவர்களுடன் இணைந்து வாழச் செய்வதற்காக இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டியதும் போர்க்காயங்களினால் மனவடுக்களைக் கொண்டுள்ள அவர்களின் மனங்களை ஆறுதல் படுத்துவதும், போரின் பின்னர் எடுக்கப்பட வேண்டிய அதிமுக்கியமான அத்தியாவசிய நடவடிக்கைகளாகும். இலங்கையைப் பொறுத்தமட்டில், நடைபெற்று முடிந்த யுத்தமானது, அராங்கத்தின் அடக்குமுறைக்கு உள்ளாகிய ஓர் இனத்தொகுதியின் உரிமைப் போராட்டத்தின் ஒரு கட்டமாகும். அந்த விடுதலைப் பேராட்டமானது வெறும் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்பட்டு, உரிமைப் பேராட்டம் நடத்தியவர்களைப் பயங்கரவாதிகளாகவும், வெறும் கிரிமினல்களாகவும் வெளிக்காட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், போராட்டம் நடத்தியர்களின் பின்னால் நின்றவர்களும், போராட்டம் நடத்தியவர்கள் தமக்கான தளமாமாகப் பயன்படுத்திய மக்கள் கூட்டத்தையும், இன்னும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையிலேயே அரசாங்கம் இருக்கின்றது. அத்துடன் அந்த சந்தேகத்திற்கு உள்ளானவர்களைக் காரணமின்றி தண்டிக்கின்ற போக்கும் அரசாங்கத்திடம் காணப்படுகின்றது.

இது யுத்தச் சூழலில் சிக்கி மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களை இயல்பு வாழ்க்கைக்குள் அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளுக்கு நேர்மாறானவையாக இருக்கின்து. பயங்கரவாதத்தை முறியடித்து, பயங்கரவாதத்தினுள் சிக்கியிருந்தவர்களை மனிதாபிமான அடிப்படையில் மீட்டெடுத்ததாகக் கூறுகின்ற ஓர் அரசாங்கத்தின் பொறுப்பான செயற்பாடுகளுக்கு நேர் விரோதமாக இருக்கின்றது.

அரசியல் உரிமைகளுக்காகப் பேராராடியவர்களைக் குற்றவாளிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் சித்தரித்துக் கொண்டு அவர்கள் ஒரு கொடியின் கீழ் ஓர் ஒற்றையாட்சியின் கீழ் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அல்லது அத்தகைய ஒரு தெரிவு மாத்திரமே உங்களுக்கு இருக்கின்றது என்ற செய்தியை பல்வேறு செயற்பாட்டு வடிவங்களின் ஊடாக அரசாங்கம் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது.

இந்த நிலையில் நாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு நல்லிணக்கத்திற் வருவார்கள் என்று எதிர்பார்க்கவே முடியாது. ஆனாலும், இலங்கை அரசாங்கம் அந்த எதிர்பார்ப்பிலேயே காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கின்றது.

இலங்கையில் போரின் பின்னர் நிலவுகின்ற இந்த அடிப்படைச் சூழலை பல நாடுகள் புரிந்து கொண்டிருக்கின்றன. இருப்பினும் பூலோக அரசியல் சூழ்நிலைகள், பிராந்திய அரசியல் போக்குகள் போன்ற புறக்காரணிகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுத் தரத்தக்க அரசியல் நடவடிக்கைகளை முழுமையாகவும் வெளிப்படையாகவும் செய்ய முடியாத கையறு நிலைமைக்கு அந்த நாடுகள் தள்ளப்பட்டிருக்கின்றன. இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் ஒரு மனிதனுக்கு, ஓர் இனத்திற்கு அல்லது ஓர் சமூகத்திற்கு ஏற்படக்கூடாத மிக மோசமான நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது.

போராடவும் வழியில்லை. போராட்டத்திற்கு ஆதரவுமில்லை. ஆனால் அநியாயங்களும் அடக்குமுறைகளும் தொடர்கின்றன. இந்த நிலையில் போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை.

அரசாங்கம் போரின் மூலம் கிடைத்துள்ள வெற்றியை ஒரு பெரிய வெற்றியாக உலகத்திலேயே ஏற்படுத்தப்பட்ட ஓர் இமாலய சாதனையாகக் கருதுகின்றது. அத்துடன் அந்த இமாலய சாதனையை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த சாதனையைப் புரிந்த அரசாங்கம் அந்த வெற்றியின் பின்னணியில் செய்கின்ற அனைத்து காரியங்களும் நியாயமானவையே

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அன்பின் ரசாயனம்



## சத்குரு வாசுதேவ்

உங்கள் வாழ்வில் எதையெல்லாம் கடந்து வருகிறீர்களோ, அவை அனைத்துக்குமே ஒரு ரசாயனம் உண்டு. நீங்கள் ஆனந்தமாக இருக்கிறீர்களென்றால், உங்களுக்குள் ரசாயனம் ஒருவிதமாக செயல்படுகிறது. சோகமாக இருக்கிறீர்களென்றால் ரசாயனம் வேறுவிதமாக செயல்படுகிறது. பதட்டம், அமைதி, அன்பு என்று நீங்கள் எந்த மனநிலையில் இருந்தாலும் உங்கள் உள்நிலையில் அந்த உணர்வுகளுக்கேற்ற ரசாயனம் செயல்படுகிறது.

ஏனென்றால், நீங்கள் தாண்டிச் செல்லும் அனுபவங்களுக்குத் தகுந்தவாறு உங்கள் உள்நிலையில் ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. போதை மருந்துகள் உற்பத்தி செய்யப்படுவதே இந்த அடிப்படையில்தான். போதை மருந்து உட்கொள்கிறவர் ஆனந்தமாகவோ, அன்பாகவோ உணர்கிறார். உளவியல் சார்ந்த சிகிச்சைகளில் கூட இந்த ரசாயனம்தான் கையாளப்படுகிறது. ஒருவர் பதட்டமாக உணர்கிறார் என்றால், அவருக்குத் தரப்படும் மருந்து ஒருவகை ரசாயன மாற்றத்தை நிகழ்த்தி அவரை தூங்கச் செய்கிறது. அவரும் அமைதியாகத் தூங்குகிறார். நீங்கள் எந்த மருந்தை உட்கொண்டாலும் அதன் வழியாக உங்கள் ரசாயனத் தன்மை செயல்படுகிறது. ஒன்று, உங்கள் அனுபவம் உங்களுக்குள் ரசாயன மாற்றத்தை நிகழ்த்துகிறது அல்லது உங்களில் நிகழும் ரசாயன மாற்றம் ஓர் அனுபவத்தை ஏற்படுத்துகிறது. உண்மையில் இவையிரண்டும் வெவ்வேறான விடயங்கள் அல்ல. இரண்டும் உண்மைதான்.

நீங்கள் உணர்ச்சி வசப்படும்போது, உங்கள் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இருதயம் வேகமாகத் துடிக்கிறது. இது ஒருவகை. அதே போல, உங்கள் இருதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கினால் தேவையில்லாமல் நீங்கள் உணர்ச்சி வயப்படுவீர்கள். எனவே, என்ன அனுபவம் நேர்ந்தாலும், அதன் விளைவாக ஒரு ரசாயனம் ஏற்படுவதும், ரசாயன அளவில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டாலும் அதன் விளைவாக ஓர் அனுபவம் நிகழ்வதும் இயற்கை. அப்படியானால் ரசாயன அடிப்படையில் அன்பை உருவாக்க முடியுமா என்று நீங்கள் கேட்கலாம்.

ஆன்மீக சாதனைகள் அதைத்தான் செய்கின்றது. பக்தி யோகத்திற்கும், ஹடயோகம், க்ரிய யோகம் போன்றவற்றுக்கும் உள்ள வேறுபாடே அதுதான். க்ரிய யோகம், ஹடயோகம் போன்றவற்றில், உங்கள் உள்நிலை ரசாயனத்தில் சில மாற்றங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் உங்கள் தன்மையில் மாற்றங்களை நிகழ்த்த முற்படுகிறீர்கள். ஆனால், பக்தி யோகத்திலோ உங்கள் தன்மையை மாற்றுவதன் மூலம் உள்நிலையில் ரசாயன மாற்றங்களை ஏற்படுத்த முற்படுகிறீர்கள்.

க்ரியா யோகம், உங்கள் உள்நிலை சக்திகளில் மாற்றம் கொண்டு வந்து அதன் மூலம் ரசாயன மாற்றத்தை ஏற்படுத்தி, அதன் விளைவாக உங்கள் உள்நிலை அனுபவங்களில் மாற்றம் கொண்டு வருகிறது. பக்தி யோகத்திலோ, அன்பு மயமாக ஆவதன் மூலம் உங்கள் உள்நிலை ரசாயனமே ஒருநாள் அன்புமயமாய் மலர்கிறது.

சரியான ரசாயன மாற்றம் நிகழாத வரையில், ஏதோவொன்றாக மாறவேண்டும் என்ற உங்கள் முயற்சிகள் எந்தப் பலனையும் தராது. “அமைதியாக இருக்க வேண்டும்” என்று உங்களுக்குள் ஆசை எவ்வளவுதான் ஆழமாக வேர்விட்டாலும், உங்கள் உள்நிலை ரசாயனம் பதட்டமாக மட்டுமே இருக்குமென்றால், உங்களுக்குள் அமைதி ஏற்பட வழியில்லை. மாறாக, பிராணாயமம், ஆசனங்கள், தியானம் போன்றவற்றை மேற்கொள்வதால் உங்கள் உள்நிலை ரசாயனத்தின் தன்மையே மாறுகிறது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org

இப்போது, நீங்கள் அமைதியாக இருக்க முயலப்போவதில்லை. வெளிச்சூழல் எவ்வளவு பதட்டமாக இருந்தாலும் உங்கள் உள்நிலையின் தன்மையே அமைதியாக மாறிவிடுகிறது. எனவே அமைதி உங்கள் இயல்பாகவே ஆகிறது. உங்கள் ஆன்மீகப் பயிற்சிகள் வழியே உங்கள் உள்தன்மையில் ரசாயன மாற்றங்களை நிகழ்த்தி அமைதி, ஆனந்தம் ஆகியவற்றை உங்கள் இயல்பாக ஆக்கிக் கொள்ளலாம். அல்லது கடவுள் மீதோ, குருவின் மீதோ அல்லது யார் மீதோ உங்களுக்கிருக்கும் அளப்பரிய அன்பைக் கொண்டு உங்கள் உள்நிலை ரசாயனத்தையே மாற்றலாம். இவை இரண்டுமே சாத்தியம்.

உயிரியல் வல்லுநர்கள் ரசாயனம் பற்றியும், காதல் பற்றியும் பேசுவது முற்றிலும் வேறொரு தளத்தைச் சார்ந்தது. இயற்கையில் நிகழும் எல்லாமே இனப்பெருக்கத்தை நோக்கித்தான் நிகழ்கிறது. பூக்கள் மலர்வது உங்கள் மேல் உள்ள காதலால் என்று நீங்கள் நினைக்கலாம். உங்கள் கவிஞர்களுக்கும் அதையே சொல்லலாம். ஆனால் பூக்கள் மலர்வதெல்லாம் மகரந்தச் சேர்க்கைக்காகத்தான். அதன் மூலம் புதிய விதை கிடைக்கும். புதிய செடி முளைக்கும். மற்றபடி, மலரும் வண்ணங்களால் உங்களை மகிழ்விக்கவோ, காற்றில் நறுமணங்களை ஏற்றவோ, உங்கள் கூந்தலுக்கு அழகு சேர்க்கவோ பூக்கள் மலர்வதில்லை. அவை நறுமணம் பரப்புவது வண்டுகளை ஈர்த்து மகரந்தச் சேர்க்கை நிகழச் செய்வதற்குத்தான்.

அன்பு, காதல் ஆகியவற்றின் அடிப்படையான நோக்கங்களில் ஒன்றாக இனப்பெருக்கம்தான் இருக்கிறது. ஆணும், பெண்ணும்தான் அன்பு வயப்பட முடியும் என்பது துரதிருஷ்டமானது. எதனோடும் யாரோடும் அன்பு வயப்பட முடியுமென்றால் அது மிக அற்புதமானது. மனிதர்கள் இனப்பெருக்கம் சார்ந்த மன உந்துதலுக்கு மட்டுமே அடிமையாக உள்ளனர். அன்பு இன்னும் நிகழ்ந்தபாடில்லை.

எனவே இனப்பெருக்கம் சார்ந்த உந்துசக்திக்கு நீங்கள் தந்திருக்கும் நாகரிகமான பெயர்தான் காதல். இது இயற்கையின் தந்திரங்களில் ஒன்று. உடலியல் வல்லுனர்கள் காதல் பற்றிப் பேசக்கூடாது. ஆன்மீகத்தில் பேசப்படுகிற அன்பு, உள்நிலையில் அன்பை உணரச் செய்வது பற்றியது. அங்கே உடலின் தேவை மிகக் குறைவாகவே உள்ளது. ஒரு மனிதனுக்குள் பக்தி மலர்கிறபோது, உடல் அவனுக்கொரு பொருட்டேயில்லை. உடலை உதறிச் செல்லத் தயாராகிறான்.

இனப்பெருக்கம் சார்ந்த ஈடுபாடுகளுக்குத்தான் மாயை என்று பெயர். தனக்காக இயக்குமுறையை அது தானாகவே உருவாக்கிக் கொண்டுள்ளது. இதற்குக் கடவுளின் தலையீடு கூடத் தேவையில்லை. இதுதான் படைப்பின் அழகு. எல்லாம் தானாக இயங்குகிறது. படைத்தவர் கூடத் தேவையில்லை என்றால் அதுதான் படைத்தவரின் தன்மையை உணர்த்துகிறது.

எனவே உடலியல் சார்ந்த அன்பு, அன்பின் ஒரு பகுதி மட்டுமே. நாம் ஆன்மீக அடிப்படையில் குறிக்கிற அன்பு, உங்களை விடுவிக்குமே தவிர அடிமைப்படுத்தாது. மரங்களுக்குத் தென்றல் மீதும், தென்றலுக்கு மரங்கள் மீதும் காதல் என்று சொல்வது கவித்துவமாக வேண்டுமானால் இருக்குமே தவிர, அது உண்மையல்ல. மாயை சக்கரத்தின் அச்சாணியை அகற்றும் போது மாயையின் சுழற்சி மெல்ல மெல்ல அடங்குகிறது.

பிரம்மச்சரியம் என்பதே இந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முயற்சிதான். தீவிரமான சாதனைகளில் ஆத்ம சாதகர் ஈடுபடும்போது உடலும், அதன் இச்சைகளும் அர்த்தமற்றுப் போகின்றன. இனப்பெருக்கம் முக்கியமென்று படுகிற போதுதான் இந்த உடலும் முக்கியமென்று கருதப்படுகிறது. ஒரு பலூனை வெடிக்கச் செய்ய வேண்டுமென்றால் நூறு ஓட்டைகள் போட வேண்டிய அவசியமில்லை. ஒரேயொரு இடத்தில் ஓட்டை போட்டால் போதும். பிரம்மச்சர்யம், சந்நியாசம் ஆகியவற்றின் அம்சங்களும் இதுதான். இந்த அடிப்படை அகற்றப்படும்போது மாயை தானாகவே தகர்ந்து போகிறது. அந்த அடிப்படை அகற்றப்படவில்லையென்றால் மாயையின் சுழற்சி தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

எனவே அன்பு உடல் சார்ந்ததல்ல. உடல் சார்ந்த ஒன்றுக்கு காமம் என்கிற பெயரை நேரடியாகக் கொடுத்து விடலாம். உடல் என்கிற எல்லையைக் கடந்ததுதான் அன்பு. உள்நிலை ரசாயனத்தை மாற்றுவதன் மூலம் இந்த அனுபவத்தை நீங்கள் அடைய முடியும். அல்லது ஓர் அனுபவத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்த உள்நிலை ரசாயனத்தை உருவாக்க முடியும்.

இதில் கூட நீங்கள் தியானத்தன்மையுடனும், அமைதியுடனும் இருப்பதற்கு சில சுரப்பிகளின் பங்கும் உண்டு. சிவனுக்கு மூன்று கண்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆதிகாலத்தில் சில பல்லிகளுக்கும், சில விலங்குகளுக்கும் மூன்று கண்கள் இருந்ததாகவும், பரிமாண வளர்ச்சியில் அவை மறைந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்த சுரப்பிகள் உங்கள் உள்தன்மை, உணர்வுகள் ஆகியவற்றை நிர்ணயிக்கின்றன. தியான நிலையில் இருக்கும் பலர் இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

யோகாவில் குறிப்பிட்ட நிலையை எட்டும்போது தலைக்குள் ஒருவிதமான தேன் சுரக்கும். அது உள்நாவில் இனிமை பரவச் செய்யும். பிராணாயாமம், க்ரியா போன்ற நிலைகளில் இந்த இனிமை பரவத் தொடங்கிய பிறகு உணவு, தண்ணீர், உடல் சார்ந்த வசதிகள் போன்றவற்றின் தேவையே தோன்றாத வண்ணம் அவை அனைத்தும் ஈடுசெய்யப்படும். இதைத்தான் “அம்ருதம்“ என்று அழைத்தார்கள். இதன்பின் அந்த மனிதர் புதிய பரிமாணத்தை அடைகிறார். உடலுக்குள் இருந்தாலும் உடல் சார்ந்த எல்லைகள் அவருக்கில்லை. ஆனால் இதை நோக்கமாக வைத்துக் கொண்டு ஆன்மீக சாதனையில் ஈடுபடக் கூடாது.

யோகத்தின் எட்டு அம்சங்கள் அடங்கிய ஈஷா யோகாவில் இயல்பான வளர்ச்சிக்கு எல்லா வாய்ப்புகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. அன்பு, ஆன்மீக சாதனை இரண்டுமே இதில் நிகழ்கிறது. ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இந்த அம்சங்கள் அனைத்துமே உள்ளன.

இவற்றை கலந்து ஒருமுறையாகத் தருவதன் மூலம் சீரான உள்நிலை வளர்ச்சி ஏற்படுகிறது. வளர்ச்சி சீராக இருக்கும்போது விழுவதற்கான வாய்ப்பு இல்லை. மிக வேகமாக வளர்ந்து நீங்கள் லிங்கத்தின் உச்சியில் கூட போய் அமரக்கூடும். அங்கே உங்களைத் தக்கவைத்துக் கொள்ளத் தெரியாமல் விழுந்து விடவும் கூடும். பல ஆத்ம சாதகர்கள் தடுமாறுவதும் தவறிவிழுவதும் தக்கவைத்துக் கொள்ளத் தெரியாததால்தான். எனவே படிப்படியாக வளர்வது மிகவும் நல்லது.

மனித வளர்ச்சிப் பாதையில் அன்பு மிகவும் முக்கியமான கோட்பாடு.

கீழே விழுந்தாலும் அன்பு உங்களைத் தாங்கிப் பிடிக்கும். அன்பு இல்லாத நிலையில் நீங்கள் விழ நேர்ந்தால் அடி பலமாக இருக்கும்!

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா

**வெளிக்கள விருந்துடன்**
**வருடாந்தப் போட்டிகளின் பரிசளிப்பும்**
**விளையாட்டுப் போட்டிகளும்**

*எமது சங்கத்தின் வருடாந்த “வெளிக்கள விருந்துடன் விளையாட்டுப்போட்டிகளும் - பரிசளிப்பு நிகழ்வும்” **August** மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வுக்கு எமது பழைய மாணவர்களும் அவர்களின் வாரிசுகளுக்கும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.*

***Kidstown (L' Amoreaux Park)***
***3159 Birchmount Road, Scarborough , (Mcnicoll Ave & Birchmount Rd)***
*மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.*
***(647) 700-7882 (416) 318-6195 (416) 431-1060 (416) 296-7037***
ரிக்கற்றுக்களை யோகாஸ் சுப்பர் மார்கற்றிலும், ***BreadMaster*** பேக்கறியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# வாழத் துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட் பாகம் 5

மடு பிரதேசத்தை நோக்கி நாடாளுமன்றக் குழு புறப்பட்டபோதிலும், மன்னார் மாவட்டத்தில் பெரிதாகப் பாதிப்பு நிகழ வில்லைதானே, வேறு எங்காவது போகலாம் என்பது தலைவர் சம்பந்தனின் கருத்தாக இருந்தது. மன்னார் மாவட்டமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் வேறு விதமானவை அங்கு சென்று அவற்றைப் பார்வையிட வேண்டும். அங்கு மக்களைச் சந்தித்து விபரங்களைக் கேட்டறிய வேண்டும் என்பது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிலைப்பாடாக இருந்தது.

**- செல்வரட்ணம் சிறிதரன் -**

உண்மையிலேயே மன்னார் மாவட்டத்தின் நிலைமைகள் என்ன? மடுக்கோவில், பெரிய பண்டிவிரிச்சான், பாலம்பிட்டி, தட்சணாமருதமடு, ஈச்சலவக்கை, விடத்தல்தீவு ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று அந்த நிலைமை-களை நேரில் கண்டறிந்தார்கள். "சரியான இடங்களுக்குத்தான் வந்துள்ளோம். இங்கு வராதிருந்தால் இந்த நிலைமைகளைப் பற்றி அறிந்திருக்க முடியாது" மன்னார் விஜயம் பற்றி, அந்த விஜயத்தின்போது குறிப்பிட்ட தலைவர் சம்பந்தன், "வன்னி நிலைமைகள் பற்றி நாங்கள் நிறையவே அறிந்திருக்கிறோம். ஆனால் அங்குள்ள பிரச்சினைகளின் தன்மை, அவற்றின் தாக்கம், மக்கள் அதனால் அடைந்துள்ள மனக்கஸ்டங்கள், வாழ்க்கைத் துயரங்கள் என்பவற்றின் ஆழமான – யதார்த்த நிலைமைகளை அங்கு சென்று நேரடியாகப் பார்த்து மக்களுடன் உரையாடிய பின்னர்தான் தெரிகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் இவ்வாறான கள விஜயம் மிகவும் முக்கியம் என்பதை வன்னி விஜயம் தெளிவாக உணர்த்தியுள்ளது" என மன நெகிழ்வோடு கூறினார்.

கண்டியில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் ஏ9 வீதியின் மதவாச்சி சந்தியில் இருந்து தலைமன்னாருக்கான வீதி பிரி கின்றது. மன்னார் மாவட்டத்திற்கான இந்த வீதி மிகவும் பிரசித்தமானது. இதனைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இது மீண்டும் சர்வதேச தொடர்புள்ள வீதியாகப் போகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுமானால், இந்தியாவுக்கு வருகின்ற உலக உல்லாசப் பயணிகள் இலங்கைக்கும் வருவார்கள். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான வர்த்தக, சமூக, கலாசாரத் தொடர்புகள் மேலும் இறுக்கமாகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல்சேவை நடைபெற்றபோது, இந்தியாவுக்குச் செல்கின்ற பயணிகள் தமது உள்ளூர் ரயில் நிலையங்களில் இருந்து இந்தியாவின் எந்த ஓர் ஊருக்கும் ரயிலிலேயே செல்வதற்கும் நேரடி ரயில் டிக்கட்டுக்களைப் பெற்றுப் பிரயாணம் செய்யக் கூடியதாக இருந்தது என்றும் அவர்கள் நினைவூட்டினர்.

மதவாச்சி – மன்னார் வீதியில் பறையன-ாலங்குளம் சந்தி முக்கிய சந்தியாகும். வவுனியவில் இருந்து மன்னார் செல்கின்ற பிர-தான வீதி இங்குதான் வந்து மதவாச்சி வீதியில் இணைகின்றது. இங்கு ஒரு வீதிச்சோதனை நிலையம். அதனைக் கடந்து சில கிலோ மீற்றர் தொலைவில் மடு றோட் சந்தி அமைந்துள்ளது. மடுக்கோவிலுக்கும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கும் செல்கின்றவர்கள் இங்குள்ள முக்கிய இராணுவ பொலிஸ் சோதனை நிலையத்தில் பதிந்து அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும்.

மடுக்கோவிலுக்குச் செல்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களது மெய்க்காவலர்கள் ஆயுதங்களைக் கொண்டு செல்ல முடியாது. அதிலும் குறிப்பாக பெரிய பண்டிவிரிச்சான், தட்சணாமருதமடு போன்ற மீள்குடியேற்றக் கிராமங்களுக்குச் செல்பவர்களும், பாதுகாப்பு காரணங்களுக்கான இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

இப்படியும், இங்கு ஒரு நடைமுறையா என மடு பிரதேசத்திற்கு முதற்தடவையாக விஜயம் செய்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், மெய்க்காவலர்களும் வியந்தார்கள். மடுக்கோவிலுக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்ல முடியாது என்பது சரிதான். ஆனால் ஏனைய பிரதேசங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லும்போது, அவர்களது பாதுகாப்புக்காக மெய்க்காவலர்கள் ஆயுதங்களுடன் செல்லத்தானே வேண்டும். இங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகின்றதா, அல்லது அவர்களது பாதுகாப்புக்காக மெய்க்காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுதங்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகிறதா என கேள்வியெழுப்பி சிலர் சிரித்தார்கள்.

பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மடுக்கோவிலுக்கும் அந்தப் பிரதேசத்தில் உள்ள பல மீள்குடியேற்ற கிராமங்களுக்கும் செல்கையில் அவர்களது மெய்க்காவலர்களை ஆயுதங்களுடன் அந்தப் பகுதிக்கு அவர்களுடன் அனுப்புவதா இல்லையா என்ற சர்ச்சை இந்தச் சோதனைச்சாவடியில் எழுந்தது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்பிற்காக தாங்களும் செல்ல வேண்டியுள்ளது என மெய்க்காவலர்கள் வாதிட்டார்கள். ஆயுதங்களின் பாதுகாப்பு இங்கு முக்கியமல்ல. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பே முக்கியமானது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மடு றோட் சந்தியில் கடமையில் இருந்த படை யினர் இதனைத் தமது மேலிட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதையடுத்து. சிறிய தாமதத்தின் பின்னர் நாடாளுமன்ற குழுவினர் மெய்க்காவலர்களுடன் தொடர்ந்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

மடு றோட் சந்தியில் இருந்து மடுக்கோவிலுக்குச் செல்லும் வீதி அண்மையில்தான் புனரமைக்கப்பட்டுள்ளது. அந்தக் காப்பற் வீதி அகன்று மிக நேர்த்தியாக விரிந்திருந்தது. வீதியின் இருபக்கங்களிலும் அடர்ந்த காடு. அதனையடுத்து உடனடியாகவே மடுக்கோவிலின் 400 ஏக்கர் பரப்பிலான வளாகம் அமைந்திருக்கின்றது.

மடுக்கோவிலில் மடுபரிபாலகரும் ஏனைய அருட்தந்தையர்களும் நாடாளுமன்ற குழுவினரை வரவேற்று புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள மடுக்கோவிலைச் சுற்றிக் காட்டினார்கள். மடுமாதாவை வணங்கியதன் பின்னர் ஒரு சந்திப்பு. ஆலயத்தின் செயற்பாடுகள், ஆலயச் சூழலின் பாதுகாப்பு நிலைமைகள், ஆலயத்தைச் சூழ்ந்த கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் பொதுவான நிலைமைகள், அவர்களுக்கு ஆலயம் ஆற்றி வருகின்ற பணிகள் என்பன குறித்து அருட்தந்தையர்கள் கலந்துரையாடினார்கள்.

மடுமாதாவை வணங்குவதற்கும், அருட் தந்தையர்களிடம் வேறு தேவைகளுக்குமாகப் பலர் அங்கு வந்திருந்தார்கள். தென்பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்கள் சிலரும் மடுமாதாவைத் தரிசித்துக் கொண்டிருந்தார்கள்.

அடம்பன், ஆண்டான்குளம், ஆட்காட்டிவெளி, கறுக்காய்க்குளம், கருங்கண்டல், பரப்புக்கடந்தான், பாலையடிபுதுக்குளம், வட்டக்கண்டல் பாலைப்பெருமாள்கட்டு, சாளம்பன், காத்தான்குளம், பாப்பாமோட்டை போன்ற கிராமங்களைச் சேர்ந்தவர்களே வந்திருந்தார்கள். இவற்றில் பெரும்பாலானவை விவசாய கிராமங்கள். இந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான இளைஞர் யுவதிகள் தடுப்பில் இருக்கிறார்கள். பலரைக் காண வில்லை. தடுப்பில் உள்ளவர்களை விடுதலை செய்து தாருங்கள். காணமால் போயிருப்பவர்களைக் கண்டுபிடித்துத் தாருங்கள் என்று அந்தக் கிராமவாசிகள் நாடாளுமன்ற குழுவினரிடம் வேண்டிக்கொண்டார்கள்.

நடராசா அருளம்மா வட்டக்கண்டல் பாலைப்பெருமாள்கட்டு கிராமத்தைச் சேர்ந்தவர். அந்தக் கிராமத்தில் மாத்திரம் பத்துப்பேரைக் காணவில்லை. 25 பேர் தடுப்பில் இருப்பதாக நடராசா அருளம்மா கூறினார். அவருடைய மகனும் தடுப்பில் இருக்கின்றார்.
"மகனைப் பிடித்து கொண்டு போய் ஒரு வருடத்துக்கு மேலாகுது. ஒரு வருடத்தில் விடுவதாகச் சொன்னார்கள். விடுவார்கள் என நம்பிக்கையோடு இருந்தேன். இன்னும் விட வில்லை. பத்து நிமிடங்கள் மட்டும்தான் அவரைப் பார்க்கலாம். பேசலாம். பத்து



நிமிடத்தில் தடுப்பில் இருக்கிற பிள்ளையோடு என்ன பேச முடியும்? தடுப்பில் உள்ள பிள்ளைகளை விடுதலை செய்வதற்கு தாமதமாக, தாமதமாக எங்களுக்குப் பயமாக இருக்கு. எங்கள் பிள்ளைகளுக்குப் பொது மன்னிப்பு கொடுத்து விடுதலை செய்யச் சொல்லுங்கோ. எனக்கு முட்டு வருத்தம். அவருக்கு கால் ஏலாது. எங்களால் உழைக்க முடியாது. மகன் வந்து உழைத்து எங்களைப் பார்ப்பார். பராமரிப்பார். அவர் இல்லாமல் நாங்கள் என்ன செய்வது. அவரை எப்படியாவது விடுதலை செய்து தாருங்கோ" என அழுதழுது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அருளம்மா மன்றாடினார்.

ஆண்டான் குளம் - ஆட்காட்டிவெளி பங்குத் தந்தையான அருட்தந்தை ஜெயபாலனும் அந்த மக்களோடு நாடாளுமன்றக் குழுவினருடனான சந்திப்பில் கலந்து கொண்டார்.

"மீளக்குடியமர்ந்துள்ளவர்களுக்கு இந்தப் பகுதியில் விவசாயச் செய்கைக்கு அரசாங்கம் உதவி செய்துள்ளது. பங்கீட்டு அடிப்படையில் சிறிய அளவில் பலர் நெற்செய்கை செய்திருந்தார்கள். சிலருக்கு வெள்ளாமை அழிந்து விட்டது. அறுவடை முடிந்தது. ஆனால் பெரிய பலன் கிட்டவில்லை. அடுத்ததாக என்ன செய்வது என்பது அவர்களது முக்கிய பிரச்சி-னையாக இருக்கின்றது. 95 வீதமான வீடுகள் முழுமையாக அழிந்து போயுள்ளன. கூடாரங்களில்தான் மக்கள் வசிக்கின்றார்கள். வீடு கட்டவேண்டும். கையில் பணமில்லை. வருமானத்திற்கு வழியில்லை. இந்த நிலையில் என்ன செய்வது என தெரியாமல் இந்த மக்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களுக்கே வீடுகட்டுவதற்கு உதவி செய்யும் என சொல்லப்பட்டிருக்கிறது. யாருக்கு வீடுகட்ட உதவி கிடைக்கும். யார் யாருக்கு உதவி கிடைக்காமல் போகும் என்பது தெரியவில்லை. உதவி கிடைக்காதவர்களுடைய நிலைமை என்ன ஆகப்போகின்றது என்பதும் தெரியவில்லை. கூரை விரிப்புகள் பழுதடையத் தொடங்கி யிருக்கின்றன. இந்தக் கூடாரங்களில் தொடர்ந்து வசிக்க முடியாது. இந்த நிலையில் என்ன

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



# இந்தியாவை வீழ்த்தியது நியூசிலாந்து

## விளையாட்டுத் தகவல்கள் 288



ஸ்டைரிஸின் அதிரடி ஆட்டம் மற்றும் இந்தியாவின் மோசமான பேட்டிங்கால் முதல் லீக் போட்டியில் 200 ரன்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து வெற்றி பெற்றது. இந்தியா 88 ரன்கள் எடுத்தது.

• இந்தியா, நியூஸிலாந்து, இலங்கை அணிகள் பங்குபெறும் முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடர் இலங்கையின் தம்புலாவில் தொடங்கியது. முதல் ஆட்டத்தில் இந்தியா, நியூஸிலாந்து அணிகள் மோதின. டாஸ் வென்ற நியூஸிலாந்து முதலில் பேட்டிங் செய்ய தீர்மானித்தது. அந்த அணியின் இங்ராம், குப்தில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். ஜாகிர் கான், ஹர்பஜன் சிங் ஆகிய முன்னணி பந்து வீச்சாளர்கள் இன்றி களமிறங்கிய இந்தியாவுக்கு தொடக்கமே சிறப்பாக அமைந்தது. முதல் ஓவரை பிரவீண் குமார் வீசினார்.

• நியூஸிலாந்து அணி 15 ரன்கள் எடுத்த நிலையில் தனது முதல் விக்கெட்டை பறிகொடுத்தது. அந்த அணியின் குப்தில் 11 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரை அடுத்து இங்ராமும் 12 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். மறுமுனையில் கேப்டன் ராஸ் டெய்லர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்நிலையில் நியூஸிலாந்து அணிக்கு மேலும் ஒரு சோதனையாக, வில்லியம்ஸன் ரன் ஏதும் எடுக்காத நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் ஜோடி சேர்ந்த டெயலர், ஸ்டைரிஸ் ஆகியோர் அணியின் விக்கெட் வீழ்ச்சியைத் தடுக்கும் வகையில் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அனுபவ வீரர்களான ஸ்டைரிஸம், டெய்லரும் இணைந்து அணியின் ஸ்கோரை சீராக உயர்த்தினர். இந்த ஜோடியைப் பிரிக்க இந்தியா அணி மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. தொடக்கத்தில் நிதானமாக ஆடிய இருவரும், பின்னர் இந்திய பெ.ஃ.லர்களின் பந்துகளை எல்லைக் கோட்டுக்கு அப்பால் விரட்டினர். பிரவீண் குமார், நெஹ்ரா, மிதுன், ஓஜா, ஜடேஜா, யுவராஜ் சிங், சேவாக் என அனைத்து பெ.ஃ.லர், ஆல்ரவுண்டர்களும் பகீரத பிரயத்தனம் செய்தும் அந்த ஜோடியை எளிதில் பிரிக்க முடியவில்லை. 24.1-வது ஓவரில் சேவாக் வீசிய பந்தில் ஒரு ரன் எடுத்து அரை சதமடித்தார் டெய்லர். 65 பந்துகளைச் சந்தித்து அவர் அரை சதமடித்தார். அவரைத் தொடர்ந்து ஸ்டைரிஸம் அரை சதமடித்தார். 66 பந்துகளைச் சந்தித்து அரை சதம் கண்டார்.

• இந்திய பெ.ஃ.லர்களின் ஆக்ரோசமான பந்துகளை எளிதாக இரு பேட்ஸ்மேன்களும் பவுண்டரியும், சிக்ஸருமாக விளாசத் தொடங்கினர்.

தொடக்கத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய நியூஸிலாந்து அணி, இவ்விரு வீரர்களின் நிலையான ஆட்டத்தால் 35 ஓவர்களுக்கு 193 ரன்கள் குவித்தது. அணியின் ஸ்கோர் 218-ஆக இருந்த போது, ஸ்டைரிஸ் ஆட்டமிழந்தார். ஓஜாவின் பந்தில் க்ளீன் போல்டாகி வெளியேறினார். 95 பந்துகளை எதிர்கொண்ட ஸ்டைரிஸ், 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 89 ரன்கள் குவித்தார். இதை அடுத்து, ஜேகப் ஓரம் களமிறங்கினார். சிறப்பாக விளையாடி இந்திய பெ.ஃ.லர்களின் பந்துகளை சிதறடித்த டெய்லர் 95 ரன்கள் எடுத்த நிலையில், நெஹ்ரா பந்து வீச்சில் எல்பிடபிள்யூ-வாகி வெளியேறினார். அவரது இந்த ஸ்கோரில் 8 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும். டெய்லருக்கு அடுத்த களமிறங்கிய வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர். இந்த நிலையில் 48.5 ஓவரில் நியூஸிலாந்து அணி அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 288 ரன்கள் எடுத்தது.

• இந்திய தரப்பில் வேகப் பந்து வீச்சாளர் நெஹ்ரா சிறப்பாக பந்து வீசி 4 விக்கெட்டுகளை சாய்த்தார். 289 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியில், தினேஷ் கார்த்திக், சேவாக் தொடக்க வீரர்களாக களமிறங்கினார். அதிரடியாக ஆடி ரன் குவிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட சேவாக் 19 ரன்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து தினேஷ் கார்த்திக் 14 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். இவர்களுக்கு அடுத்து களமிறங்கிய முன்னணி பேட்ஸ்மேன்களும் ஓரிலக்க ரன்களிலேயே ஆட்டமிழந்தனர்.

• உலகிலேயே சிறந்த பேட்டிங் வரிசை கொண்ட அணி என்று பாராட்டப்படும் இந்தியா, 62 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. இந்நிலையில் ரவீந்திர ஜடேஜா 20 ரன்கள் எடுத்தார். இதுவே அணி வீரர் எடுத்த அதிகபட்ச ரன்னாக அமைந்தது. பெ.ஃ.லர்களும் ஓரிலக்க ரன்களிலேயே ஆட்டமிழந்து வெளியேறினர். ஆட்டத்தின் 29.3 ஓவரில் 4 ரன்கள் எடுத்திருந்த நிலையில் நெஹ்ரா ஆட்டமிழந்தார். அதனுடன் இந்தியாவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 30 ஓவர்கள் கூட முடியாத நிலையில் 88 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து படு தோல்வி அடைந்தது இந்தியா.

• நியூஸிலாந்து தரப்பில் ட.ஃ.பி 3 விக்கெட்டுகளும், மில்ஸ், ஓரம் தலா இரண்டு விக்கெட்டுகளும் வீழ்த்தினர். கேப்டன் டெய்லர் 4 கேட்சுகள் பிடித்தார். 95 ரன்கள் குவித்த அவருக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது.

### கடைசி டெஸ்டில் வெற்றி!: தொடரை சமன் செய்தது இந்தியா!

இலங்கையுடனான கடைசி டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது இந்தியா. இலங்கையுடன் 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் இந்தியா விளையாடியது. முதல் டெஸ்டில் இலங்கை அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. காலேயில் நடந்த 2 ஆவது டெஸ்ட் போட்டி டிரா ஆனது. இந்நிலையில், 3 ஆவது கடைசி டெஸ்ட் போட்டியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இலங்கையுடனான தொடரை சமன் செய்தது. இதன் மூலம் டெஸ்ட் போட்டி தர வரிசையில் நம்பர் ஒன் இடத்தை இந்திய அணி தக்க வைத்துக்கொண்டுள்ளது.

இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 258 ரன்கள் எடுத்து இலங்கையை வென்றது. கடைசி நாள் ஆட்டம் தொடங்கியதும் நைட் வாட்ச் மேன் இஷாந்த் சர்மா 4 ரன்களில் அவுட்டானார். சச்சினோடு விவிஎஸ் லஷ்மணன் ஜோடி சேர்ந்தார்.

நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் 54 ரன்கள் எடுத்து அவுட்டானதும் இந்தியாவின் வெற்றி சந்தேகத்திற்கு இடமானது. லஷ்மணனுடன் ஜோடி சேர்ந்த ரெய்னா, இந்தியாவின் வெற்றியை மீட்டெடுத்தார்.

லஷ்மணன் சதத்தைக் கடந்து 103 ரன்கள் எடுத்தார். சுரேஷ் ரெய்னா 41 ரன்கள் எடுத்திருந்தார். லஷ்மணனின் சதமும், ரெய்னாவின் பொறுப்பான ஆட்டமும் இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. இந்திய வீரர்கள் 5 பேரின் விக்கெட்டுகளையும் சுராஜ் ரண்டிவ் மட்டுமே சுரண்டி எடுத்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையில், இலங்கை அணியை இந்திய அணி டெஸ்ட் போட்டியில் தோற்கடிப்பது இது 4 ஆவது முறையாகும். போட்டி நடந்த சாரா ஓவல் மைதானத்தில் 1994 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் தோல்வியை இலங்கை அணி சந்தித்துள்ளது.

### உலகின் அதிவேக ஓட்டக்காரர் தோற்கடிப்பு!

உலகின் அதிவேக ஓட்டக்காரர் என்று பெயர் எடுத்த உசேன் போல்ட், டைசன் கே என்ற அமெரிக்கா வீரரால் தோற்கடிக்கப்பட்டார். ஸ்டாக்ஹோம் நகரில் IAAF டயமண்ட் லீக் சாம்பியன்ஷிப் போட்டியில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தின் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் உலகின் அதிவேக ஓட்டக்காரர் எனக் கருதப்படும் உசேன் போல்ட் கலந்துகொண்டார். மற்றொரு அதிவேக ஓட்டக்காரரான அமெரிக்காவின் டைசன் கே வும் களத்தில் இருந்தார்.

இந்தப் போட்டியின் முடிவில் 100 மீட்டர் தூரத்தை 9.84 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார் டைசன் கே. இரண்டாவதாக வந்த உசேன் போல்ட் அதே தூரத்தைக் கடக்க 9.97 விநாடிகள் எடுத்துக் கொண்டார்.

சர்வதேச சாம்பியன் மற்றும் ஒலிம்பிக் சாம்பியனான உசேன் போல்ட் இதுவரை நடந்து முடிந்துள்ள 15 இறுதிப் போட்டிகள் எதிலும் தோற்கடிக்கப்படாதவராகத் திகழ்ந்தார். இந்நிலையில் அவரை வெற்றி கண்ட டைசன் கே வெற்றி குறித்து கூறுகையில், "இதே தூரத்தை உசேன் போல்ட் 9.58 விநாடிகளில் கூட கடந்து சாதனை படைத்திருக்கிறார். அவர் சரியான உடல்திறத்துடன் இல்லை என நினைக்கிறேன். ஆயினும் இந்த வெற்றியை சந்தோஷமாக அனுபவிக்கிறேன். தொடக்கத்தில் இருவரும் சம இடத்தில் தான் இருந்தோம். என்ன மாயமோ 50 மீட்டருக்கு மேல் உசேன் என்னை விட சற்றே பின்தங்கியே காணப்பட்டார்'' என்று கூறியிருக்கிறார். உசேன் போல்ட் கூறுகையில், "என்னுடைய திறமையை நான் சரியாகத் தான் வெளிப்படுத்தினேன். ஆனால் இது என்னுடைய சாதனை ஓட்டமில்லை. முதல் 30 மீட்டருக்குப் பிறகு டைசன் கே நன்றாகச் செயல்பட்டார். அதனால் அவர் வென்றார். மேலும் பயிற்சிகள் செய்து சாதிப்பேன்'' என்றார்.

### பயிற்சியாளர் பணியை மரடோனா மீண்டும் ஏற்க வேண்டும் :மெஸ்சி

ஆர்ஜன்டீனா உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளர் பதவியை மரடோனா மீண்டும் ஏற்க வேண்டுமென எனலியோனஸ் மெஸ்சி தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்ட காலிறுதியில் ஆர்ஜன்டீனா அணி ஜேர்மனி யிடம் தோல்வியடைந்தது. இதையடுத்து மரடோனா - ஆர்ஜன்டீனா உதைபந்தாட்ட சங்கத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை அடுத்து இதனால் பயிற்சியாளர் பதவியிலிருந்து மாரடோனா நீக்கப்பட்டார். இது தொடர்பாக மெஸ்சி தெரிவித்ததாவது : பயிற்சியாளர் பதவியிலிருந்து மாரடோனா நீக்கப்பட்டதை நான் விரும்பவில்லை. அவர் பதவியில் தொடர வேண்டும் என எனலியோனஸ் மெஸ்சி தெரிவித்துள்ளார்

### தொடர்களில் இருந்து செரினா வில்லியம்ஸ் விலகல்

காயம் காரணமாக, உலகின் "நம்பர்-1" வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், அடுத்து நடக்கவுள்ள மூன்று முக்கிய டபிள்யு.டி.ஏ., தொடர்களில் இருந்து விலகியுள்ளார். அமெரிக்க டென்னிஸ் நட்சத்திரம் செரினா வில்லியம்ஸ், சமீபத்தில் நியூயார்க் நகரில் உள்ள உணவு விடுதிக்கு சென்றார். அப்போது இவரது வலது கால் பாதத்தில், உடைந்த கண்ணாடி துண்டு குத்தி காயம் ஏற்பட்டது. தற்போது காயத்திற்கு சிகிச்சை மேற்கொண்டு வருவதால் இஸ்தான்புல், சின்சினாட்டி, மான்ட்ரியல் நகரில் நடக்கவுள்ள மூன்று முக்கிய டபிள்யு.டி.ஏ., டென்னிஸ் தொடர்களில் பங்கேற்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

### 3 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார் பெடரர்

உலக தர வரிசையில் 6 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக சுவிட்சர்லாந்து வீரர் ரொஜர் பெடரர் 3 ஆவது இடத்துக்கு பின்தள்ளப் பட்டு உள்ளார். சுவிட்லாந்தை சேர்ந்த முன்னணி வீரர் ரொஜர் பெடரர், 2003 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆந் திகதிக்கு பிறகு உலக ஒற்றையர் தர வரிசையில் முதல் இரண்டு இடங்களுக்கு பின்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# வீட்டின் விலையில் இறக்கம்

அடமானக் கடன் வட்டிவீதம் சரித்திரத்தில் குறைவாக இருக்கின்ற போதிலும் ஆதனவியாபாரம் இறங்கிவருவதையும், மந்த நிலையை அடைவதையும் யூன், யூலை, மாதங்களில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

வளர்ச்சி பெற்றதனைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் விலையும் எதிர்பாராதளவிற்கு அதிகரித்தும் இருந்தது. இப்பொழுதுள்ள நிலையைப் பார்க்கும்போது வீட்டின் விலை உச்சத்தை அடைந்துள்ளது போலத்தெரிகின்றது. கடந்த 14 ஆண்டுகளாக வீடு/மனையின் விலை அதிகரித்தே வந்ததுள்ளது. (Graph ஐப் பார்க்கவும்)




அதிக வீடுகள் சந்தையில் இருந்தபோதிலும் போதியளவு வாங்குனர்களை சந்தையில் காணமுடியாமல் உள்ளது. கனடாவில் வீடு/மனை வியாபாரத்தை கணக்கில் வைத்திருக்கும் சம்மேளனம் **(Canadian Real Estate Association)** இந்த வருடத்தின் மிகுதிக்காலத்தின் ஆதன விற்பனை மந்த நிலையிலேயே இருக்கும் என எதிர்வு கூறியுள்ளது. அடுத்த வருடத்திலும் (2011) இந்நிலைமை தொடரலாம் எனவும் கோடிட்டுள்ளது.

கனடாவின் பொருளாதாரம் இறுக்கத்தில் இருந்தபோதும் வீடு/மனை வியாபாரம் வளர்ச்சி பெற்றதனைக் காணக்கூடியதாக இருந்தது.

வன்கூவரிலும் அல்பேட்டாவிலும் கடந்த யூலையுடன் ஒப்பிடும்போது விற்பனையில் முறையே 45%உம், 42%ம் இறக்கம் ஏற்பட்டுள்ளது. இத்துடன் ரொறொன்ரோவில் புதிதாக நிர்மாணம் செய்யப்படும் அடுக்குமாடிக் கொண்டோமனைகளிலும் இறக்கம் ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த வட்டிவீதமான சூழலில் இருக்கும் போதே வியாபாரம் மந்த நிலையில் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் மத்தியவங்கி வட்டிவீதத்தை அதிகரிக்க கூடிய நிலையில் இருப்பதாக பயமுறுத்தியுள்ளது. இந்நிலைமை வியாபாரத்தில் மேலதிக இறக்கத்தையும் ஏற்படுத்தலாம் என்ற ஐயமும் தோன்றுகின்றது.

இருந்தபோதிலும், நிதி நிறுவனங்களின் போட்டா போட்டியாய் மத்தியவங்கியின் வட்டிவீதத்தை அதிகரித்தாலும் அடமானக்கடனின் வட்டிவீதம் (Mortgage Rate) உடனடியாக அதிகரிக்கும் என்று கூறமுடியாது. எடுத்துக்காட்டாக ஓகஸ்ட் இன் முதற்கிழமையில் 5 வருட முடிய அடமானக் கடன் (Colsed Mortgage) குறைந்துள்ளது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 325**

HomeLife GTA Realty Inc., Brokerage
HOMELIFE HIGHER STANDARDS
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"
1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng (Broker/Owner)

BUSINESS FOR SALE $59,000


HWY 401 & WESNEY - AJAX
Best location. Over $7,000 weekly sales + 2000 loto commision.
Very reasonable rent.
DON'T MISS THIS CHANCE

HOUSE FOR SALE AURORA 649,000

BAYVIEW & SPRINGFARM
4 Bedrooms,Walkout bsmt
5 Washrooms, double garage
Ceramic floor, Hardwood floor
Stove, dishwasher,exhaust fan,
All included

HOUSE FOR SALE $639,000

Spadina Ave/Lake Shore Blvd W
Brand New- Commercial/Residential Townhouse On 2 Levels.
Please Call For More Information.
Buyer To Verify Taxes, Maintenance & Measurements.

SPACE FOR RENT

MIDDLEFIELD & FINCH
Second Floor Unit In Gta Square Shopping Mall. Conveniet Location.
High Traffic Area & Underground Parking Available.

LEASE $ 1,700

Stevenson/Adelaide
Various Types Of Retail Use Allowed.
Established As Variety/ Convenience Store With 2 Piece Washrooms.
Very Reasonable Rent That Includes Realty Taxes.

CONDO FOR SALE $107,900

SHEPPARED & NEILSON
2 B.rooms, 2 Washrooms.
Why Rent If You Can Own For Less Mone
Close to TTC, mall, library, hwy 401.
Stove, Fridge, B/I Dishwasher, Parking, Locker

HOUSE FOR SALE $539,900
SELAM/TAUNTON ROSSLAND
Medallianbuilder Brick detached. 3626 Sq.feet.
5Years new. 4 Washrooms, laundry, kitchen, library doublegarage 2door.

CONDO FOR SALE $139,000

FINCH & WARDEN
2+1 Bedroom, 2 washrooms.
Close To Bridlewood Mall, TTC.
Fridge, Stove, Washer, Dryer,
All Elfs, Parking.
SOLD

HOUSE FOR SALE $565,000

BUR OAK & 9TH LINE
Popular 4 Br + Den, Madison Home In Greensborough Area, 2709 Sq Ft.
2nd Floor Den, Master Bedroom,
Convenient Location. Fridge, Stove, Washer, Dryer, Built-In Dishwasher, Cac, Cvac, Garag

STORE FOR SALE 64,900 + STOCK

HIGHWAY 401 & WESTNEY
Con/ Store In Good Area Of Ajax.
Lotto Commission And Atm Commission
Over $2000/Month. Steady Custumer Traffic.
All Chattels And Equipment As Is.

Independently Owned & Operated

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# பயங்கரவாதத்திற்கு...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றும் அவற்றை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றது. இந்த எதிர்பார்ப்பை நிதர்சனமாக நடைமுறைப்படுத்துவதற்கும் அது பல வழிகளில் முயற்சி செய்கின்றது. சுயநல நோக்கம் கொண்ட இந்தப் போக்கை உலக நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அது எதிர்பார்க்கின்றது. அதற்காக யாரையும் திட்டுவதற்கோ, அல்லது அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ அரசாங்கம் எந்த ஒரு கட்டத்திலும் தயக்கம் காட்டியதில்லை. அந்தப் போக்கிலேயே தொடர்ந்து செல்கின்றது.

அரசாங்கம் செய்கின்ற அனைத்து காரியங்களும் சரியானவையே என்று அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் நிலைப்பாடு. எதிர்க்கட்சிகள் எந்தக் காரணத்தைக்கொண்டும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது. மனித உரிமை அமைப்புக்களோ அல்லது நியாயத்திற்காகக் குரல் எழுப்புபவர்களோ வாயைத் திறக்கக் கூடாது. அவ்வாறு வாய் திறப்பவர்கள், எதிர்த்து நடப்பவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளுக்கு – விடுதலைப்புலிகளுக்கு உதவுபவர்கள் அல்லது அவர்களுக்கு உயிர்கொடுக்க முயற்சிக்கின்றவர்கள் என்று வாய் கூசாமல் குற்றம் சாட்டுகின்ற ஒரு போக்கில் அரசாங்கம் சென்று கொண்டிருக்கின்றது.

யுத்த குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்காக ஐநாவினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவின் நியமனத்தை அரசாங்கம் எதிர்த்து, ஐநா மன்றைத்தைச் சாடி வருவதும் இந்தப் போக்கின் ஓர் அம்சமே. இது மட்டுமல்ல. எந்த ஒரு நாடும் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அந்த நாடுகள் அழிக்கப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான நாடுகள், அல்லது பயங்கரவாதத்திற்குத் துணைபோகின்ற நாடுகள் என நா கூசாமல் அவதூறுகளை அள்ளி வீசுகின்றது.

வோய்ஸ் ஒவ் ஏசிய எனப்படும் வெற்றி எவ்.எம் வானொலி நிலையத் தொகுதியின் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல் மற்றும் இதற்கு முன்னதாக ஊடகங்களின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகள் அடாவடித்தனங்கள், தாக்குதல்கள் என்பனவும் அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றன.



அது மட்டுமல்லமால் மீளகுடியேற்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் இராணுவத்தினரைப் பிரிக்க முடியாத அம்சமாகச் சேர்த்திருப்பதும், அதற்காக இராணுவ தளங்களையும், முகாம்களையும் அனைத்து வசதிகளுடன் கூடிய வகையில் போர் முடிவுற்ற பிரதேசங்களில் அமைத்து வருவதும், அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றன.

மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்களின் நலன்களில் அதீத அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்கின்ற அரசாங்கம், மீள்குடியேற்றப் பகுதிகளில் உள்ள உட் கட்டமைப்புச் செயற்பாடுகளில் மட்டுமே கவனம் செலுத்தி வருகின்றது. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி, அந்தப் பகுதியின் சமூக, பொருளாதார, சூழல் அபிவிருத்திக்கோ, அல்லது அந்த இனத்தின் கலாசாரப் பண்பாட்டு வளர்ச்சிக்கோ அவசியமான செயற்பாடுகளை, அபிவிருத்தி நடவடிக்கைகளை அது புறந்தள்ளியே வருகின்றது.

இதற்காகவே, மீள்குடியேற்றப் பகுதிகளில் தொண்டு நிறுவனங்கள் செயற்படுவதையோ, அல்லது ஊடகங்கள் சுதந்திரமாக அங்கு சென்று நிலைமைகளை நேரில் பார்த்து சுதந்திரமாகச் செய்திகளை வெளியிடுவதையோ இறுக்கமான முறையில் அரசாங்கம் தடுத்து வருகின்றது என்றால் அது மிகையாகாது.

பாதிக்கப்பட்ட மக்களின் அழிந்த வாழ்க்கையையும், போரினால் மனவடுக்களுக்கு உள்ளாகியிருக்கின்ற அந்த மக்களின் மனக்காயங்களை ஆற்றுவதற்கும் போர் நடைபெற்று முடிந்த உடனேயே நடவடிக்கை எடுக்காமல், செயற்பட்டு வருகின்ற அரசாங்கமா அந்த மக்கள் நீண்டகாலமாக ஏங்கிக்கொண்டிருக்கின்ற ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்தப் போகின்றது? - இந்தக் கேள்வி இயல்பாகவே இந்தச் சூழ்நிலையில் எழுகின்றது.

போருக்குப் பின்னர் நாட்டில் ஜனநாயக உரிமைகளைப் பேணுவதற்கும், உறுதியான ஓர் அரசியல் நிலைப்பாட்டை உருவாக்குவதற்கும் அரசாங்கம் முயற்சி செய்யாமல் இல்லை. ஆனால் அதன் முயற்சிகள் எல்லாம், போரின் மூலம் கிடைத்துள்ள வெற்றியைப் பயன்படுத்தி நாட்டு மக்களை ஓர் அறியாமைக்குள் தள்ளிவீழ்த்தி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையும், இராணுவமயமான ஓர் அரசியல் போக்கையும் நாட்டில் நிலைநிறுத்துவதையே இலக்காகக் கொண்டிருக்கின்றது.

நாட்டு மக்கள் குறிப்பாக போரினால் நேரடியாகவும் மிகமோசமாகவும் பாதிக்கப்பட்ட மக்களின் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் கண்டு அவர்களுடன் சமரசத்துடன் வாழ்வதற்கான போக்காக அது அமையவில்லை. இது துரதிஸ்டமானது. மிகவும் ஆபத்தானது. இந்தத் துரதிஸ்டத்தில் இருந்தும், அரசியல் ஆபத்திலிருந்தும் தமிழ் மக்கள் எவ்வாறு தங்களைக் காப்பாற்றிக்கொள்ளப் போகின்றார்கள் என்பது மிகவும் சிக்கல் மிகுந்த ஒரு கேள்வியாக இருக்கின்றது. இந்தக் கேள்விக்கு சரியான பதிலளிக்கக் கூடியவர்களும் இல்லை, எதிர்காலத்தில் வரப்போகின்ற மிகமோசமான அரசியல் சூழ்நிலைகளை மாற்றியமைக்கக் கூடியவர்களும் கண்களில் தென்படவில்லை.

# வாழத்துடிக்கும்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்வது என்பது கேள்விக்குறியாகியிருக்கின்றது." என்றார் அருட் தந்தை ஜெயபாலன்.

தடுப்பில் இருப்பவர்கள் மற்றும் காணாமல் போயுள்ளவர்களின் பிரச்சினை இங்கு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. அதைப்பற்றியும் அருட்தந்தை ஜெயபாலன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விளக்கிக் கூறினார்.

"தடுப்பில் இருப்பவர்களுடைய குடும்பங்கள் இங்கு நிறைய இருக்கின்றன. அவர்களைப் போய் பார்ப்பதில் உறவினர்கள் பெரும் கஸ்டப்படுகிறார்கள். வவுனியா, செட்டிகுளம் மட்டுமல்லாமல், வெலிக்கந்த, மட்டக்களப்பு, பூஸா என்று பல இடங்களிலும் இருக்கிறார்கள். தூரத்தில் உள்ளவர்களைச் சென்று பார்க்க முடியாமல் கஸ்டப்படுகிறார்கள். பயணச் செலவுக்குப் பணமில்லை. வவுனியா செட்டிகுளத்தில் இருப்பவர்களையும் அடிக்கடி சென்று பார்க்க முடியாமல் மக்கள் சிரமப்படுகிறார்கள். எங்களிடம் உதவிக்கு வருவார்கள். கையில் கிடைப்பதை நாங்கள் கொடுப்போம். எல்லோருக்கும் உதவி செய்யவும் எங்களால் முடியவில்லை. அரிதாகக் கிடைக்கின்ற கூலி வேலைக்கு சிலர் செல்கிறார்கள். கிழமையில் ஒன்றிரண்டு நாட்கள் கிடைக்கின்ற கூலி வேலை மூலம் கிடைக்கின்ற பணத்தைப் பிரயாணத்திற்கே செலவழித்து அலைந்துவிட்டு பிள்ளைகளின் விடுதலையும் கிடைக்காமல் வெறுங்கையுடன் வீடு திரும்பி கவலைப்படுகிறவர்களும் இருக்கின்றார்கள். பணமில்லாத வறுமை நிலை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. காணாமல் போயுள்ள பிள்ளைகளைக் கண்டு பிடிப்பதற்காகப் பெற்றார்களும் உறவினர்களும் அங்கே இங்கே என்று பணமில்லாத நிலையிலும் அலைந்து திரிகின்றார்கள். ஐசிஆர்சி தொடக்கம் பல்வேறு அமைப்பினரையும் அவர்கள் சென்று சந்திக்கிறார்கள். ஆனால் பலனேதும் இல்லை. கவலையும் அலைச்சலும்தான் அவர்களுக்கு மிச்சமாக இருக்கின்றது" என்றார் அருட்தந்தை ஜெயபாலன்.

மடுக்கோவிலில் இருந்து நாடாளுமன்றக் குழு அயலில் உள்ள கிராமங்களைச் சுற்றிப்பார்த்து, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவதற்காகப் புறப்பட்டது. தட்சணா மருதமடு கிராமத்தை நோக்கி மடுக்கோவிலின் உதவி பரிபாலகர் வழித்துணையுடன் வாகனத் தொடரணி நகர்ந்தது.

தட்சணாமருதமடுவுக்குச் செல்லும் வழியில் காணப்பட்ட பிரதான வீதியோரத்துக் காடுகள் அழிக்கப்பட்டு பெருமளவில் அகன்று காணப்பட்டது. ஆங்காங்கே படையினரின் காவல் குடில்கள். ஓரிடத்தில் வீதியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் வாகன அணியை மறித்தனர். மடுபரிபாலகர் விடயத்தைக் கூறியதும் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர். அவ்விடத்தில் வீதியில் இருந்து சிறிது தூரத்தில் குளம். அந்தக் குளத்தை அண்டியதாக பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. இந்தப் பிரதேசத்தில் பெரிய தளம் ஒன்றை அமைத்து இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் நிலை கொண்டிருந்ததை சூழல் அமைவு மற்றும் இராணுவத்தினரின் நடமாட்டத்திலிருந்து உணர முடிந்தது.

மடு ஆலய பரிபாலகரும், மடுக்கோவிலைச் சூழவுள்ள கிராமப் பங்குகளின் அருட் தந்தையர்களும் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்குத் தம்மாலான உதவிகள் ஒத்தாசைகளை செய்து வருகின்றார்கள். இதன் மூலம் இப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளில் சில பூர்த்தியடைவதாக நாடாளுமன்ற குழுவினரைச் சந்தித்த பொதுமக்கள் பலரும் தெரிவித்தனர். காணக்கூடியதாக இருந்தது.

நானூறு வருடங்கள் வரலாற்றுப் பிரசித்திபெற்ற மடு அன்னையின் அருளாட்சியில் ஆலயத்தைச் சூழ்ந்த பிரதேசங்களில் கத்தோலிக்கர்களும் இந்துக்களும் இணைந்து வாழ்கின்றார்கள். அரசியல் சமூக மாற்றங்களினால் ஏற்படுகின்ற இன்பமும் துன்பமும் அவர்களை மேலும் மேலும் இணைந்து வாழச் செய்திருக்கின்றது. வாழ்க்கையில் ஏற்படுகின்ற சவால்களுக்கும் அவர்கள் ஒரே அணியாக முகம் கொடுத்து வருகின்றார்கள். இதற்கு ஒரு சிறந்த சாட்சியாக தட்சணாமருதமடு கிராமம் திகழ்கின்றது. இங்குள்ள இரண்டு வணக்கத் தலங்களாகிய கத்தோலிக்கத் தேவாலயமும், ஒரு முருகன் ஆலயமும் கூட இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட போரின் அழிவிலிருந்து தப்பமுடியவில்லை.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீள்குடியேற்றத்திற்கு வந்தபோது, அவசர உடனடித் தேவைகள் பல அவர்களுக்கு இருந்தன. அவற்றை ஈடு செய்வதில் பெரும் பங்காற்றிய பரிபாலகர்கள் அந்த மக்களை தட்சணாமருதமடு கிராமத்தவர்களாகவே பார்த்தார்கள். அவர்களை கத்தோலிக்கர்கள், இந்துக்கள் என்று பார்க்கவில்லை. இடை விடாத ஷெல் தாக்குதல்களும், விமானக்குண்டு வீச்சுக்களும், இந்தக் கிராமத்தவர்களைப் பெரிதும் பாதித்திருந்தன. இதனால், இடத்திற்கு இடம், இடம்பெயர்ந்து சென்ற இவர்கள் ஏனைய மக்களைப்போலவே பெரும் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார்கள். மீள்குடியேற்றத்திற்கு வந்ததும், இவர்களின் உளவியல் பாதிப்புக்கு ஆறுதல் தரவல்ல ஒரு மருந்தாக, உள ஆற்றுப்படுத்தலின் முக்கிய அம்சமாக இங்குள்ள கத்தோலிக்கத் தேவாலயமும், முருகன் கோவிலும் திகழ்கின்றன.

போரினால் சேதமடைந்திருந்த இந்த ஆலயங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, - குறிப்பாக இந்தக் கிராமத்தின் முருகன் கோவிலையும் புனரமைக்க வேண்டும் என்பதற்காக பரிபாலகர்களும், முருகன்கோவிலின் பிரதம குருக்களும் இணைந்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். இந்த முயற்சி இன்னும் தொடர்கின்றது. அங்கு செல்பவர்களுக்கு இது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கின்றது. இவர்களின் தலைமையில் இந்தக் கிராமத்து மக்கள் ஒரே குடும்பமாக தமது வெவ்வேறு சமய மார்க்கங்களைச் சுதந்திரமாகவும், இயல்பாகவும் அனுஸ்டித்து வருவது எமது சமூகத்திற்கு முன்மாதிரியாக அமைந்திருக்கின்றது.

தட்சணாமருதமடு ஒரு காட்டுக் கிராமமாகவே காணப்பட்டது. காடுகள் பற்றைகளுக்கிடையில் ஆங்காங்கே இடிந்த வீடுகளில் தரப்பாள் கூரைகளின் கீழும், தரப்பாள் கொட்டில்களிலும் குடும்பங்கள் தமது வாழ்க்கையை ஆரம்பித்திருந்தன. காணிகள் முழுமையாக சுத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சுத்தப்படுத்தப்படாத இடங்களில் கண்ணி வெடிகள் இருப்பதற்கு அடையாளமாக பல இடங்களில் மஞ்சள் பட்டிகளைக் கட்டி கண்ணி வெடி அபாய எச்சரிக்கை போர்டுகளை வைத்திருந்தார்கள்.

# அசையா ஆதன (வீடு காணி) உரித்துக் காப்புறுதி

## Title Insurance

## பகுதி 2

வீடு, காணி வாங்கும்பொழுது அவற்றுக்கு உரித்துக்காப்புறுதி செய்வது நில அளவையோடு தொடர்பான பாதிப்புக்களினால் ஏற்படுகின்ற நட்டத்தை நிவர்த்தி செய்வது மட்டுமல்லாமல் வேறு சில நன்மைகளையும் அளிக்கின்றது.

வீடு, காணி வாங்குபவர்கள் அவற்றுக்குச் சரியான உரித்தைப் பெற்றுக்கொள்கின்றார்களா? என்பதை அவர்களின் சட்டத்தரணிகள் ஆராய்ந்து உறுதி செய்வார்கள். இவ்வாறு உறுதி செய்வதற்காக சட்டத்தரணிகள் பல ஆராய்வுகளைச் (Searches) செய்ய வேண்டும். இவற்றுக்கான செலவுகள் அதிகம். செலவழிக்கவேண்டிய நேரமும் அதிகம். இவற்றைத் தவிர்ப்பதற்காக உரித்துக்காப்புறுதி நிறுவனங்கள் உரித்து சம்பந்தமாக எழக்கூடிய சில குறிப்பிட்ட பிரச்சினைகளை (Problems) காப்புறுதி செய்யும்படி சட்டத்தரணிகளைத் தேவைப்படுத்துகின்றன. எனவே இத்தகைய பிரச்சனைகளுக்கு உரித்துக்காப்புறுதி எடுத்துவிட்டால் போதும். அவற்றுக்காக ஆராய்வுகளில் சட்டத்தரணிகள் நேரத்தையும், பணத்தையும் செலவழிக்கத் தேவையில்லை. அத்துடன் வாடிக்கையாளர்களும் (Clients) இத்தகைய ஆராய்வுகளுக்கான செலவைச் சட்டத்தரணிகளுக்குக் கொடுக்கத் தேவையில்லை. உரித்தோடு தொடர்பான காப்புறுதி செய்யப்பட்ட பிரச்சனைகள் பின்னர் எழுந்தால் அவற்றுக்கான நட்டத்தை அந்தக் காப்புறுதி நிறுவனங்கள் கொடுக்கின்றன.

உரித்துக்காப்புறுதித் திட்டங்கள் வேறுபட்டவை. வீடு, காணி வாங்குபவர்கள் எடுக்கின்ற உரித்துக்காப்புறுதி சொந்தக்காரர்களுக்கான காப்புறுதித்திட்டம் (Owner's Policy) என அழைக்கப்படும்.

வீடு காணி வாங்குபவர்கள் அவற்றை எந்த நிதி நிறுவனங்களிடம் அடமானம் வைக்கின்றார்களோ அந்த நிறுவனங்களும் வீடு காணி வாங்குபவர்களை உரித்துக் காப்புறுதி செய்யும்படி தேவைப்படுத்துகின்றன. வீடு, காணி சொந்தமாக வைத்திருப்பவர்கள் அவற்றை மீள் அடமானம் (Refinancing) செய்யும் போதும் நிதி நிறுவனங்கள் உரித்துக்காப்புறுதி செய்யும் படி தேவைப்படுத்துகின்றன. இத்தகைய உரித்துக்காப்புறுதித் திட்டம் கடன் கொடுப்பவர்களுக்கான காப்புறுதித் திட்டம் என அழைக்கப்படும். (Lender's Policy)

மாகாணத்துக்கு மாகாணம் உரித்துக் காப்புறுதி வேறுபடுகின்றது. உரித்துக் காப்புறுதியின் பெறுமதி அந்தந்தக் காப்புறுதி திட்டத்தின் ஒப்பந்தத்தின் (Contract) நியதிகளிலேயே (Terms) தங்கியுள்ளது.

உரித்துக்காப்புறுதி செய்யப்பட்ட குறிப்பிட்ட பிரச்சனைகளினால் பின்னர் ஏற்படுகின்ற நட்டத்தை நேரடியாக அந்தந்தக் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். காப்புறுதி செய்யப்பட்ட தேதிக்குப் பின்னர் எழுகின்ற சம்பவங்களினால் உரித்தில் ஏற்படுகின்ற நட்டங்களையும் உரித்துக்காப்புறுதி நிவர்த்தி செய்கின்றது.

வீடு, காணி வாங்குபவர்கள் பின்னர் தமது வீடு, காணிகளுக்கான உரித்தை நிலை நாட்டுவதற்காக செலவழிக்க வேண்டி வந்தால் அச்செலவுகளையும் பல உரித்துக் காப்புறுதிக் கம்பனிகள் தமது காப்புறுதித் திட்டங்களில் உள்ளடக்குகின்றன.



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister Solicitor & Notarypublic
contact@tharani lawoffice.com

# உணர்வுகள் ஏற்படுத்தும் உறவு

என் கண்ணால் பார்க்க முடியாவிட்டாலும் என்னால் உணரக் கூடிய விடயங்களுடன் எனது உறவு மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டதும் வாழ்வைப் பற்றிய கூடிய புரிந்துணர்வு எனக்கு நிச்சயம் ஏற்படும்.

இதற்கு முந்திய சுய விமர்சனத்தின் தொடர்ச்சியே இது. உன் சூழலில் நடக்கும் என்ன விடயங்கள் உன்னை இவ்வாறு புண்படுத்துகின்றன என்பதை அலசி ஆராய்ந்து தெரிந்து கொள்வது தான் சுயவிமர்சனம். இந்த சுய அலசல் ஒரு குணப்படுத்தும் செயற்பாடு. உனக்குக் கொஞ்சமேனும் தெரியாமலிருக்கும் அல்லது தெரிந்திருக்கும், நீ இல்லையென மறுதலித்துப் புறக்கணித்து ஒதுக்கிவிட்ட உன்னைப்பற்றிய விசேச தகவல்களை உனக்குமுன் வைப்பதே இந்த சுய விமர்சனம். எனது எந்த முந்தைய அனுபவத்தின் ஞாபகம் இந்த எதிர்மறை உணர்வுகளை எனக்குள் ஏற்படுத்தும் காரணி என்பதை அறிந்து கொள்வதே இத்தொடரின் மூன்றாவது கேள்வியாகும். முதல் தடவையாக எப்போ உனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. இக்கேள்விக்கு உன் பதில் உனது அந்த முதல் அனுபவத்தை ஞாபகப்படுத்தும். நீ ஆவலுடன் எதிர்பார்த்த அல்லது உனக்கு மறுக்கப்பட்டுக் கிடைக்காமற்போன அந்த அனுபவத்தைப் போன்றதுதான் உனது தற்போதைய அனுபவமும் என்பதை உணர்ந்ததும் நீ குணப்படுவது ஆரம்பமாகும்.

முதன்முதலாய் இத்தகைய எதிர்மறை உணர்வுகளை எப்போ அனுபவித்தாய் என்பது உன் ஞாபகத்திற்கு வந்ததும் இறைவனை நோக்கி இவ்வாறு பிரார்த்தனை செய். 'பேரன்புமிகு இறைவா! எனது நம்பிக்கை, தீர்மானம், தேர்வு, அங்கீகரிப்பு, அவமானம், துன்பம், கோபம், குற்ற உணர்வு, ஏமாற்றம் போன்ற எனக்குள் எழுகின்ற எனது சகல எதிர்மறை உணர்வுகளுக்காக என்னை நான் இப்போ மன்னிக்கின்றேன். எனக்குள் கொந்தளித்து என்னைத் துன்புறுத்தும் இந்த எதிர்மறை உணர்வுகளை முற்றுமுழுதாக மாற்றி அன்பாக வடிவமைத்து என்னைக் குணப்படுத்திக் கைதூக்கி விட்டுக் காப்பாற்று கடவுளே! இவ்வாறு என்னைக் குணப்படுத்துவதற்கு உனக்கு நன்றி இறைவா.'

எந்த எதிர்மறை உணர்வை நீ முதன்முதலாக அனுபவித்ததன் ஞாபகம் தற்போதைய அனுபவங்களின் போது உனது பதில் நடவடிக்கையை இவ்வாறு பாதிக்கின்றது என்பது இன்றுவரை உனக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். சற்றுநேரம் செலவழித்து பின்நோக்கிப் பார்த்து தற்போதைய நிலைக்கு ஒத்து வராத ஞாபகங்களை உனது மனத்திலிருந்து நீக்கி உனது உடல், உள்ளம், ஆன்மா மூன்றையும் குணப்படுத்திக்கொள்.

**எதிர்மறை உணர்வுகளை எனக்குள் தூண்டிவிடும் பழைய நம்பிக்கைகள், உடன்படிக்கைகள், தீர்மானங்கள், தேர்வுகள், அங்கீகரிப்புகளை இன்றுமுதல் உதறித்தள்ளி வீசி விட்டு அமைதியுடன் முன்னேறப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 176

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

**தாரணி சட்ட அலுவலகம்**

* சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்
* 45 நிமிட நேர இலவச ஆரம்ப ஆலோசனை

* *Real Estate Law* அசையா ஆதன (வீடு, காணி) உரிமைச் சட்டம்.
* *Family Law* குடும்பச் சட்டம்.
* *Wills & Estate* இறுதி விருப்பாவணமும், மரணச் சொத்தும் சட்டம்.
* *Power Of Attorney & Affidavit* தத்துவப் பத்திரம் & சத்தியக்கடதாசி
* *Immigration Law* குடிவரவுச்சட்டம்



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister Solicitor & Notarypublic

*GTA Square*
*5215 Finch Avenue East*
*#213*
*Tel: 416.291.4900*
*Fax: 416.291.4901*
*Email: contact@tharani lawoffice.com*

FREE DIAGNOSE
உங்கள் சகல விதமான கணனி சார்ந்த பிரச்சனைகளுக்கும் தேவைகளுக்கும் நம்பிக்கையுடன் உத்தரவாதத்துடன் கூடிய சேவை பெற அழையுங்கள் -Niruthan Nadarajah
REPAIR
Computer Repair, Upgrade, Virus Removal, Antivirus, Firewall, Data Recovery, Etc...
Computer Repair Services By Certified IT Professionals
Scanning, Printing, Browsing, Used & New Computers & Laptops & Accessories...
Pro-Win Computer Services Ltd
919 Ellesmere Road, Suite # 302
Scarborough, M1P 2W7.
Tp: 647-3405568/ 416-8797489
(Kennedy & Ellesmere)(10am-8pm/Sun-4 pm)





# அற்றைத் திங்கள்

கடந்த இதழ் தொடர்ச்சி -

இறிபேக் கல்லூரி எனது எழுத்தாற்றலையும் வாசிப்புப் பழக்கத்தையும் வளர்த்தது. தமிழ் இலக்கிய மன்றத்தின் கையெழுத்துச் சஞ்சிகையில் எனது ஆக்கங்களும் இடம்பெற்றன. ஆங்கிலத்திலும் எழுதுவேன். எனது Adventures of Sam என்ற தொடர்கதை ஆங்கில இலக்கிய மன்றத்தில் பல வாரங்களாக வாசிக்கப்பட்டது.

1952ல் S.S.C. தேர்வில் சிறப்பாகச் சித்திபெற்றேன். அதிபர் கே.எஸ். சரவணமுத்து அவர்கள் கல்லூரி அலுவலகத்தில் என்னைத் தனது செயலாளராக அமர்த்தினார். மாணவருக்கு நன்னடத்தைச் சான்றிதழ்கள் எழுதுவது, விடுகைப் பத்திரங்கள் தயாரிப்பது போன்றவை எனது வேலைகளாக இருந்தன. மாதம் 60 ரூபாய் சம்பளம். ஓய்வு நேரம் நிறைய இருந்தது. நூல்கள் வாசித்தல், கதைகள் எழுதுதல் எல்லாம் அதிபர் அலுவலகத்தில் செய்யக்கூடியதாக இருந்தது. அப்படி இறிபேக் கல்லூரியில் இருந்த காலத்தில் ஒன்றரை ரூபாய், சமூகம், புதிய உலகம் ஆகிய மூன்று நாவல்களை எழுதினேன்.

ஒன்றரை ரூபாய் 1954ல் நூலாக வெளிவந்தது. மற்றைய இரண்டும் வெளிவரவில்லை. இப்பொழுது பிரதிகளும் இல்லை. அவை சாதி ஒழிப்புப் பரப்புரைக் கதைகளாக இருந்ததால் அவற்றை வெளியிட அக்காலத்தில் பத்திரிகையாளரும் விரும்பவில்லை. ஒன்றரை ரூபாயும் பிரச்சனையான கதைதான். நகர் காவலர் கைலஞ்சம் வாங்கிய கதை. அட்டைப்படத்தில் நகர்காவலர் படத்தைத்தான் ஓவியர் கே.கே.வி. செல்லையா வரைந்திருந்தார். நூல் சாவகச்சேரிக் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டன. படத்தைப் பார்த்து ஆர்வமேலீட்டால் வாங்கிப்படித்த நகர்காவலர் என்னைத்தேடி வீடுவரை வந்துவிட்டார்கள். அதனை அறிந்த எனது தமையனார் தமிழ்நாட்டுக்கு என்னைப் படிக்க அனுப்பினார்.



தொடக்கத்தில் கதைகளை எழுதத்தொடங்கி, பின்னர் அவற்றை விடுத்துக் கவிதைகள் எழுதத் தொடங்கினேன். நானாகத் தேடிச் செல்லாமல் கவிதை தானாக வருவதுபோன்று இருந்தது. இந்த அனுபவத்தைப் பாடு மனமே என்ற கவிதை நூலில் கூறிக் களித்திருக் கின்றேன்.

இலக்கணம் படியாமலேயே இலக்கியத்திலே படித்த செய்யுள்களின் அமைப்பைக் கவனித்து அவைபோலப் பாடத் தொடங்கினேன். ஆரம்பத்தில் பாரதியாரைப் போல கும்மி சிந்து வகைகளிலேதான் எழுதத் தொடங்கினேன்.

எனது கவிதை ஆர்வத்துக்கு என்னை வளர்த்த தாய் மாமன் தம்பாப்பிள்ளையும் ஒரு காரணம் எனலாம். அவர் ஒரு கூத்துக்காரர். நன்றாகப் பாடுவார். பாடி எங்களைத் தூங்கவும் வைப்பார். கொஞ்சம் வெறி என்றால் அவரது பாட்டு அயலட்டைகளுக்கும் கேட்கும். எனது பாடல்களில் ஓசைச் சிறப்புகள் இருப்பதற்கு அவரது கூத்துப் பாடல்கள் என்னைக் கவர்ந்தமையும் ஒரு காரணம். அது மட்டுமன்றி, கவிதைகளை வாய்விட்டுப் பாடிக் கொண்டுதான் நானும் எழுதுவது வழக்கம். அதனால் எனது பாடல்களில் எப்பொழுதும் ஒருவகை இசை கலந்திருக்கும்.

(சிலவற்றை இராகத்துடன் பாடிக் காட்டுதல்)

1. கங்குமட்டைச் செருப்பிருக்கு
காவோலைக் குடையிருக்கு
எங்கள் தொழில் வெயில்மழை
என்றுதடைப் படுவதில்லை.

2. அன்னம் வரவில்லை ஆடலுக் கின்றைக்கும்
ஆனதும் என்னடியோ
இன்னும் வரவில்லை என்னுயிர்த் தோழிக்கு
என்ன நிகழ்ந்ததுவோ!

அண்ணன் அழகன் கொழும்பில் இருந்துவந்(து)
ஆற இறங்கினனோ
கண்ணிகர் தங்கைக்குக் கட்டுக்கட்டாயப் பொருள்
காவிக் கொணர்ந்தனனோ!

3. கீரி மலையினிலே - நலந்தரும்
கேணி அருகினிலே
மாரி மழையதனால் - மலர்ந்தெழும்
மண்ணினைப் போல உள்ளம் -

பூரித்து நிற்கையிலே - நினைவுகள்
பூத்துக் குலுங்கையிலே
தூரத் தொடர்ந்து சென்றேன் - மெல்லமெல்லச்
சூழல் கடந்து நின்றேன்.

வேந்தனைப் போலொருகால் - கொலுவினில்
வீற்றிருந் தாட்சி செய்தேன்
மாந்தரின் இன்னல் எல்லாம் - மறுகணம்
மாற வழி சமைத்தேன்.

இப்படிக் கவியரங்குகளிலும் இடைக்கிடை பாடுவேன். ஆயினும் எங்கள் குழுவில் இருந்த அரியாலையூர் வே. ஐயாத்துரை அவர்கள் சங்கீத ஞானத்துடன் பாடக் கூடியவராக இருந்ததால், நான் பாடுவதைக் குறைத்து நகைச்சுவையில் கவனஞ் செலுத்தினேன்.

பஞ்சாகப் பறந்தான் நேற்றுக்
கஞ்சிக்கும் வழியில்லாமல்
அஞ்சாறு நாளைக் குள்ளே
அமெரிக்கன் வீடு கட்டி
உஞ்சாலில் ஆடு கின்றான்
உவனுக் கெங்கதலை காசு?

அப்படி ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டுக் கூட்டத்தைச் சில விநாடிகள் பார்ப்பேன். பார்த்துவிட்டு,

கஞ்சாவை அபினை விற்றல்
கள்ளச்சா ராயம் காய்ச்சல்

என்று பதிலைச் சொல்லுகையில் சிரிப்பொலி வானத்தைத் தாக்கும். இவ்விதமான சுவைகளாலும் ஓசைச் சிறப்புகளாலும் கவியரங்குகளை நகர்ப்புறத்தார் மட்டுமல்லாது கிராமத்தவரும் விரும்பிக் கேட்கலாயினர்.

பொதுவாகக் கவிதை என்றால் விளங்காத பண்டம் என்ற கருத்தே பொதுமக்கள் மத்தியில் இருந்தது. இந்த மனப்பான்மையை எமது கவியரங்கங்கள் மாற்றி அமைத்தன. அதன் பயனாகக் கவியரங்கங்கள் கலை விழாக்களில் முக்கியமான நிகழ்ச்சியாக இடம்பெற்று வந்தன.

கவியரங்கத்துக்குத் தரும் பொருளையும் வித்தியாசமாகக் கையாள்வேன். மாவிட்ட புரத்திலே நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டில் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற தலைப்பில் கவியரங்கம் ஒன்று நடந்தது. இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமை தாங்கினார். கவிஞர்கள் எல்லோரும் தமிழின் பெருமைபற்றி முழங்கினார்கள். என்னுடைய முறை வந்ததும் இதுவும் ஒரு தலைப்பா என்று பாரதிதாசனின் கவிதை அடியைப் பகடி பண்ணினேன். கடைசியிலே தமிழ் எங்கள் உயிருக்கும் மேல் என்று முடித்துப் பலத்த கைதட்டல்களை வாங்கினேன். அந்தக் கூட்டத்திலேதான் இரசிகமணி கவியரங்குக்கு ஒரு கந்தவனம் என்ற புகழ்மாலையை எனக்குச் சூட்டினார். - தொடரும் ...



கவிஞர் வி. கந்தவனம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# இந்துப்பெண்ணால் அமெரிக்கர்களின் இதயத்தைக் கொள்ளை கொள்ள முடியுமா?

தற்போது வெளியாகியிருக்கும் “Eat Pray Love” படத்தின் நாயகி யூலியா றொபெர்ட்ஸ் (Julia Roberts) தனது குடும்பத்துடன் இந்து சமயத்திற்கு மாறினார். இதை முன்னிட்டு அமெரிக்க பத்திரிகையான The Washington Post இல் Elizabeth Tenety எழுதிய கட்டுரையின் தலையங்கத்தை தான் மேலே நீங்கள் காண்கிறீர்கள்.



October 28,1967 இல் பிறந்த யூலியா (Julia Fiona Roberts) 1990 இல் வெளியான Pretty Woman படத்தில் நடித்ததிலிருந்து அமெரிக்காவில் பேசப்படும் ஒரு பிரபல்யமான நடிகையானார். இவர் 2001 ஆம் ஆண்டில் சிறந்த நடிக்கைகான (Acadamy Award) விருதை பெற்றவர். உலகிலேயே நடிப்பிற்காக அதி கூடிய சம்பளம் வாங்கும் நடிகைகளில் ஒருவரான யூலியா $14 கோடி அமெரிக்க டொலர் சொத்திற்கு உரிமையாளர். யூலை 04, 2002 இல் படப்பிடிப்பாளரான Daniel Moder யை மணந்தார். இவர்களுக்கு 2004 இல் பிறந்த இரட்டைப் பிள்ளைகளான Hagal Patricia உம் Phinnacus Walter உம் 2007 பிறந்த Henry என்ற மகனுமாக மூன்று பிள்ளைகள் உண்டு.

யூலியாவின் பெற்றோர் கிறிஸ்தவ மதத்தை (தாய் Catholic, தகப்பன் Baptist) சேர்ந்தவர்கள். யூலியா அண்மையில் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தானும், கணவரும் மற்றும் மூன்று பிள்ளைகளும் இந்து சமயத்திற்கு மாறியுள்ளோம். நாங்கள் குடும்பமாக இந்து கோயிலுக்கு சென்று வழிபடுவோம் என்று கூறியுள்ளார். இந்து சமயக் கொள்கையில் மறுபிறப்பு உண்டு நீங்கள் உங்கள் மறுபிறப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்ற பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளிக்கையில் யூலியா பின்வருமாறு கூறினார். எனது குடும்பமும் உறவினர்களும் எனக்கு அளவிற்கு அதிகமான செல்லம் கொடுத்து கெடுத்து விட்டார்கள் (Spoiled). நான் அடுத்த பிறப்பில் அமைதியான ஓர் இடத்தில் பிறந்து எனது காலத்தை கழிக்க விரும்புகின்றேன் என்றார்.



யூலியா கடந்த செம்ரெம்பர் மாதம் “Eat Pray Love” படப்பிடிப்பிற்காக இந்தியாவிற்கு குடும்பத்துடன் சென்றிருந்தார். இப்படப்பிடிப்பு இந்தியாவில் பட்டோடியிலுள்ள ஹரி மந்திர் கோயிலுக்கு அருகில் நடந்தது. அங்குள்ள சுவாமி தரம்தேவ், யூலியா மனதார இந்துமத தத்துவங்களை ஏற்றுள்ளது ஒரு நல்லவிடயம் என்று கூறினார். யூலியா தனது மூன்று குழந்தைகளுடன் கோவிலுக்கு வந்து விளக்கேற்றி வழிபட்டார் என்றார். யூலியா தற்போது தனது மூன்று குழந்தைகளுக்கு இந்துக் கடவுள்களான லட்சுமி, கணேஷ், கிருஷ்ணா என்று பெயர்களைச் சூட்டியுள்ளார். இப்பெயர்களை சுவாமி தரம்தேவ் Hagal, Phinnacus மற்றும் Henry இற்கு சூட்டினார்.

யூலியா, மகராஜ்ஜி என அழைக்கப்படும் ஸ்ரீ நீம் கரோலி பாபாவின் (Shri Neem Karoli Baba) பக்தை ஆவர். ABC News இற்கு பேட்டி கொடுத்த யூலியா ஸ்ரீ நீம் கரோலி பாபாவின் படம் ஒன்றை பார்த்த பின்னரே தான் இந்து சமயத்தின் பால் மிகவும் ஈர்க்கப்பட்டதாக கூறினார். பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்த ஸ்ரீ நீம் கரோலி பாபா 1973 இல் இறைவனடி சேர்ந்தார். உலகெங்கிலுமுள்ள ஸ்ரீ நீம் கரோலி பாபாவின் பக்தர்கள் தமது ஆச்சிரமங்களின் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் வாழும் பார்வை இழந்த 30 இலட்சத்திற்கு மேற்பட்ட பணவசதி அற்றவர்களுக்கு கண் சிகிச்சை அளித்து கண்பார்வையைப் பெற்றுக்கொடுத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யூலியாவின் “Eat Pray Love” படம் கனடாவில் ஒகஸ்ட் 13, 2010 இல் வெளியானது. Elizabeth Gilbert’s இன் சுயசரிதை நூல் தான் இந்த Eat Pray Love என்னும் புத்தகம். 2006 இல் வெளிவந்த இந்த புத்தகம் New York Times இன் அதிகூடிய விற்பனையாகும் புத்தகங்கள் (Best Seller) வரிசையில் பெப்ரவரி 2010 வரை, அதாவது தொடர்ந்து 158 வாரங்கள் இருந்தது.

32வயது படித்த பெண்மணியும் எழுத்தாளருமான Elizabath Gilbert சொந்தமாக ஒரு வீட்டில் கணவனுடன் வாழ்ந்து வருகின்றார். திருமண வாழ்வில் ஏற்பட்ட விரக்தியால் குளியலறையில் தினமும் அழும் எலிசெபத் கணவனிடமிருந்து பல சிரமங்களுக்கு பிறகு விவாகரத்து பெறுகிறார். இந்தோனேசியாவிலுள்ள பாலி (Bali) நகரில் விடுமுறையை கழிக்கும் போது யோகாசன பயிற்சி கட்டுரை எழுதுகின்றார். அதன் பின்னர் உலகை சுற்ற புறப்படும் எலிசெபெத் நாலு மாதங்கள் இத்தாலியில் சந்தோஷமாக சாப்பிடுவதிலும், களியாட்டங்களிலும் காலத்தை செலவழிக்கின்றார் (Eat). பின்னர் நாலு மாதங்கள் இந்தியாவில் ஆன்மீக அறிவை பெறுவதில் காலத்தை செலவிடுகிறார் (Pray). இதன் பின்னர் அவ்வருடத்தின் கடைசி நாலு மாதங்களையும் பாலி நகரில் செலவிடும் போது ஒரு பிரேசில் நாட்டை சேர்ந்த தொழிற்சாலை அதிபரை காதலிக்கின்றார் (Love). இதுவே எலிசெபத்தின் சுயசரிதையான Eat, Pray, Love என்ற புத்தகமும் தற்போது வெளிவந்திருக்கும் படமும் ஆகும். எலிசெபத்தின் கதா பாத்திரத்தை யூலியா இப்படத்தில் ஏற்று நடித்துள்ளார்.



அருந்ததி ஞா.

# எத்தனை மனிதர்கள்?



தினம் தினம் முறை தவறாது
காலையில் உதித்து
மாலையில் மறைந்து
அனுதினம் உலகைக்காக்கும்
கதிரவன் செயல்கள்தான்
எத்தனை எத்தனை
நான் இல்லையேல் உயிர்கள்
இல்லை
என்று இறுமாப்புக் கொள்ளாது
நாளும் மறைந்து நின்று
உயிர் காக்கும் காற்றின்
செயற்பாடுகள் தான்
எத்தனை எத்தனை
மழை இல்லையேல் உயிர்கள்
இல்லையே என்று அகங்காரம் கொள்ளாது
மழையைப் பொழியும்
வானத்தின் செயற்பாடுகள்தான்
எத்தனை எத்தனை
இத்தனைக்கும் மேலான
ஆறறிவு படைத்தமனிதருள்
மனிதனாகமுறை தவறாது
வாழும் மனிதர்கள்
எத்தனை என்றால்
இத்தனை என்றே
விரல் விட்டே எண்ணிவிடலாம்.

- ரஞ்சி கதிர்

NUTECHWORLD
Your Neighbourhood Computer Store
BACK TO SCHOOL OFFER
FREE Diagnostic**
■ Computer (Desktop, Laptop)Repairs
Upgrades
Virus,Adware,Spyware,etc Removal
Data backup, Recovery.
■ HP,DELL,ACER,IBM,NONAME
■ Printer Repairs - Laser,Inkjet
■ Networking - wired or wireless
■ We do in-home diagnostic & repairs with discounted rates
■ Other Services: Wallmount TV / Home theatre installation
Video Surveillance system
installation & maintenance
Batteries, Cables* 2 For $1.50
We Sell Computer / Electronic Accessories
CD/DVD Media, Cooling Fans, Cables,Laptop bags,
iPOT Accessories,Thermal Intake PSU's ,Usb hubs,
Tel :416 335 5222
Info@nutechworld.com
5214 Finch Ave.East. Unit #160. Scarborough- ONT
( GTA Square Mall - Middlefield & Finch)
*Selected items. ** Offer ends August 15, 2010. Applies to computers / Printer in store service only.

SaiSwaralaya
School of Carnatic Music
Teaching Carnatic Vocal & Veena
Small groups (less than 6) or Individual Classes are conducted
by Prashanthy Niranjan (B.Music & Former lecturer University of Jaffna)
Tel: 416 299 1514

ஊனம் வாழ்வின் முடிவல்ல என்பதை தமது வாழ்க்கையின் மூலம் சாதனை புரிந்த பதினொருவரின் சொந்தக் கதைகள் அடங்கிய யோகா பத்மநாதனின் 'வாழ்வின் திருப்பம்' என்ற நூல் இரண்டாம் பதிப்பாக இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு, வவுனியா முத்தையா மண்டபத்தில் வெளியிடப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கணபதிப்பிள்ளை அருந்தாகரன் உரையாற்றுவதையும் நூலாசிரியை யோகா பத்மநாதனிடமிருந்து முதற் பிரதியை யாழ். தேசியகல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஆ. ரவீந்திரன் பெற்றுக்கொள்வதையும், நூலை வெளியிட்டு வைத்த கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் ந.ரவீந்திரகுமாரையும், கனடா எழுத்தாளர் சங்கத் தலைவர் சிவபாலு உரையாற்றுவதையும், நூலாசிரியையின் புதல்வி செல்வி சஹானா பத்மநாதன் இந்த நிகழ்வில் இசை விருந்தளிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.





கனடா கந்தசாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா 08.08.2010ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான பக்த்தர்களின் மத்தியில் சிறப்பாக நடைெ- பற்றது. அன்று காவடி, தூக்கக்காவடி சிறப்பிடத்தினைப் பெற்று விளங்கியது. கற்பூரச்சட்டி எடுத்த பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. கனடாவில் எழில்மிக்க சித்திர வேலைப்பாடுகளை கொண்டுள்ள அற்புதமான தேர் 33 அடி உயரத்தினைக் கொண்டதாகும். இதனை மிகத் தூய்மை செய்தவர் சிற்பகலாபூசணம் திரு. செல்லத்துரை சக்திவேல் அவர்கள். அன்று இறைவன் தீர்த்தனாக நின்று இப்பெரும் விழாவிற்கும் சகலவுயிர்களுக்கும் நல்லாசி வழங்கியுள்ளார். தீர்த்தன் சிவலோகப்பெருமானை இமைப்பொழுதும் மறவாது போற்றும் இயல்பிற்குரியவர் முருகப்பெருமான். இவ்வாலயத்தின் முதலாவது தேர்த்திருவிழா 19.07.2001 வியாழக்கிழமை நடைபெற்றது. 23.07.2006 ஆம் திகதி முருகப்பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனி வந்த தெய்வீகக் காட்சி எல்லோருக்கும் இன்பத்தை நல்கியது என்பது உண்மை. உலகில் மிகப்பெரிய தேர் திருவாவூர் தேராகும். அதன் உயரம் 96அடியாகும். ஆடித்தேர் என்ற சிறப்பிற்குரியது. தேர்த் தரிசனம் கோடி புண்ணியமாகும்.

- கனடா திரு. அ. சிவானந்தநாதன்

# இந்தியாவை வீழ்த்தியது...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

தங்காமல் இருந்து வந்தார்.

16 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள 28 வயதான பெடரர் 2004 பெப்ரவரி முதல் 2008 ஓகஸ்ட் வரை 285 வாரங்கள் தர வரிசையில் முதலிடத்தை பிடித்து அசத்தினார். அவர் பீட் சாம்பிராசின் சாதனையை ஒரு வாரம் குறைவால் தவற விட்டார்.

கடந்த மாதத்தில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலிடம் முதலிடத்தை இழந்த பெடரர், தற்போது 3 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் கால் இறுதியில் செக் குடியரசு வீரர் தோமஸ் பெர்டிச்சிடம் தோல்வி கண்டதன் மூலம் பெடரர் 3 ஆவது இடத்துக்கு பின் தங்கி இருக்கிறார். ரபெல் நடால் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.

விம்பிள்டனில் அரை இறுதிக்கு முன்னேறிய செர்பியா வீரர் நோவாக் ஜொகோவிச் 2 ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார். இந்நிலையில் பெண்கள் ஒற்றையர் தர வரிசையில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். செர்பியா வீராங்கனை ஜெலினா ஜோன்கோவிச் 3 ஆவது இடத்தில் இருந்து 2 ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார்.

2ஆவது இடத்தில் இருந்த அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். 4ஆவது இடத்தில் இருந்த டென்மார்க் வீராங்கனை கரோலின் 3ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார்.

இந்திய வீராங்கனை சானியா மிர்சா 111 ஆவது இடத்தில் இருந்து 132 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். ஆண்கள் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பெயஸ் 6 ஆவது இடத்திலும், மகேஷ்பூபதி 7 ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

**www.vlambaram.com** அல்லது

**www.tamilexpress.net**

# வீட்டின் விலை...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிக வீடுகள் சந்தையில் இருப்பதால் வாங்குபவர்களிற்கு இலகுவாக பேரம்பேசக்கூடிய வசதிகள் காணப்படுகின்றது. குறைந்த விலையில் வாங்கக்கூடிய சந்தர்ப்பத்தையும், குறைந்த வட்டி வீதத்திலும் அதிகமான வாங்குனர்கள் இலகுவாக அடமானக்கடன்பெற்று, ஆதனம் வாங்கக்கூடிய வசதிகள் இருந்தபோதிலும் விற்று வாங்கப்படும் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக, இந்த வருடத்தின் ஆரம்பத்தில், HST ஐ தவிர்ப்பதற்காக அனேகர் ஏற்கனவே ஆஸ்தியை வாங்கியதாக கொள்ளலாம்.

புதிதாக கொண்டுவரப்பட்ட HST (Harmonized Sales Tax) புதிதாக நிர்மாணம் செய்யும் வீடுகளில் தாக்கம் ஏற்பட்ட போதிலும் Resale வீடு/மனைகளில் நேரடி அதிகரிப்பு ஏற்படாதபோதிலும் Professional சேவைகளில் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வீட்டின் விலையுடன் ஒப்பிடப்படும்போது இந்த பெறுமதி பெரிதாகக் கூறமுடியாது. அனேகமான வீட்டு பிரதிநிதிகளும், வீடு/மனை அலுவலகங்கள் நடத்துபவர்களும் நிச்சயமாக இவ் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்ததை விட மாற்றம் ஏற்பட்டுள்ளதை ஒத்துக் கொள்கின்றார்கள்.

வன்கூவர் நகரத்தில் சராசரி வீட்டு விலை அதிகூடிய வீட்டு விலையிலிருந்து 2.8% குறைந்துள்ளது.

இந்நிலை ரொறொன்ரோவிலும் ஏற்படலாம். நிச்சயமாக ஆஸ்தியை விற்கவேண்டிய நெருக்குவாரத்தில் உள்ளவர்களே சந்தையில் விற்பனைக்கு வீட்டை வைத்துள்ளார்கள். மற்றவர்கள் விற்பனையிலிருந்து நீக்கியுள்ளதையும் காணலாம்.

பொதுவாக யூலை, ஓகஸ்ட் மாதங்கள் வீடு/மனை வியாபாரத்தில் ஓரளவு மந்தமான மாதங்களே அனேகமான ஆஸ்தி வாங்குபவர்கள், விற்பவர்கள் விடுப்பில் (Vacation) இருப்பதும் ஒரு காரணமாக- லாம். ஆஸ்தி வியாபாரத்தில் மார்ச் மாதத்திலிருந்து மே வரையும் செப்ரெம்பர் இலிருந்து நவம்பர் வரையுமே உச்சத்தில் காணப்படுவது இயல்பு. ஆனால் வீடுகளை விற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்கள் ஏற்கனவே சந்தைக்கு கொண்டுவந்த வீட்டு விலையிலிருந்து கேட்டும் விலையை குறைத்துக்கொண்டு வருவதையும் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

முதல்தடவையாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் இந்த வருடத்திலேயே சராசரி வீட்டு விலை $400,000 ஐத் தாண்டியுள்ளது. வீட்டின் விலை அதிகரிப்பால் ஜுன், ஜுலை மாதங்களில் விலை குறைந்த வீடுகளின் வியாபாரம் அதிகரித்துக் காணப்பட்டது. முதல்தடவை வாங்குபவர்களுக்கு இந்த விலை வீடுகளே வாங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு உதாரணமாக நோர்த்யோக் (Northyork) பகுதியில் வீடு நிர்மாணம் செய்யும் நிறுவனம் Beaverbrook ஏற்கனவே சந்தைக்கொண்டு வந்திருந்த விலை $393,900 இலிருந்து $399,900 காணப்பட்டது. ஆரம்பத்தில் இரண்டு சேர்ந்த வீடுகள் (Semi Detached) மாதாந்த கட்டுப்பணம் அற்ற தனிவீடுகள் (Town house) சந்தைப்படுத்தப்பட்டது. மந்தமான வியாபாரத்தால் இந்நிலை Project இன் பெயரை மாற்றி சிறிய அளவில் 12 விதமான ரவுண் வீடுகளை சந்தைக்கு கொண்டு வந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் விலையை $344,990 வரை குறைத்துள்ளது. இவ்வாறான வியாபார யுத்தியை விற்கும் நிறுவனங்கள் பாவிக்கத்தொடங்கியுள்ளன. அரிக்கப் பொருளாதாரத்தின் வளர்ச்சி, போதியளவு இல்லாததால் ஓகஸ்ட் 10ஆம் திகதி கூடிய மத்திய வங்கியின் ஆளுனர்கள் வட்டி வீதத்தி எதுவித மாற்றத்தை ஏற்படுத்தாமல் விட்டுள்ளளார்கள். நீண்டகாலத்திற்கு வட்டிவீதம் குறைந்த சூழ்நிலையிலேயே காணப்படும் எனவும் கூறியுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் இரண்டாவது காலப்பகுதியில் (Q2 - 2010) வீட்டின்



விலையில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இதுவரை வீட்டு விலையில் அதிகரிப்பில் முன்னோடிகளாகக் காணப்பட்டன. ஆனால் இந்த நிலைமை எதிர்காலத்திலும் தொடருமா?

# சுமைகளும் சுமையாளிகளும்

## ஓடும் நீர் உறைவதில்லை 06

## இரண்டாம் பாகம்

வாழ்க்கை என்பது ரோஜாப்புப் படுக்கையல்ல. மேடும் - பள்ளமும் கொண்டது, உயர்வும் - தாழ்வும் நிறைந்தது, இன்பமும் - துன்பமும் கலந்தது எனப் பல்வேறு விளக்கங்களால் அறியப்படுத்தப்படுகின்றது. 'முடிசார் மன்னரும் முடிவில் ஒரு பிடிசாம்பல் என வாழ்க்கையின் இறுதி ஒரு பிடிசாம்பல் எனவும் அறியத்தரப்படுகின்றது. ஒரு மகிழ்ச்சியான, வளமான வாழ்க்கை இல்லை அல்லது இருக்கமுடியாது என்பது பெரும்பாலானவர்களது விளக்கம். பிறந்தோம், இருந்தோம், இறந்தோம் எனும் தொடர்தான் வாழ்க்கையென்றும் இதில் எப்படி வாழ்ந்தாலும் முடிவு ஒன்றுதானே என்பதும் ஒருவகை விளக்கமாகவும் அமைந்திருக்கின்றது. பிறப்பவையெல்லாம் துன்பக்கடலில் தத்தளித்துத் தான் ஆக வேண்டும் எனவும் சிலர் இடித்துரைக் கிறார்கள். இவர்களின் வாதம் சுமைகள் நிரம்பியதுடன் கரடுமுரடான பாதைகளால் நகர்த்தப்பட வேண்டியதும் என்பதுதான்.

மறுபுறத்தில் ஒரு சிலர் முற்றிலும் வித்தியாசமான விளக்கங்களை முன்வைக்கிறார்கள். மனிதப்பிறப்பு என்பது மகத்தான பிறப்பு. இந்தப் பிறவி கிடைத்தற்கரியது. நாம் வாழும் பிரபஞ்சத்தின் உண்மையான நிலைக்கும் நமக்கும் உள்ள தொடர்பை தெளிவாகப் புரிந்து என்றென்றும் மகிழ்வுடன், ஆனந்தத்துடன், பூரண திருப்தியுடன் வார்த்தைகளால் விபரிக்கமுடியாத பேரின்பத்தை அனுபவிப்பதற்கு கிடைத்துள்ள ஒரேயொரு வாய்ப்புத்தான் இந்த வாழ்க்கை என்பது இவர்களது விளக்கம். வாழ்வின் ஒவ்வொரு கணப் பொழுதும் உண்மையான ஆனந்தத்தை உணருவதற்கும் அனுபவிப்பதற்குமான வரப்பிரசாதம் என அறுதியிட்டுக் கூறுகிறார்கள் இவர்கள்.

இப்போது எமக்குள்ள ஒரேயொரு தேவை என்னவெனில் வாழ்க்கை என்பது பிறரின் தெரிவா அல்லது நமது சுயதெரிவா என்பது தான். வாழ்க்கை என்பதற்கு விளக்கம் கொடுப்பவர்கள் அனைவரும் அவரவர் பார்வையில், அநுபவத்தில் கொடுக்கும் விளக்கமாக இருக்கின்றது என்பதுதான் உண்மை. அப்படியானால் நமது வாழ்க்கைக்கு விளக்கம் கொடுக்க வேண்டியவர்கள் நாமல்லவா! சுற்றம் - சூழல், சொத்து - பத்து, சொந்தம் - பந்தம் எனப் பல நம்முடன் இறுக இணைந்திருந்தாலும் நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையைத் தனித்தே நகர்த்த வேண்டியுள்ளது என்பது தான் அறிவியல் பார்வை. அன்பு, ஆதரவு, உதவி, ஒத்தாசை, உத்தரவாதம் என எவையெல்லாம் பிறரால் தரப்பட்டாலும் வாழ்க்கை நகர்த்தப்படுவது தனிப்பட்டமுறையில் தான்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

" வாழ்க்கையை வளமாக வாழ்வது என்பது சுமைகள் இல்லாமல் வாழ்வது தான். ஒருசிலர் பொறுப்புக்களைத் தவறாகச் சுமைகள் என்று பார்க்கிறார்கள். பொறுப்புக்கள் வேறு சுமைகள் வேறு. மனிதப்பிறப்பின் ஒரே ஒரு நோக்கம் பிறரின் வாழ்வை மேம்படுத்துவதற்காகத் தன்னாலான அத்தனை பொறுப்புக்களையும் கையேற்றுத் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பயன்படுத்தித் திறம்பட அப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதாகும். "



பிறப்பு நமது தெரிவல்ல என்பது நமது வாழ்க்கையின் மூலாதார உண்மை. இறப்பும் நமது தெரிவல்ல என்பதுவும் அவ்வாறானதே. ஆனால் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை வாழ்காலம் என நாம் புரிந்திருந்தாலும் உண்மையில் வாழ்கிறோமா என்பது தான் இக்கட்டுரையின் சிறிய ஆய்வு. வாழ்க்கை வாழ்வதற்கே என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம். ஆனால் வாழ்வது எப்படி என்பது கற்றுக்கொள்ள வேண்டியதாகின்றது.

வாழ்க்கையை வளமாக வாழ்வது என்பது சுமைகள் இல்லாமல் வாழ்வது தான். ஒருசிலர் பொறுப்புக்களைத் தவறாகச் சுமைகள் என்று பார்க்கிறார்கள். பொறுப்புக்கள் வேறு சுமைகள் வேறு. மனிதப்பிறப்பின் ஒரே ஒரு நோக்கம் பிறரின் வாழ்வை மேம்படுத்துவதற்காகத் தன்னாலான அத்தனை பொறுப்புக்களையும் கையேற்றுத் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பயன்படுத்தித் திறம்பட அப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதாகும். எனவே கணவன் - மனைவி, குழந்தைகள், உற்றம் - சுற்றம் அனைத்துக்குமான நிவாரணப்பொருளாக நமது வாழ்க்கை அமைய வேண்டியதாகின்றது. எனவே நமது பொறுப்புக்கள் நமது வாழ்வின் சிறப்புக்கும், அடிப்படை நோக்கத்துக்கும் அரிய வாய்ப்புக்களாகும் என்பது தான் உண்மை. எனவே பொறுப்புக்களைச் சுமைகளாகக் கருதாமல் அரிய வாய்ப்புக்களாகக் கருதுவோம்.

சுமைகள் என்றால் என்ன? சுமைகள் பற்றிய தெளிவான விளக்கம் கிடைத்தவுடன் சுமைகளையும் பொறுப்புக்களையும் மிக இலகுவாக இனங்கண்டு கொள்ளலாம். ஏனெனில் சுமைகள் அல்லாத அனைத்தும் நமது பொறுப்புக்களாகும். சுமைகள் என்பது நமக்கும் பிறருக்கும் பயன்படாதவற்றை நாம் சுமந்து கொண்டிருப்பதுதான். அதாவது நாம் நாளாந்தம் சுமந்து கொண்டுதிரியும் விடயங்கள் நமக்கும் பயன்தருவதில்லை மற்றவர்களுக்கும் பயன் தரப்போவதில்லை என வகைப்படுத்தப்படும் அனைத்தும் சுமைகளே. இந்தச் சுமைக ளைச் சுமந்து கொண்டிருப்பவர்கள் உண்மையில் வாழாதவர்கள் அல்லது நடைபிணங்களாவர். உயிரியக்கம் ஒன்றைத் தவிர வேறு எதுவும் இவர்களிடம் இல்லை. இன்னொரு வகையில் கூறுவதாயின் இவர்கள் ஏற்கனவே இறந்து விட்டார்கள். ஆனால் புதைப்பதற்கான அல்லது எரிப்பதற்கான தமது உடலைத் தாமே சுமந்து கொண்டு திரிகிறார்கள். இந்த அளவுக்கு மிகவும் மோசமாகக் எவற்றை இவர்கள் சுமந்து கொண்டு திரிகிறார்கள்? ஒருவேளை இவர்கள் சுமைதாங்கிக் கற்களோ? இல்லை, இல்லை. இவர்கள் சுமைதாங்கிக் கற்களும் இல்லை, இவர்களது சுமைகளை சுமைதாங்கிக் கற்களும் கூட தற்காலிக மாக வேணும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டா.

வளமான வாழ்க்கை என்பது சுமைகள் இல்லாத வாழ்க்கை தான், இந்த வளமானது எந்த அளவு கோலாலும் அளவிடப்படமுடியாதது. ஒருவரது மகிழ்ச்சியின், திருப்தியின், ஆனந்தத்தின் அளவை அவரால்கூடப் பூரணமான முறை யில் அளவிடமுடியாத போது மற்றவர் களால் அளவிடமுடிவது அசாத்தியமானதே. வளமான வாழ்க்கைக்கு சுமைகள் மட்டுமல்ல சுமைகளைச் சுமந்து கொண்டிருப்பவர்களும் (சுமையாளிகள்) முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டிய தாகின்றது. ஏனெனில் தனக்கும் பயன்படாத, பிறருக்கும் பயன்படாத சுமை களை பிறர் எவரும் ஏற்றுக் கொள்ள விரும்புவதில்லை.

இந்தச் சுமைகள் எவை என்பதை அறிவதற்கு நீங்கள் மிகவும் ஆவலாக இருப்பது எனக்குத் தெளிவாகப் புரிகிறது. இருப்பினும் ஒரு கதை கூறுகிறேன். புதிதாகத் திருமணமாகிய தம்பதிகள் தமது பொழுதைக் கழிப்பதற்காக ஒரு பூங்காவுக்குப் போய்க் கொண்டிருந்த பொழுது அவர்களுக்கு எதிரே ஒரு வயது முதிர்ந்தவர் கூனிய முதுகில் ஒரு மூட்டையைச் சுமந்த வண்ணம் வருவதைக் கண்டனர். வயதிலும், வாழ்க்கை அனுபவத்திலும் முதிர்ச்சியாகக் காணப்பட்ட அந்த முதியவரிடம் இந்தத் தம்பதிகள் ஐயா!, "நாங்கள் புதிதாகத் திருமணமானவர்கள், வாழ்க்கையை வளமாக வாழ்வதற்கு ஒரு அறிவுரை தாருங்கள்" என்றனர். உடனே அந்த முதியவர் தனது முதுகில் இருந்த மூட்டையை கீழே இறக்கிவிட்டு நேராக நிமிர்ந்து நடந்து சென்றார். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. புரிந்தது தம்பதியினருக்கு. சுமை இல்லாவிட்டால் நேராக வாழலாம் என்பது தான் அது.

KG Master-kgmaster@rogers.com

ஆம் வாசகர்களே!

சுமைகள் இல்லாத வாழ்க்கை உன்னதமான வாழ்க்கை. நேற்றைய பிரச்சினைகளும் நாளைய பயங்களும் தான் அந்தச் சுமைகள். நேற்றைய பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு நாளைய பயங்களையும் ஏற்றிக் கொண்டு வாழ்பவர்கள் அனைவரும் சுமையாளிகளே. இவர்களுக்குத் தான் வாழ்க்கை ஒரு சுமையாகிவிடுகின்றது. எனவே நமக்கு சுமையும் வேண்டாம். நாம் சுமையாளிகளாகவும் வேண்டாம். நேற்றைய பிரச்சினைகள் நேற்றுடன் முடிந்தவை. நாளைய பயங்கள் அனாவசியமான கற்பனைகள். இந்த இரண்டையும் முற்றாகத் தவிர்த்து இன்று கிடைத்துள்ள வாழ்க்கையை இன்பமாக அனுபவிப்போம். இதுதான் வளமான வாழ்க்கைக்குரிய ஒரே வழியாகும்.

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்



On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# புயலுக்குள் புதுமை கண்ட புகழ் மன்னன் பாரி

சங்க காலத்தில் புகழ் பெற்ற மன்னன் பாரியை அறியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. புயல் காற்றில் சிக்குண்ட முல்லைக் கொடிக்கு தன் தேரையே கொடுத்து உலகப் புகழ் பெற்றவனே பாரி. அடடா நமது கொடை வள்ளல் பாரி ஒரு முல்லைக் கொடிக்காக எவ்வளவு இரங்கியிருக்கிறான் என்ற கோணத்தில்தான் இதுவரை நாம் பாரி கதையை படித்து வருகிறோம். ஆனால் அதற்கும் அப்பால் பாரி கதையில் பல புதுமைகள் இருக்கின்றன இதோ அதில் ஒன்று.

புயல் காற்று வீசுகிறது. யாருமற்ற புறம்பு மலையை அண்டிய பொட்டல் வெளியில் ஒரு முல்லைக்கொடி ஆதரவின்றி வட்டமாகச் சுழல்கிறது. சொற்ப நேரத்தில் அது கொடுங்காற்றில் துண்டு துண்டாய் அறுபட்டு சிதறிப் பறக்கப்போகிறது. பக்கத்தில் பாரி அந்தக் கொடிய காட்சியைப் பார்த்தபடி அவன் சிந்திக்கிறான்.

உலகத்தின் சக்தியெல்லாம் ஒன்று திரண்டு அந்த வெளியில் பெருங்காற்றாக வீசுவதை உணர்கிறான். இந்தக் காற்றை நிறுத்தும் வலு நமக்கு இருக்கிறதா என்று சிந்திக்கிறான். இல்லை. அங்கு வீசிக்கொண்டிருக்கும் புயல் காற்று மனிதசக்திக்கு அப்பாற்பட்டது. யாராலுமே நிறுத்த முடியாதது. என்ன செய்யலாம்?

ஒரெயொரு நொடி. அவன் மூளை அபாரமாக வேலை செய்கிறது. படீர்! மூளையில் ஓர் அதிர்வு. மகத்தான அதிசயம் ஒன்று அந்த ஆபத்தில் மறைந்திருப்பதை சட்டெனக் கண்டு கொண்டான். உலகத்தின் பெருமூச்சாய் வீசும் அந்தக் காற்றுக்குள்தான் உலகப்புகழ் பெறும் இரகசியம் புதைந்து கிடப்பதை கண்டு கொள்கிறான்.

ஒரேநொடி. உடனடியாக தனது தேரை விட்டுச் சரேலென இறங்குகிறான். முல்லைக் கொடியின் முன்னால் அதை நிறுத்துகிறான். மெல்லெனக் கொடியை எடுத்து தேரில் படர விடுகிறான். முல்லைக் கொடிக்கு தேரைக் கொடுத்த உலகப்புகழைப் பெறும் உன்னதம் அந்தப் புயலுக்குள்தான் புதைந்து கிடக்கிறது என்பதைக் கண்டு கொள்கிறான்.

இரண்டாயிரமாண்டு அழியாப் புகழைப் பெற இயேசுநாதர் சிலுவை சுமந்து முள் முடி தரித்தார். எகிப்தியர்கள் மாடாய் முறிந்து, ஓடாய் இளைத்து பிரமிட்டுக்களை அமைத்து உலகப் புகழ் பெற்றார்கள். ஆனால் பாரியோ ஒரு தேருடன் இரண்டாயிரம் ஆண்டுப் புகழை ஒரே நொடியில் பெற்றுக் கொண்டான்.

இனி சிந்தனைக்கு வருவோம். புயல் ஏன் வந்தது? முல்லைக்கொடி ஏன் உயிருக்குப் போராடியது..? அந்த வழியாக பாரி மட்டும் ஏன் வரவேண்டும்..? மூன்று நிகழ்வுகளையும் ஒன்றாக்கிப் பாருங்கள். உலகப் புகழ் பெறும் உன்னதம் தன்னை அடையாளம் காட்ட உருவாக்கிய மூன்று பெரும் காட்சிகள்தான் இவை என்பதை உணர்வீர்கள்.

முல்லைக் கொடிக்கு தேரைக் கொடுத்ததோ அதன் உயிரைக்காப்பாற்றியதோ இங்கு புதுமையல்ல. புயல் வந்தபோது கவலை கொள்ளாமல் அதற்குள் இருந்த புதுமையைக் கண்டு பிடித்து உலகப் புகழ் பெற்றதுதான் அதில் உள்ள உன்னதமான செய்தியாகும்.

வாய்ப்புக்கள் பிறப்பிலிருந்தும் வரலாம் இறப்பில் இருந்தும் வரலாம். ஆனால் அது ஒரு முறைதான் வரும். அது வரும்போதே பற்றிக் கொண்டால் கவலைகள் பறக்கும் உலகப்புகழ் கைகளில் கிடைக்கும். இது பாரி முல்லைக்கொடிக்கு தேர் கொடுத்த கதையல்ல. அவன் உலகப் புகழ் பெற்ற கதை.

இனி புதுமாத்தளனுக்கு வாருங்கள். புதுமாத்தளன்தான் அன்றைய புறம்புமலைப் பொட்டல் வெளி. முல்லைக் கொடி போலத்தான் புயலில் சிக்குண்ட நமது மக்கள். புயல் காற்றுத்தான் அவர்களை அழிக்க ஒன்று திரண்ட உலக சமுதாயம். அன்று தேருடன் வந்த பாரி போலத்தான் புலம் பெயர் தமிழ் மக்களாகிய உங்களின் நிலை. இந்த நான்கு முனைகளையும் இணைத்துப் பாருங்கள்.

பாரிபோல உங்கள் மூளையை நாற்புறமும் சுழல விடுங்கள். இன்று நீங்கள் வெறும் கண்ணீர் விடுவதைப் போல அன்று பாரியும் வெற்றுக் கண்ணீர்விட்டிருந்தால் விளைவு என்னவாகியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இன்று உங்கள் அறிவையும், கண்களையும் மறைத்து நிற்கும் கண்ணீர் போல பாரியின் கண்களும், அறிவும் கண்ணீரில் மறைந்து போயிருக்கும்.

ஆம். புதுமாத்தளன் என்ற போர் நீங்கள் கவலைப்படுவதற்காக வரவில்லை என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். புலம் பெயர் தமிழன் உலகப் புகழ் பெறும் உன்னதம் அதற்குள்தான் புதைந்து கிடக்கிறது என்ற உன்னதத்தைக் கண்டு பிடிக்க காலம் உங்கள் முன் ஒரு சவாலை விட்டிருக்கிறது.

புலம் பெயர் வாழ்வையும், பொருளாதாரத் தேரையும், தாயகத்தில் புயலையும் ஏன் படைத்தான் இறைவன் என்றும் எண்ணிப் பாருங்கள்.

பொங்கி அழவேண்டிய இடமல்ல புதுமாத்தளன்.
பொங்கி எழவேண்டிய இடமே புதுமாத்தளன்.

எண்ணங்களை மாற்றுங்கள் புதுமாத்தளன் என்றால் புதிய மாற்றங்களை செய்யுங்கள் என்பதுதான் பொருளாகும். புதுமை பெறுங்கள். **- நன்றி அலைகள்**



# கருந்துளைகளின் வகைகள் - 22

பொதுவாகவே கருந்துளைகள் பற்றியவற்றை எல்லாம் ஓரளவுக்குத் தெரிந்து கொண்டோம். இனி அடுத்த பகுதியில் இருந்து சற்று விரிவு படுத்தப்பட்ட முறையில் கருந்துளைகளைப் பார்க்கப் போகின்றோம். இதனைக் கருந்துளைகளின் பகுதி 2 எனக் கூடக் கூறலாம். இப்பகுதியில் பௌதீகத்தின் அழகான பகுதிகளைச் சுவையாக, அதேநேரம் மெலிதாப் பார்க்கப் போகின்றோம். இப்பகுதியில் கூறப்படப் போகின்ற முக்கிய விடயத்தினை 'ஹாக்கிங் கதிர்வீச்சு' என்று கூறுவார்கள். அந்த வித்தியாசமான கருத்தினைத்தான் இனித் தொடரும் பகுதியில் இருந்து பார்க்கப் போகின்றோம்.

## பேரண்டம் - 70

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கருந்துளைகள் முற்றும் கருமையானவை யல்ல

என்ன, தலைப்புக் கொஞ்சம் வித்தியாசமான-தாக, முரணானதாக இருக்கின்றதே எனப் பார்க்கின்றீர்களா? 'ஹாக்கிங் கதிர்வீச்சின் விளைவாக கருந்துளைகளுக்கான சிறப்பான இயல்புதான் 'கருந்துளைகள் முற்றிலும் கருமையானவையல்ல' என்ற விளக்கம். பௌதீகத்தின் அல்லது இயற்கையின் தன்மையும் அப்படியானதுதான் பொருள் ஒன்று இப்படியாக ஒன்றுக் டிகான்று முரணாண தன்மையில் காணப்படுவதை அல்லது நடப்பதை முரண்நேர்மை என்கின்றோம். ஆங்கிலத்தில் இதனை Paradox என்கின்றார்கள். எடுத்துக் காட்டாக, ஒளியினை அலைவடிவினது என்றும், துணிக்கைகளால் ஆனது என்றும் இரண்டு முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. இரண்டு இயல்புகளையும் ஒளியின் நடத்தைகள் திருப்தி செய்வதால் ஒளியினை அலைவடிவினது எனவும், கற்றை அல்லது துணிக்கை வடிவினது என்றும் கூறி, ஒளியானது இருமை (dual) தன்மையது என்போம். அதுபோன்ற ஒரு நிலைக்குள் கருந்துளைகள் வருவதால் 'கருந்துளைகள் முற்றிலும் கருமையானவையல்ல' என்ற பதம் பொருத்தமானதாக உள்ளது. அதனையே இப்பகுதியில் நாம் பார்க்கப் போகின்றோம்.



கருந்துளைகள் கருமையானவை என்பதில் எந்தவொரு கருத்து வேறுபாடும் இல்லை. ஏனெனில் கருந்துளையினுள் எந்தவொரு பொருளும் அல்லது கதிர்வீச்சுச் சக்தியும் உள்ளே செல்லுமே தவிர அதில் இருந்து வெளியே தப்பி வரமுடியாது என்பது எமக்கெல்லாம் தெரிந்த விடயம். அதன்படி, கருந்துளைகள் எந்தவொரு கதிர்வீச்சுச் சக்தியையும் தன்னுள் உறிஞ்சிக் கொள்வதால், வெப்ப இயக்கவியலின்படி, கருந்துளை ஒன்றினை கரும்பொருள் எனக் கூறலாம். வெப்பவியக்கவியலின்படி, கருந்துளை என்றால் என்னவென்று மென்மையாகத் தெரிந்து கொள்வோம்.

கதிர்வீச்சுச் சக்திகள், (எடுத்துக்காட்டாகவும் வசதியாகவும் ஒளியை எடுத்துக் கொள்ளுவோம்.) பொருள் ஒன்றில் படும்போது, அப்பொருளின் மேற்பரப்பில் தெறிப்படையும் தன்மையைக் கொண்டிருக்கும் அல்லது அப்பொருளின் ஊடாகச் செல்லும் அல்லது அப்பொருளினால் உறிஞ்சப்படும் அல்லாது விடின் இவற்றில் சிலவோ அல்லது எல்லாமுமே நடக்கும். இது எங்களது பட்டறிவின் ஊடாக எமக்குத் தெரிந்த விடயம். தனியவே அப்பொருள் அக் கதிர்வீச்சினை முற்றாகவே உறிஞ்சுமாயின் அதனை கரும்பொருள் என்கின்றார்கள். அதாவது தன்மீது விழும் எல்லாக் கதிர்வீச்சுக்களையும் முற்றாகவே உறிஞ்சிக் கொள்ளும் பொருளினை நிறைவான கரும்பொருள் என்பார்கள். எனவே, எல்லாவற்றினையும் உறிஞ்சிக் கொள்ளும் வல்லமை படைத்த கருந்துளைகளும் நிறை கரும்பொருட்கள் போன்றவையே இந்த நிறை கரும்பொருட்களுக்கு இன்னொரு சிறப்பான இயல்பும் உண்டு. கரும்பொருட்கள் தமது சூழலுக்கு கதிர்வீச்சுக்களை வீசுகின்றவை. இதனைக் கரும்பொருட் கதிர்வீசல் என்பார்கள். இது எப்படியெனில் கரும் பொருட்கள் கதிர்வீச்சுச் சக்தியினைப் பெறுவதால் அவை சூழலையும் விட வெப்பமாக இருக்கக் கூடியன. அவ்விதம் சூழலையும் விட வெப்பமாக இருந்தால் அவை சூழலுக்குச் சக்தியினைக் கதிர்வீச்சுக்களாக வீசுகின்றன. இதுதான் கரும் பொருட் கதிர்வீசல்.

கருந்துளைகளும் எல்லாவற்றினையும் உறிஞ்சிக் கொள்வதனால், சூழலையும் விட சற்று வெப்பமானவைதான். கருந்துளைகளில் இருந்து பொதுவாகவே எதுவும் வெளியேறாதவை என்பதால் கருந்துளைகள் குளிராகத்தான் இருக்க வேண்டும். ஆனாலும் எமது பேரண்டத்தின் கணிக்கப்பட்ட வெப்பநிலையான, தனிப் பூச்சிய வெப்பநிலைக்கு மேல் 2.7 பாகை கெல்வினையும் விடச் சிறிது உயர்வான வெப்பநிலையிலேயே கருந்துளைகள் இருக்கின்றன. அப்படியாயின் கருந்துளை களும் கரும் பொருட்களைப் போல் சக்தியை வீசவேண்டுமல்லவா!. ஆனால் இயல்பில் கருந்துளைகள் தம்மைவிட்டு எதனையும் செல்ல விடாதவை என்பது எமக்குத் தெரிந்த விடயம். அப்படியாயின் எப்படியிது சாத்தியமாகக் கூடும்? நியாயமான இக்கேள்விக்குப் பதில் தர 'குவாண்ரம் கொள்கை'யின் துணையினை வல்லுனர்கள் நாடுகின்றார்கள். குவாண்ரம் கொள்கையினை தமிழில் சிலர் கற்றைக் கொள்கை எனக் கூறினாலும், நான் வசதி யாகக் குவாண்ரம் என்ற பதத்தினையே பாவிக்கின்றேன்.

அடுத்த தடவையில் குவாண்ரத்தையும் சார்பியலையும் எம்மட்டில் ஒப்பிட்டுப் பார்ப்போம்.



- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com






# Fantasy Land

02ஆம் பக்கத்தொடர்ச்சி

# அமெரிக்கப் பயணம் - 9

விநோத நிலப்பகுதியில் குழந்தைகளைக் கவரக்கூடிய பல காட்சிச் சாலைகள் உண்டு. இவையாவும் அவர்கள் வாசிக்கும் கதைகளை அடிப்படையாக வைத்தே, அமைக்கப்பட்டுள்ளன. எனினும் பெரியவர்களும் இவற்றைப் பார்த்துக் பரவசமடைகிறார்கள். ஒவ்வொரு காட்சிச்சாலையும் பல்வேறு தொழிநுட்பக் கருவிகளையும் பொம்மைகளையும் கொண்டு பல வல்லுனர்களால் அமைக்கப்பட்டுள்ளன. இவை உயிருள்ளவை போன்று தத்தருபமாக அமைக்கப்பட்டிருப்பது வியக்க வைக்கிறது.

## - துறையூரான் -

இங்கேயுள்ள காட்சிச்சாலைகள் வருமாறு :-

1. ஸ்நோ வைற்றின் திகிலூட்டும் பயணம்.
2. ஸ்நோ வைற்றின் நந்தவனக் குகை.
3. பினாக்கியோவின் பயங்கரப் பிரயாணம்.
4. டம்போ என்ற பறக்கும் யானை.
5. கேசியின் சாகசத் தொடர் வண்டி.
6. மிஸ்டர் றோட்டின் திகில் சவாரி.
7. விநோத உலகில் அலிஸ்.
8. பைத்திய தேநீர் விருந்து.
9. பீற்றர் பானின் பறத்தல்.
10. உறங்கும் அழகியின் மாளிகை.
11. ஆர்தர் அரசரின் கூடாரம்.
12. பிபிடி பொபிடி கடை.
13. டிஸ்னி அரசகுமாரியின் கற்பனைச் சந்தை.
14. இது ஒரு சிறிய உலகம்.
15. மற்றஹோனின் இழுவண்டி.
16. கதைபுத்தக உலகு.

இவற்றைத் தவிர இங்கு பல உணவுச் சாலைகளும் சிறுவர்களைக் கவரும் விநோதமான பொம்மைகளும் விளையாட்டுப் பொருட்களும் விற்கும் கடைகளும் உள்ளன.

**நாளைய நிலப்பகுதி** - (Tomorrow Land)
இது மஜிக் இராட்சியத்திலுள்ள 5 திட்டமிடப்பட்ட பூங்காக்களில் ஒன்று. இது ஜுலை 17, 1955 இல் ஆரம்பிக்கப்பட்டது. வோல்ற் டிஸ்னி தனது தொலைக் காட்சி நிகழ்ச்சிகளுக் கூடாக எவ்வாறு உலகின் எதிர்காலம் இருக்குமென்பதை அமெரிக்க மக்களுக்கு எடுத்துக் காட்டினார். அவற்றின் செயல் வடிவமே இந்தப் பகுதி. இக்காலத்தில் விஞ்ஞானிகள் விண்வெளி ஆய்வில் ஈடுபட்டு, இதுவரை தெரியாத பல விடயங்களை வெளிப்படுத்திய வண்ணம் உள்ளனர். இவ்வாறான புதிய உலகில் சஞ்சரிக்கும் வாய்ப்பை இங்கு பார்வையாளர் பெறலாம்.

**நாளைய நிலப்பகுதி** - 1955 - 1967
ஆரம்ப காலத்தில் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்ட காட்சிச்சாலைகளில் பலவற்றை மட்டும் பூரணப்படுத்தினர். இதுவே கடைசியாகக் கட்டப்பட்ட பூங்காவாகும். இதில் 1986 இல் இருக்கும் ஒரு நகர் வடிவமைக்கப் பட்டிருந்தது. மொன்சான்ரோ நிறுவனம், அமெரிக்கன் மோட்டோர்ஸ், றிச்பீல்ட் ஒயில், டச்போய் பெயின்ற் ஆகிய முக்கிய நிறுவனங்களும் வேறு சிலவும் இங்கே காட்சிச்சாலைகளை அமைத்திருந்தன.

ஆரம்ப காலத்தில் 'கடலின் கீழ் 20,000 அடி ஆழத்தில் என்ற படத்திற்காக டிஸ்னி தயாரித்த 'நோட்டிலஸ் (Nautilus) இன் காட்சிப்பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. நாளடைவில் இப்பகுதியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு புதிய காட்சிச்சாலைகள் அமைக்கப்பட்டன.



1950 இல் 'விண்வெளியில் மனிதன்' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குத் தயாரித்த 'TWA மூன்லைனர்' என்ற கட்டிடம் யாவரையும் கவர்ந்தது. இது உறங்கும் அழகியின் மாளிகையை விட உயரமாக இருந்தது. 'ஓட்டோப்பியா' (Autopia) என்ற வருங்காலத் தேசிய நெடுஞ்சாலைகளின் அமைப்பு, ஆரம்ப காலங்களில் பார்வையாளர் கவனத்தை ஈர்த்தது. இது இன்றும் பல மாற்றங்கள் காலத்துக்குக் காலம் செய்யப்பட்டுக் காணப்படுகிறது.

1959 இல் எதிர்கால மொன்சான்ரோ வீடு என்ற அமைப்பு நடுவில் தூணமைத்து நான்கு சிறகுகளைக் கொண்டு பிளாஸ்திக்கால் கட்டப்பட்டிருந்தது. உலக கண்காட்சிச் சந்தைகளில் இவ்வாறான சகல வசதிகளும் அமைந்த வீடுகளை பின்பற்றி அமைக்கப்பட்டது. ஆனால் இவ்வீட்டில் படத் தொலைபேசிகள், தொலைக்காட்சி தூர இயக்கிகள், மைக்குறோவேவ் அடுப்பு ஆய புதிய பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1959 இல் மூன்று முக்கிய கவர்ச்சி நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டன. அவையாவன டிஸ்னி மொனோ றெயில் நீர்மூழ்கிக் கப்பல் பயணம், மற்றஹோண். கடைசி நிகழ்ச்சி பின்னர் விநோத நிலப்பகுதிக்கு மாற்றப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் சேர்க்கப் பட்ட போது நிறைய தொலைக்காட்சியில் காட்டப்பட்டு, டிஸ்னி உலகின் இரண்டாம் திறப்பு விழாவெனப் பாராட்டப்பட்டது. இதன் பின்னர் வோல்ற் டிஸ்னி தனது முழுக் கவனத்தையும் புதிய நாளைய நிலப்பகுதி களிலும், புளோறிடா செயற்றிட்டத்திலுங் கூடிய கவனஞ் செலுத்தினார். பின்னையது வோல்ற் டிஸ்னி உலகாகப் பரிணமித்தது.

**நாளைய நிலப்பகுதி** - 1967 - 1998
புதிய இப்பகுதி திறப்பதற்கு ஏழு மாதங்களுக்கு முன் டிசம்பர் 1966 இல் வோல்ற் டிஸ்னி காலமானார். 1967 இல் இப்பகுதி முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டு புதிய காட்சிச்சாலைகள் அமைக்கப்பட்டன. முன்னேற்றக்கூடம், உள்ளரங்க விண்வெளிப்பயணம், வட்டப்பார்வை அரங்கம், சந்திரமண்டலப் பிரயாணம், மக்களை ஏற்றிச் செல்லும் ஊர்தி ஆயன புதிதாகச் சேர்க்கப்பட்டன. பின்னையது 1973 இல் மாற்றமடையத் தொடங்கியது.

1974, அமெரிக்காவின் இரு நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் அண்மிப்பதைக் கருத்தில் கொண்டு டிஸ்னியின் வடிவமைப்போர், அங்கிருந்த கூடார அரங்கில் 114 உயிரூட்டப்பட்ட விலங்குப் பொம்மைகளை வைத்து 'அமெரிக்கா பாடுகிறது' என்ற பாடல் கலைநிகழ்ச்சியை உருவாக்கினர். சந்திரப் பயணத்தை மாற்றி செவ்வாய்ப் பயணம் என்பதை உருவாக்கினர். இதன் பின்னர் உண்மை யான செவ்வாய்ப்பயணம் நாசாவால் மேற்கொள்ளப்பட்டது.



1975, டிஸ்னி தீர்மானித்திருந்த 'விண்வெளித் துறைமுக வேலைகள் ஆரம்பமாகின. இத்திட்டம் 1977 இல் 'விண்வெளிமலை' என்ற பெயருடன் திறந்து வைக்கப்பட்டது. அதேவருடம் அதிவேகச் சுரங்கப்பாதையும் கட்டப்பட்டது. 1984 இல் வட்டப்பார்வை அரங்கில் 'அழகான அமெரிக்கா' என்ற படத்துக்குப் பதிலாக 'அமெரிக்கப் பயணங்கள்' என்ற படம் காட்டத் தொடங்கினர். இரண்டு வருடங்களின் பின் 'நட்சத்திரப் பயணங்கள்', கப்டன் E.O என்ற இருபுதிய நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 'நாளைய நிலப்பகுதியில் மேல்தள உணவுச்சாலை திறக்கப்பட்டது இது தென்கலிபோனியப் பதின்மவயதினரைக் கவர்ந்த ஓர் இடமாக மாறியது. வார இறுதி நாட்களில் இவர்கள் கூட்டங் கூட்டமாக இங்கு வரத் தொடங்கினர். இதனால் பல அசம்பாவிதங்களும் ஏற்பட்டன. வன்முறைக் குழுக்களும் தலைகாட்டத் தொடங்கின 1998 இல் இவ்விடம் மறு சீரமைப்புக்காகத் தற்காலிகமாக மூடப்பட்டது.

**நாளைய நிலப்பகுதி** 1998
இது 1998 இல் மீண்டும் திறக்கப்பட்டது. பொன்னிறம், கடுங்கபிலம், வெண்கலம் ஆகிய நிறங்களால் காட்சிச்சாலைகள் நிறம் பூசப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளித்தன. 'றொக்கஸ் றெட் என்ற வேகவண்டி புதிதாகச் சேர்க்கப்பட்டது. மூன்றாண்டு களின் பின் தொழிநுட்பக் கோளாறினால் இது அகற்றப்பட்டது. வட்டப்பார்வை அரங்கம், கப்டன் E.O, செவ்வாய்ப் பயணம் ஆயனவும் அகற்றப்பட்டன. செவ்வாய் பயணம் இருந்த இடத்தில் ஒரு புதிய உணவுச்சாலை அமைக்கப்பட்டது. 'அமெரிக்கா பாடுகிறது' என்ற கலை நிகழ்ச்சி 'இன்னோவென்ஷன்ஸ்' என்ற புதிய கலைநுட்ப நிகழ்ச்சியாக மாற்றியமைக்கப்பட்டது.

**இன்றைய நிலை**
2003 இல் மற் ஓய்மெற் என்பவர் டிஸ்னி உலகின் தலைவராக பதவியேற்றுப் பல வருவாய் குறைவான காட்சிச் சாலைகளை மூடியும், மாற்றியும் அமைத்தார். விண்வெளி மலை இரு ஆண்டுகளுக்கு மூடப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டது. பெப்ரவரி 2005 இல் 50ஆம் ஆண்டுக் கொண்டாட்டங்களுக்காக இந்நிலப்பகுதி முழுவதும், நீலம், வெள்ளை, வெள்ளி ஆகிய நிறங்களால் பூசப்பட்டது. 2007 இல் நீர் மூழ்கிக் கப்பல் பிரயாணம் நீமோவைத் தேடும் பிரயாணமெனப் பெயரிடப்பட்டது.

2007இல் டிஸ்னி நிலப்பகுதியிலிருந்த தொடர் வண்டிகள் (Monorails) புதிய வண்டிகளால் மாற்றீடு செய்யப்பட்டன. ஜனவரி 2010 இல் கப்டன் E.O கூடம் மீண்டும் திறக்கப்பட்டு மைக்கல் ஜக்சனின் 3டி படம் காண்பிக்கப்படுகிறது. இவ்வாறு பல கேளிக்கை, விநோதம், ஆச்சரியம், பிரமிப்பு, உவகை, திகில், பயம் என்ற பல்வேறு குணவியல்புகளை அனுபவிக்கும் ஓர் இடமாக டிஸ்னி உலகம், உலக மக்களை ஈர்த்த வண்ணமுள்ளது.

இவற்றைப் பார்த்து அனுபவிக்கக் குறைந்தது 10 நாட்களாவது தேவை.

- முற்றும் -

# உடல் உள் உறுப்புக்களை சுத்தம் செய்தல்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

நமது உடலில் சேரும் கழிவுகளை நாம் தினம்தோறும் வெளியேற்ற வேண்டும். அப்படி வெளியேற்றாவிட்டால் இரத்தம் அசுத்தமாகி நரம்புமண்டலங்கள் பாதிக்கப்பட்டு நோய்கள் உருவாகின்றன. கழிவு மண்டலம் நமது உடலில் நான்குவிதமான கழிவுகளை வெளியேற்றுகின்றது. (1) வாயுவாக (2) மலமாக (3) சிறுநீராக (4) வியற்வையாக வெளியேறுகின்றது. இதில் ஏதாவது தடைகள் ஏற்பட்டால் வியாதிகள் உருவாகி முடிவில் மரணமும் ஏற்படக்கூடும்.

எனவே மேற்கூறிய கழிவுகளை உடலில் தேங்காது ஆறுவிதமான பயிற்சிகள் மூலம் சுத்தம் செய்யலாம்.

(1) **கபாலபாதி கிரிகை**

தலையின் உட்பகுதிகள், மூச்சுப்பாதைகள் ஆகியவற்றைச் சுத்தம் செய்யும் பயிற்சி முறைகள்.

**பலன்கள்**

(1) மூச்சுக்குழல், சுவாசப்பைகள் என்பனவற்றைச் சுத்தப்படுத்தி மூச்சடைப்பு போன்ற சுவாசக்கோளாறுகளைப் போக்குகின்றது.

(2) இரத்தத்திலிருந்து காபனீர் ஒக்சைட்டை வெளியேற்றுகின்றது.

(3) மூளையின் செல்களைத் தூண்டி விடுகின்றது.

(4) இரத்த ஓட்டத்தை துரிதப்படுத்துகின்றது.

(5) ஆஸ்துமா (Asthma) நோயை குணமாக்குகின்றது



(6) ஞாபக சக்தியை வளர்த்து மனதை ஒருமுகப்படுத்த உதவுகின்றது.

குறிப்பு: இதை யோகாசன நிபுணரின் உதவியுடன் பழகுவது சிறந்தது.

**வாமன தௌதி கரிகை**

பல நோய்களைக் குணமாக்கும் இந்தப் பயிற்சியின்போது வாந்தி எடுத்தல், வயிறு கழுவப்படுதல் இரண்டும் ஏக காலத்தில் நிகழ்கிறது.

**பலன்கள்**

(1) மலச்சிக்கல், அஜீரணம் என்பனவற்றைப் போக்குகின்றது.

(2) சிறுநீரகம் பலம் பெறுகிறது. அதனால் சிறுநீரகக் (Kidney) கோளாறுகள் சரி செய்யப்படுகின்றது.

(3) ஆஸ்துமா நோய்க்கு நிவாரணம் அளிக்கின்றது.

(4) உடல் எடையைக் குறைக்கின்றது.

(5) பெருங்குடல், சிறுகுடல் என்பவற்றினிலிருந்து கழிவுகள் முழுமையாக வெளியேற்றப்படுகின்றது.
(6) வாயுத்தொல்லைகள் அனைத்தும் நீங்குகின்றது.

(7) பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் சரி செய்யப்படுகின்றது.

**குறிப்பு**

இந்த கிரிகை முறையை காலையில் வெறும் வயிற்றில் செய்யவேண்டும். இதன் செய்முறைகளை ஒரு யோகாசன சிகிச்சை நிபுணரின் உதவி மூலம் தெரிந்து கொள்ளவும்.

**பஸ்தி**

"உடலைக் கழுவுமுன் குடலைக் கழுவுங்கள். குடலை வளர்த்து உடலை வளையுங்கள்." -இது அகத்தியர் திருவாக்கு. இதற்கு உட்டியான, நௌலி ஆகிய பயிற்சிகள் துணைபுரிக்கின்றன. இவற்றை அனைவரும் இலகுவாக செய்யமுடியும்.

**பலன்கள்**

குடலின் முழுப் பகுதியையும் சுத்தம் செய்யப்பட்டு பழைய மலம், தேங்கியிருக்கும் சிறு, சிறு இரத்தக் கட்டிகள், கற்கள், அடி வயிற்றில் தேங்கியிருக்கும் நச்சுப் பொருட்கள், அசுத்தமான அமிலங்கள், கெட்ட நீர்ப் பதார்த்தங்கள் அனைத்தும் வெளியேற்றப் படுவதால் பல கொடிய வியாதிகளிலிருந்து விடுதலை கிடைக்கும். அத்துடன் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும்.

உடலிலிருந்து வீசும் வியர்வை நாற்றம் வாய் துர்நாற்றம் என்பன நீங்குகின்றது.

**முக்கிய குறிப்பு**

மேற்கூறிய பயிற்சிகளை யோகாசன நிபுணரின் உதவியுடன் மட்டுமே தெரிந்நுது செய்யவேண்டும். அதிக பலன் தரக்கூடிய இப்பயிற்சிகளை மிகவும் கவனமாகவும் அவரவர் உடல் நிலைக்குத் தக்கவாறும்.





Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm



$100 $250 $100

$100 $100

## Ontario Vegetarian Food Bank

www.vegfoodbank.ca

தொண்டர் சேவை மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பு - Employment

$250 $250

ODSP, Welfare வருவாயில் தாங்கி இருப்பவர்களாயின் எமது நிறுவனத்துடன் பதிவு செய்து தொண்டாற்றும் பொழுது எமது தொழில் வேலைவாய்ப்பு ஆலோசகர்கள் உங்களை உங்கள் தகைமை, திறமைக்கேற்ற தொழில் பயிற்சி அளித்து உங்களை ஆயத்தம் செய்வார்கள்.

$100 $100

எந்தவித ODSP, Welfare சம்பந்தமான உங்கள் பிரச்சினைகளுக்கும் இலவச ஆலோசனை வழங்கப்படும், மொழி பெயர்ப்பு சேவை உட்பட உங்களால் முடிந்தவரை தான தர்மம் செய்யுங்கள். நீங்கள் உண்ணும் பொழுது ஒருகைபிடி அடுத்தவருக்கு கொடுத்து உண்ணுங்கள்.

$250 $250

**தானமும் தர்மமும் தான் எமது தலைமுறையை வாழவைக்கும், வழிப்படுத்தும் வளப்படுத்தும்.**

$250 $250

உணவுத்தானம் செய்ய விரும்புவர்கள் உங்கள் கைகளால் பசித்திருப்பவர்களுக்கு உணவைக் கொடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**தானம், தர்மம், தொண்டு**

$100 $100

**குமரன் - *(416)744 HELP (4357)***

*2370 Midland Ave. #B5 / Sheppard*

*2400 Finch Ave. West / Weston #10*

அலுவலக நேரம் 10am to 6pm Mon. - Sat.

$250

$100 $250 $100



## நீரிழிவு நோய்க்கு நிலையான தீர்வு

**விசேஷ பொதி + DVD**

**Special Package For Healing Diabetes**

1. நீரிழிவு யாருக்கு வரலாம்
2. நீரிழிவு நோயாளிகள் தெரிந்துகொள்ள வேண்டியவை
3. நீரிழிவை வெல்லும் யோகாசன சிகிச்சை முறை
4. தகுந்த உடற் பயிற்சிகள்
5. முறையான உணவுத் திட்டம்
6. நீரிழிவு - தாம்பத்தியம், குழந்தை பாக்கியம்
7. நீரிழிவு - பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை
8. சிறுவர்களும் நீரிழிவு நோயும் (**Childhood Diabetes**)
9. நீரிழிவை நிர்மூலமாக்கும் சித்த மருத்துவம்
10. இதைவிட மிஞ்சும் இயற்கை மருத்துவம்

1 நாள் பயிற்சி முகாம்

தொடர்புகளுக்கு



யோகரத்னா N. செல்வசோதி

**Home: 416 - 289.2033**

**Cell: 416 - 617.5721**

# தமிழ் செம்மொழி மகாநாடு

## கடந்த இதழ் தொடர்ச்சி

பலரைச் சந்திப்பதற்கான நல்ல வாய்ப்பு: நமது சொற்கோவைக்குழு வெளியீட்டினில் 50 பிரதிகளை என்னுடன் எடுத்துச் சென்றேன். இந்தச் சொற்கோவையினை நாம் வெளியிட்டதன் நோக்கமே மொழிபெயர்ப்பினில் ஒரு ஒருமைப்பாடு தமிழ்பேசும் இடங்கள் எங்கும் இருக்க வேண்டும் என்பதாகும். ஆகவே பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர் மூலம் இதனை செயற்படுத்தலாம் என குழுவினர் கருதினார்கள். யாழ்ப்பாணப் பேராசிரியர்கள் தமிழகத்தில் இருந்து வந்தவர்கள் மற்றும் மலேசியா சிங்கப்பூரிலிருந்து வந்தோர்களுக்குக் கொடுக்க முடிந்தது. அந்த முயற்சியைப் பெரிதும் பாராட்டினார்கள். யாழ். பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்கள் ஞானகுமாரன், சோதிராஜா போன்றோர் மேலும் பிரதிகள் கேட்டதுடன் தமது கருத்துக்களை அனுப்பிவைப்பதாகவும் கூறிச் சென்றார்கள்.

எனது மாணவன் பேராசிரியர் புஷ்பரத்தினம். அவன் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் என்னிடம் கற்றுப் பல்கலைக் கழகம் புகுந்தவன். இப்போ அகழாய்வுத்துறைப் பேராசிரியராக உள்ளான். முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முதலாகச் சந்தித்தேன். இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்காவிட்டாலும் இடையில் உள்ளோர்கள் மூலம் ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து கொண்டிருந்தோம் என்பதால் நீண்டகாலத்திற்குப் பின் சந்திக்கின்ற உணர்வு ஏற்படவில்லை. ஒருவரை ஒருவர் சுலபமாக அடையாளம் கண்டு கொண்டோம். பழைய நினைவுகளை மீட்க முடிந்தது.

தினசரி காலை 8:00 மணிக்கெல்லாம் குளிரூட்டிய பேருந்து நமக்காக வந்து காத்து நிற்கும். ஆகவே அவசர அவசரமாக எமது காலைப் போசனத்தினை முடித்துக் கொண்டு புறப்பட்டு விடுவோம். ஓட்டுனர்களும் நடத்துனர்களும் மிகவும் கண்ணியமானவர்கள். மிகவும் அன்பாக நடத்தினார்கள். எவரும் முகம் கோணமுடியாதபடி நடந்தார்கள்.

மதிய போசனம் எமக்கு விழா நடந்த மண்டபத்துக்கு அருகே. பின்னர் மாலையில் அரங்குகள் முடிவுற்றதும் எம்மை அழைத்துப் போவார்கள் அல்லது இரவு கலை நிகழ்ச்சிகள் பார்க்க விரும்புவோர் தங்கி அவை முடிந்தபின்னர் வதிவிடம் செல்வதற்கும் ஒழுங்குகள் இருந்தன. உண்மையைக் கூறுவதானால் நான் அரங்கநிகழ்ச்சிகள் முடிவுற்றதும் வதிவிடம் வந்து விடுவேன். காலையில் போய் இரவு 9:00 மணிவரை தங்கி நிற்பது எனக்குக் கஷ்டமாக இருந்தது.

இரவு உணவின் போதும் அதற்குப் பின்னரும் எல்லோருடனும் சாவகாசமாகப் பேசுதற்கு நிறையவே வாய்ப்புக் கிட்டியது. நிறையவே யாழ்ப்பாணத்தோரும் கீழ்மாகாணத்தினைச் சேர்ந்தோரும் அங்கே இருந்தமையால் நாட்டு நடப்புகள் பற்றி நிறையவே பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கே பேசியதை இங்கே எழுதினால் சிலர் தண்டெடு தடியெடு என வந்து விடுவார்கள். ஆகவே வேண்டாம்.

அன்று இரவு உணவருந்தப் போனேன். புஷ்பரத்தினம் உணவருந்திக் கொண்டிருந்தார். முதுகிலே ஒரு அடி விட்டு எங்களுக்கும் வேணும் மிச்சம் வை என்றேன். ஏதோ பெரிய நகைச்சுவை போல நான் சிரித்துக்கொண்டு நகரந்தேன். அவர் முறைத்தபடி என்னைப் பார்த்தார். தவறு விட்டு விட்டேன் என்பது தெரிந்தது. அவர் புஷ்பரத்தினம் அல்ல புஷ்பரத்தினம் கொஞ்சம் கறுவல் வட்டத்தலை. ஆகவே நான் இவரைத் தவறுதலாக புஷ்பரத்தினம் என்ற எண்ணி விட்டேன். அவர் வாய்க்குள் இருந்த உணவு உள்ளே போயிருக்க வேணும் எனது அடியில். மன்னித்துக் கொள்ளுங்கள். நான் புஷ்பரத்தினம் என எண்ணி விட்டேன் என்றேன். பரவாயில்லை பரவாயில்லை. இன்னொரு முறை அப்படி எண்ணாவிட்டால் போதும். உண்டது ஜீரணித்து விட்டது என்றார். இப்போ தனது நகைச் சுவைக்காக அவர் நகைத்தார். நான் அசடு வழிந்தேன்.



மதிய போசனம் விழா அரங்கினுக்கு அண்மையில் உள்ள ஒடிசி வளாகத்தில் வழங்கப் பெற்றது. தாவர உணவும், மாமிச உணவும் தாராளமாக இருந்தன. வேண்டிய மட்டும் உண்ணலாம். நம்ம தரவளிகள் ஒரு பிடி பிக்கலாம். ஆனால் பாவம் பேராசிரியர் சுப்பிரமணியன் இரவு வரை சிவ பட்டினி. சாப்பாடு இல்லாமல் இல்லை. ஆனால் இரண்டு வகை உணவுகளும் அருகருகே என்றபடியால் ஐயாவுக்கு மணம் குமட்டியது. அத்தனைக்கும் இடம் மிகவும் துப்புரவாக இருந்ததைக் காண முடிந்தது. தரையோ மேசைகளோ பளிச்செனத் தூய்மையாக இருந்தன. துடைப்பமும் கையுமாக உணவருந்துவோரைச் சூழப் பணிப் பெண்கள்.

நான் கொடுத்து வைத்தவன். உணவு எடுப்பதற்காக வரிசையில் நிற்க வேண்டியதில்லை. எனது பிள்ளைகள அல்லது நண்பர் சிவபாலு எனது உணவில் மிகவும் கவனம் எடுத்தார்கள். சிவபாலு தாவர உணவூட்டுபவர். என்னை ஆசனத்தில் உட்கார வைத்து விட்டு வரிசையில் நின்று உணவினை எடுத்துக் கொண்டு வந்தார். ஒரு கையில் இருந்த மாமிச உணவுத் தட்டினை என்னிடம் தந்தார் மற்றையதில் தாவர உணவு. ஆசனத்தில் அவர் அமர்ந்த போதுதான் கரண்டி என்றேன் நான். அடடே மறந்து விட்டேன் இதோ வருகிறேன் என்று கூறிவிட்டுப் போனவர் கரண்டியுடன் வந்து பார்த்த பொழுது அவரது உணவுத் தட்டு மாயமாகி விட்டது. நான் ஏதோ யோசனையில் இருந்து விட்டேன். சுத்திகரிக்கும் பெண்மணி அதனைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார். அத்தனை மேசைக் கரிசனம்.

அட என்ற எனக்குச் சிரிப்பு வந்தது. நினைவு பின்நோக்கி ஓடிற்று 1974 ஆம் ஆண்டினிலே யாழ்ப்பாணத்தில் நாலாவது தமிழ்விழா நடைபெற்றது. வெகு விமரிசையாக யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் மூன்று நாட்கள் நடைபெற்றது. அக்காலத்து தமிழகத்தின் மிகச் சிறந்த பேச்சாளர்கள் அத்தனை பேரும் தி.மு.க. தவிர, யாழ்ப்பாணம் வந்து உரை நிகழ்த்தினார்கள். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவினுக்கு அமரர் கல்கியும் பெரியசாமித் தூரன் அவர்களும் இணைச் செயலாளர்களாகக் கடமையாற்றினர்கள். ஆரம்ப திட்டமிடல் வேலைகளுக்காக யாழ்ப்பாணம் வந்த கல்கி அவர்கள் இந்தியா திரும்பியதும் இலங்கைப் பயணம் பற்றி ஒரு தொடர் எழுதினார். அதில் யாழ்ப்பாணத்தின் துப்புரவு பற்றி எடுத்துக்காட்டுதற்கு வேடிக்கையாக ஒரு நிகழ்ச்சியினைக் குறிப்பிட்டார். தான் யாழ்ப்பாணத் தெரிவின் ஊடாக நடந்து சென்றாராம் அப்போது தனக்கு வீட்டில் இருந்து வந்த கடிதத்தினைப் பிரித்து வாசிக்க முயன்ற பொழுது அடித்த காற்று கடிதத்தினைப் பறித்துவிட்டதாம். பறந்த கடிதத்தினைத் தான் எடுத்து வாசிப்பதற்காகத் திரும்பிய பொழுது அதனைக் காண முடியவில்லையாம் இதற்குக் காரணம் தன்பின்னே வந்த சுகாதார பரிசோதகர் (Sanitary Inspector) அக்கடிதத்தினை எடுத்து வீதியோரத்தில் இருந்த குப்பைத் தொட்டியுள் போட்டு விட்டுச் சென்றாராம் என எழுதியிருந்தார் கல்கி அவர்கள்.

பரிதாபமாக மீண்டும் போய் வரிசையில் நின்று தனது உணவினைப் பெற்றுக் கொண்டு வந்த சிவபாலுவுக்கு இந்தக் கதையைச் சொன்னேன். அவர் காதில் ஏறியதோ தெரியவில்லை. அத்தனை பசிக் கொடுமையில் உணவுத் தட்டினை விழுங்காத குறை.

உசுப்புகிற சிந்தனைகள் எள்ளளவும் மனக்குறுகுறுப்போ தயக்கமோ இல்லாமல் ஒரு குடும்பத் திருவிழாவாக செம்மொழி மகாநாட்டினை கருணாநிதி அரசு நடத்தி முடித்துள்ளது என்ற பொருள்பட திரு அ. மார்கஸ் அவர்கள் 'தீராநதி' என்கிற சஞ்சிகையின் ஆகஸ்டு இதழில் எழுதியுள்ளார். அக்கட்டுரையினை வாசித்த போது மகாநாட்டின் முடிவில் நிகழ்ந்த அறிவிப்புகள் சிலவற்றினையும் ஆய்வு முடிவுகள் சிலவற்றினையும் மார்க்ஸ் வரவேற்பது தெரிகிறது. ஆகவே விழாவினுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதைக் காட்டிலும் கலைஞர் மேல் உள்ள காழ்ப்புணர்ச்சியே அக்கட்டுரையில் மேலோங்கி நிற்பதனைக் காண முடிகிறது. அனேகமான விமர்சனங்களிலும் இத்தகைய உணர்வே பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

பல வருடங்களுக்கு முன்னர் ஒரு சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இராம-ாயணத்தினை ஆபாசம் என்றும் அதனை எரிக்க வேண்டும் எனவும் வாதங்கள் செய்து வந்த பொழுது அவர்களுக்கு விடை பகர்ந்த பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், "ஒரு சிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அழகைப் பாருங்கள், அந்தச் சிற்பி எத்தனை தத்ரூபமாக அந்தச் சிலையினை வடித்துள்ளான் எனப் பாருங்கள். அதை விடுத்து அந்தச் சிலை எந்தக் கல்லில் செதுக்கப் பட்டது என்பதைப் பாராதீர்கள்" என்றார். அதே போன்று தான் இந்த விழா யாரால் எடுக்கப் பட்டது, எந்தக் குடும்பம் அதனில் முன்னிலைப் படுத்தப் பட்டது, யாருக்கு மகுடம் சூட்டப் பட்டது என்பதைப் பாராமல் இந்த விழாவினால் தமிழுக்கு பிரயோசனம் உள்ளதா எனப் பாருங்கள். அப்படிப் பார்த்தால் இந்தத் தமிழ் செம்மொழி மகாநாடு தேவையானது ஒன்றென்பதை உணரமுடியும்.

இது காலம் வரை தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தான் நடத்தி வந்தது என்பது உண்மையே. ஆனால் இதில் தமிழகத்தில் நடந்த முதல் மகாநாடு அண்ணா காலத்திலும், அதன் பின்னர் எம்.ஜி.ஆர். காலத்திலும் அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா காலத்திலும் நடந்த மகாநாடுகள் அரசியல் பின்னணியில் தான் நடைபெற்றன என்பதுடன் அந்த அந்த முதல் அமைச்சர்களின் தூண்டு கோலின் பேரிலேயே விழா எடுக்க தமிழ் ஆராய்சி மன்றம் முன்வந்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே கலைஞர் அவர்களும் தனது பதவிக் காலத்தில் ஒரு விழா எடுப்பதற்கு ஆசைப் பட்டதனைப் பிழை எனக் கூறுமுடியாது. அப்படி ஒரு திட்டத்தினைப் போட்டதும் கலைஞர் முதலில் தமிழக அரசின் மூலம் 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின்' தற்போதைய தலைவராக உள்ள ஜப்பானிய தமிழியல் அறிஞரான நொபோரு கராஷிமா



பொ. கனகசபாபதி
Email: vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 27ஆம் பக்கம்




# இவர்கள் இப்படித்தான்



'களவாணி' படத்தில் நடிக்க, இயக்குநர் பாக்கியராஜின் மகனும் இளம் நடிகருமான சாந்தனுவைத்தான் முதலில் கேட்டிருக்கிறார்கள். கதையைக் கேட்டவர், 'இந்தப் படம் ஓட வாய்ப்பில்லை' என்று மறுத்துவிட்டாராம். இப்போது, 'களவாணி' மிகப்பெரிய வெற்றியடைய 'அநியாயத்துக்கு ஒரு நல்ல வாய்ப்பைக் கெடுத்துக்கொண்டேனே' என்று நண்பர்களிடம் எல்லாம் புலம்பிக்கொண்டிருக்கிறாராம் சாந்தனு.



இயக்குநர் மணிரத்னம் புத்தகங்கள் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். எவ்வளவு நெருக்கடி யான வேலைகள் இருந்தாலும், படிப்பதற்கு என்று குறிப்பிட்ட ஒரு நேரத்தை ஒதுக்கி, தினமும் படிக்கும் பழக்கம் உள்ளவர். தமிழைவிட ஆங்கிலத்தில் வேகமாக வாசிக்கக்கூடியவர் என்பதால், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்களை பற்றி விசாரித்து தேடி வாங்கிப் படிப்பார்.

இயக்குநர் ராம்கோபால் வர்மா, தனியாக ஒரு வலைத்தளம் (http://rgvzoomin.com/) தொடங்கி, அதில் தொடர்ந்து எழுதி வருகிறார். சிறு வயதில் ஒரு கனவுக்கன்னியாக ஸ்ரீதேவி மேல் கொண்ட மோகம், திரைப்பட வாய்ப்புகள் தேடி அலைந்தது தொடங்கி ஆல்பிரட் ஹிட்ச்காக் போன்ற உலக இயக்குநர்கள் தன் மேல் செலுத்திய தாக்கம் வரைக்கும் அனைத்தைப் பற்றியும் எழுதியுள்ளார். ஆச்சரியப்படும் வகையில் ஒரு நல்ல எழுத்துக்காரனாகவும் இதில் வெளிப்படுகிறார் வர்மா.

'களவாணி' படம் வெற்றிக்குப் பிறகு, அதில் கதாநாயகனாக நடித்துள்ள 'பசங்க' விமல் தன் சம்பளத்தை உயர்த்திவிட்டார். 'பசங்க' படத்துக்குப் பிறகு, சீமானிடம் உதவியாளராக இருந்த ஒரு புதுமுக இயக்குநரின் படத்தில் நடிக்க ஆறு லட்ச ரூபாய் சம்பளத்துக்கு ஒப்பந்தமாகி இருந்தார், விமல். அந்தப் படம் படப்பிடிப்பு பல்வேறு காரணங்களால் தள்ளிப்போக, அதற்குள் 'களவாணி'யில்




ஒப்பந்தமாகி படமும் வெளிவந்துவிட்டது. இப்போது, பழைய ஒப்பந்தந்தை மாற்றிவிட்டு

தொடர்ச்சி 40ம் பக்கம்



REALTY EXECUTIVES ®

GTA LTD.

Brokerage.

9889 Markham Rd. (Hwy 48), Suite 209
Markham ON L6E 0B7

Office: 905-209-7500
Fax: 905-209-7501

EXPERIENCE the advantages of working with an EXECUTIVE

Markham/Steeles




Photocopy and Printing business for Sale in a great location. Low rent, modern equipment. Owner will train.

$40,000

Major Mac/Hwy 48



Great Independant Bakery & Take-Out Business. Located In A Busy Plaza On The South-East Corner Of Major Mackenzie & Hwy 48.

$95,000

Markham/Elson




3 Bedroom House for Sale. 2 1/2 washrooms. Great location. Steps to all amenities. TTC and YRT. Walking Distance to Steeles.

$410,000

Victoria/Bayside




Lovely Clean Home W/ Gleaming Hardwood Floor And Ceramic On Main Floor, Open Concept, Laundry On Main Floor, Family Size Eat-In-Kitchen.

$349,900



Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343



Yoga Sivagnanasundaram*
(647)-836-0844



Pravisha Nagaretnam*
(416)-727-7686



Kumaran Pathmanathan*
(647)-273-7359

MLS MULTIPLE LISTING SERVICE

Each Office is Independantly Owned and Operated. *Sales Representative


# ஒலியின் ஒளி

கடந்த சில வருடங்களாக குறும் படங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உலகில் சகல பாகங்களிலுமிருந்து ஒவ்வொரு மாதமும் கணிசமான அளவு தமிழ்க் குறும் படங்கள் வெளிவருகின்றன. இவை அவ்வப்போது பதியப்படுகின்றன. இந்தியாவில் நிழல் சஞ்சிகை இதனை செய்து வருகின்றது. இதில் புலம் பெயர் நாடுகளிலும் இலங்கையிலும் வெளிவரும் படங்கள் இடம் பெறுவதில்லை. இந்தியாவில் குறும் படப் படைப்பாளிகள் வர்த்தக ரீதியான படத்திற்கான முதல் படியாகவே இதைக் கருதுகின்றார்கள். புலம் பெயர் படைப்பாளிகள் பெரும்பாலும் நல்ல கலையம்சத்துடனும், கருத்துரீதியாக தங்களது பாதிப்புக்களை வெளிப்டுத்துவதற்குமான ஊடகமாக இதைக் கருதுகின்றார்கள். அண்மைக் காலங்களில் புலம் பெயர் படைப்பாளிகளது படங்கள் சர்வதேச தரத்தையும் அதே சமயம் இந்திய தமிழ்க் குறும் படங்களை விட தரமுயர்ந்தரவையாகவும் உள்ளன.

இவற்றில் தரமானவற்றை பதிவு செய்வதுடன் அவற்றை பார்வையாளர்கள் பார்க்க ஏற்பாடு செய்வதுமே இக் கட்டுரை தொடரின் நோக்கம். பெரும்பாலான குறும் படங்களை இணையத் தளங்களில் பார்க்கலாம். இல்லையேல் விளம்பரம் இணையத் தளத்தில் பிரதியீடுகளும் செய்ய ஆவன செய்யப்படும். உங்களது கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம்.

## மறைபொருள்



மேற்கத்திய நாடுகள் கீழைத்தேய கலாச்சாரத்தை விமர்சித்தும் கட்டுப்பாட்டுகளும் விதிப்பதனால் சில முறைகள் மீண்டும் முளைக்கின்றன. பொட்டு வைத்தல், பர்தா அணிதல் போன்றவை மீண்டும் துளிர்க்கின்றன. ஒரு முஸ்லீம் பெண் கறுப்பு நிற முழு அங்கி அணிந்து நீதிமன்றத்திற்கு சென்றார். முழு அங்கி அணிந்து செல்வது தன்னை மனரீதியாக பலப்படுத்துகின்றது என்கின்றார். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் கனடாவில் தயாரிக்கப்பட்ட Just a little Red Dot என்ற திரைப்படம். இதனை இயக்கியிருப்பவர் மித்திரா சென். ரொறொன்ரோ நகர பாடசாலையில் பொட்டு அணிந்து சென்ற மாணவிற்கு எதிராக முன்வைக்கப்

தொடர்ச்சி 29ம் பக்கம்


Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com அல்லது
www.tamilexpress.net



TRAFFIC TICKETS - MOTOR VEHICLE ACCIDENTS - CRIMINAL MATTERS summary
SKT PARALEGAL SERVICE
வாகன MOTOR VEHICLE
விபத்து ACCIDENTS
416-803-5296
sktheesan@gmail.com
SKTHEESAN எஸ்.கே.தீசன் கலகலப்பு தீசன் KALAKALAPPU THEESAN

# திருவாலங்காடு - சிவனின் ரத்தின சபை

தமிழகத்திலுள்ள பழங்காலக் கோவில்களும் தர்காக்களும் தேவாலயங்களும் நமது பண்பாட்டு சின்னங்களை தாங்கியே அமைந்துள்ளன. குறிப்பாக, பழந்தமிழரின் கட்டிடக் கலை பெருமைக்கு இன்றும் சான்றாக விளங்குவது கோவில்கள்தான். சைவ, வைணவ திருத்தலங்களில் இவற்றை அதிகம் காணலாம். எனவே, இந்த வழிபாட்டுத் தலங்கள் வழிபடுவதற்கு மட்டுமல்லாமல் நமது பாரம்பரியத்தைத் தெரிந்துகொள்ளவும் நாம் செல்ல வேண்டிய இடங்கள். அப்படி நாம் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று, திருவாலங்காடு.

சென்னைக்கு அருகே, சென்னை - அரக்கோணம் பாதையில் இருக்கிறது திருவாலங்காடு. சைவ சமயத்தின் 276 சிவத்தலங்களுள், தொண்டை நாட்டில் உள்ள 32 சிவத்தலங்களில் 15ஆவது திருத்தலம் திருவாலங்காடு. இங்குள்ள ஆலயம் ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய தொன்மையும் பழமையும் வாய்ந்தது. இறைவன் காளியுடன் நடனமாடிய தலம், காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்து நடராசப் பெருமானின் திருவடிக் கீழிருந்து சிவானந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் தலம். நடராசப் பெருமானின் ஊர்த்தவ தாண்டவத் தலமாகவும் பஞ்ச சபைகளுள் இரத்தினசபையாகவும் சிறப்புற்று விளங்குவது, தேவாரப் பாடல் பெற்ற தலம்... என திருவாலங்காட்டின் சிறப்புகள் மிக நீண்டது. ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**வழிப்போக்கன்**

சும்பன், நிசும்பன் என்ற இரு அசுரர்கள் ஆலமரங்கள் அதிகமாக உள்ள காட்டில் தங்கி தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் துன்பம் விளைவித்து வந்தனர். இதனால் பாதிப்படைந்தவர்கள் சிவ பார்வதியிடம் சென்று முறையிட்டனர். பார்வதி தேவி தன் பார்வையால் காளியை தோற்றுவித்து அரக்கர்களை அழித்து விட்டு, அவளையே ஆலங்காட்டிற்கு தலைவியாக்கினாள். அரக்கர்களை அழித்து அவர்களது ரத்தத்தை உண்ட காளி, அத்துடன் நிற்காமல், பல கோரச் செயல்களை புரிந்தாள். இதனால் இப்பகுதியைச் சேர்ந்த முஞ்சிகேச கார்க்கோடக முனிவர், காளியின் அட்டகாசத்தைக் குறைக்க சிவனை வேண்டினார். சிவன் கோர வடிவம் கொண்டு ஆலங்காட்டை அடைந்தார். அவரை கண்ட காளி, "நீ என்னுடன் நடனமாடி வெற்றிபெற்றால் இந்த ஆலங்காட்டை ஆளலாம்" என்றாள். சிவன் போட்டிக்கு சம்மதித்தார். சிவனும் காளியும் ஊர்த்துவ தாண்டவம் ஆடினர். அப்போது சிவன், தன் காதில் இருந்த மணியை கீழே விழவைத்து, பின் அதை தன் இடக்கால் பெருவிரலால் எடுத்து மீண்டும் தன் காதில் பொருத்தினார்.

பெண் என்ற காரணத்தினால் காளியால் நடனத்தில் இதை போல் செய்ய முடியவில்லை. எனவே காளி, இது போன்ற தாண்டவம் தன்னால் ஆட இயலாது என தோல்வியை ஒப்புக்கொண்டாள். அப்போது காளியின் முன்



தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 81

இறைவன் தோன்றி, "என்னையன்றி உனக்கு சமமானவர் வேறு யாரும் கிடையாது. எனவே, இத்தலத்தில் என்னை வழிபாடு செய்ய வருபவர்கள், முதலில் உன்னை வழிபாடு செய்த பின் என்னை வழிபட்டால் தான் முழு பலன் கிடைக்கும்" என்று வரம் கொடுத்தார். இதனால், திருவாலங்காட்டில் காளி தனி கோயில் கொண்டு அருள்பாலிக்கிறாள். அதற்கடுத்து சிவன் இருக்கிறார்.

திருவாலங்காட்டு சிவன் பெயர் வட ஆரண்யேஸ்வரர். அம்மன் பெயர் வண்டார்குழலி. கோயிலுக்குள் நம்மை அழைத்துச் செல்லும், கிழக்கிலுள்ள ஐந்து நிலை இராஜகோபுரம் அழகிய சுதை வேலைப்பாடுகளுடன் கம்பீரமாக காட்சி அளிக்கிறது. கோபுர நுழைவு வாயிலுக்கு இடதுபறம் ஒரு சிறிய சந்நிதியில் அருள்மிகு வல்லப கணபதி காட்சி தருகிறார். வலதுபுறம் ஒரு சிறிய சந்நிதியில் ஸ்ரீவள்ளி, ஸ்ரீதெய்வானையுடன் அருள்மிகு ஸ்ரீசண்முகர் காட்சி தருகிறார். நுழைவு வாயிலைக் கடந்து சென்றவுடன் நாம் எதிரே காண்பது பலிபீடம், கொடிமரம், நந்தி மண்டபம் மற்றும் மூன்று நிலைகளுடைய இரண்டாவது கோபுரம். இந்த கோபுரத்திலும் அழகிய சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. சிவனின் ஊர்த்தவ தாண்டவம், பிரம்மா, நந்தி மத்தளம் வாசித்தல், காரைக்காலம்மையார் பாடுதல், ரிஷபாரூடர், கஜசம்ஹாரமூர்த்தி, காரைக்காலம்மையார் வரலாறு முதலியவை இதில் சுதை சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இக்கோபுரத்தை ஒட்டிய மதிற்சுவரின் மேல் இடதுபுறம் காரைக்கால் அம்மையார் வரலாறும், வலதுபுறம் மீனாட்சி திருக்கல்யாண வரலாறும் அழகிய சுதை சிற்பங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கோபுர வாயில் வழியாக உள்ளே சென்றதும் நாம் காண்பது இண்டாவது சுற்றுப் பிரகாரம். வலதுபுறத்தில் இறைவி வண்டார்குழலம்மை சந்நிதி தெற்கு நோக்கி அமைந்துள்ளது. நேரே இறைவன் கருவறைக்குச் செல்லும் நுழைவு வாயில். இந்த நுழைவு வாயிலின் மேற்புறம் சிவபெருமானின் ஐந்து சபைகளும் அழகிய சுதைச் சிற்பங்களாக காட்சி தருகின்றன. கருவறை நல்ல கற்கட்டமைப்புடையது. கருவறையில் இறைவன் வடாரண்யேஸ்வரர் லிங்க உருவில் கிழக்கு நோக்கி அருட்காட்சி தருகிறார். கோஷ்ட மூர்த்தங்களில் துர்க்கைக்கு பக்கத்தில் துர்க்கா பரமேஸ்வரர் உருவம் ஒன்று கோஷ்டமூர்த்தமாக உள்ளது. பஞ்சபூத தல லிங்கங்கள் உள்ளன. தாமரை மலர் விரித்தாற் போல் அமைந்து அதன் மேல் அமைந்துள்ள 'கமலத்தேர்' இங்கு தனி சிறப்பு.

நடராஜர் சந்நிதிக்கு எதிரே, சற்று தள்ளி, காளியின் சந்நிதி இருக்கிறது. இது கோவில் குளத்துக்கு அருகாமையில் ஒரு தனி கோவிலாக உள்ளது. சிவனின், "இத்தலத்தில் என்னை வழிபாடு செய்ய வருபவர்கள், முதலில் உன்னை வழிபாடு செய்த பின் என்னை வழிபட்டால் தான் முழு பலன் கிடைக்கும்" என்ற கூற்றுக்கு இணங்க, பொதுவாக காளி கோவிலில் தரிசனம் முடித்துவிட்டு தான் சிவன் கோவிலுக்கு செல்வது இங்கு நிலவி வரும் வழக்கம். நின்ற நிலையில் இருக்கும் காளி இங்கு நடனம் ஆடும் நிலையில் இருக்கிறாள்.

கோயிலுக்குள் நாம் நுழையும் போதே, உட்பிரகாரம் சென்றவுடன் வலது புறத்தே இரத்தின சபை வரும். இங்கு ஊர்த்தவ தாண்டவத்தில், உமையம்மை, காரைக்கால் அம்மையார் மூர்த்திகளிடையே ஈசன் தன் திருநடன நிலையில் அருள்பாலிக்கிறார். நடராஜப்பெருமான் நடனஞ்செய்யும் ஐந்து சபைகளுள் இந்த இரத்தினசபை முதன்மையானது ஆகும். மற்ற சபைகள்: சிதம்பரம் பொற்சபை, மதுரை வெள்ளியம்பலம், திருநெல்வேலி தாமிர சபை, குற்றாலம் சித்தா சபை. திருவாலங்காடு இரத்தின சபையில் உள்ள நடராசர், அண்டமுற நிமிர்ந்தாடும் பெருமான் 'ரத்ன சபாபதி' என்று அழைக்கப்படுகிறார். இங்கு நடராஜர் மற்ற ஊர்த்துவ தாண்டவங்களைப் போல் தனது பாதத்தை செங்குத்தாக உடலை ஒட்டி தூக்கி நின்று ஆடாமல், உடலின் முன்பக்கத்தில் முகத்திற்கு நேராக பாதத்தை தூக்கியிருக்கிறார். எட்டு கைகளுடன் சுமார் நான்கு அடி உயரமுள்ள இந்த திரு உருவத்தைக் காண நம் மெய் சிலிர்க்கும். யாருக்கும் அடங்காத காளியை வெட்கித் தலை குனிய வைத்த இந்த ஊர்த்துவ தாண்டவ நடனம் பார்த்துப் பரவசமடைய வேண்டியதாகும். சபையில் பெரிய ஸ்படிக லிங்கமும் சிறிய மரகதலிங்கமும் திருமுறைபேழையும் உள்ளன. இரத்தின சபையின் விமானம் செப்புத் தகடு வேயப்பட்டு, ஐந்து கலசங்களுடன் விளங்குகிறது. சுந்தரர் பதிகம் கல்வெட்டில் பதிக்கப்பட்டிருப்பதை, சபையை வலம் வரும்போது காணலாம்.

திருவாலங்காடு ஆலயத்தின் மற்றொரு விசேஷம் காரைக்கால் அம்மையார் இங்குதான் முக்தி அடைந்ததாக சொல்லப்படுகிறது. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதி. பரமதத்தன் என்ற வணிகரை மணந்து கொள்கிறார். வணிக விஷயமாக அவரை சந்தித்த நபர் அளித்த இரண்டு மாம்பழங்களை வீட்டுக்கு கொடுத்து அனுப்புகிறார். அந்த சமயம் பார்த்து ஒரு சிவனடியார் புனிதவதியின் வீட்டுக்கு வருகிறார். சிவ பக்தையான புனிதவதி சிவனடியாருக்கு மதிய உணவு படைக்கிறார். அப்பொழுது தன் கணவர் அனுப்பிய இரண்டு மாம்பழங்களில் ஒன்றை கொடுக்கிறார். புனிதவதியின் விருந்தோம்பலில் மகிழ்ந்த சிவனடியார் ஆசீர்வாதம் செய்து விட்டு செல்கிறார். மதிய உணவின் பொழுது மிச்சம் இருந்த ஒரு மாம்பழத்தை கணவனுக்கு கொடுக்கிறார். அதன் சுவையில் மயங்கி பரமதத்தர் இன்னொரு மாம்பழம் கேட்கிறார். என்ன செய்வதென்று அறியாத புனிதவதி சிவபெருமானிடம் வேண்டுகிறார். என்ன அதிசயம்! அவர் கையில் ஒரு மாம்பழம் தோன்றுகிறது. அதை கணவனுக்கு கொடுக்கிறார். அவர் இந்த மாம்பழம் முதல் பழத்தை விட சுவையாக இருக்கிறதென்று சொல்கிறார். அதை பற்றி அவர் விசாரிக்க புனிதவதி உண்மையை சொல்கிறார். இதை கேட்ட புனிதவதியின் கணவர் தான் அவருக்கு கணவராக இருப்பதற்கு யோக்கியதை அற்றவர் என்று கருதி அவரை விட்டு செல்கிறார். புனிதவதி சிவபெருமானிடம் வேண்டுகிறார். தனக்கு உயிர் இருக்கும் வரை சிவ பெருமானை வணங்கி வாழ்வதற்கு ஒரு உடல் கேட்கிறார். அப்படி அவர் காரைக்கால் அம்மையார் ஆகிறார். மோக்ஷம் தேடி அம்மையார் கைலாசம் செல்ல சிவ பெருமான் அவரை திருவாலங்காட்டில் சென்று காத்திருக்க சொல்கிறார். திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையாருக்கு சிவ பெருமான் காட்சியளித்து முக்தி கொடுக்கிறார். இத்தலத்தில் இறைவனின் காலடியில் இன்றும் காரைக்கால் அம்மையார் இருப்பதைப் பார்க்கலாம்.

சம்பந்தர் (துஞ்ச வருவாருந்), அப்பர் (வெள்ளநீர்ச் சடையர், ஒன்றா வுலகனைத்து), சுந்தரர் (முத்தா முத்தி தரவல்ல) ஆகியோரால் தேவாரத்தில் பாடல்பெற்றது, திருவாலங்காடு. இத்தலத்துக்கு 'வடாரண்யம்' எனவும் ஒரு பெயர் இருந்ததாக தலபுராணம் கூறுகிறது. 'ஆலங்காடு' என்பதற்கு 'ஆலமரங்கள் நிறைந்த காடு' என்றே பலரும் பொருள் தருகின்றனர். ஆனால், 'ஆலம்' என்பதற்கு 'நீர்' என்ற அர்த்தமும் உண்டு. எனவே, நீர்நிலை நிரம்பிய பகுதி என்றும் 'ஆலங்காடு' என்ற சொல்லுக்கு பொருள் சொல்லலாம் என்கின்றனர். ஆனால்,

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# GTA SQUARE SUMMER FESTIVAL 2010

ஸ்காபரோவில் Middlefield & Finch சந்திப்பிக்கு அருகாமையில் அமைந்துள்ள GTA Square Indoor Mall (உள்ளரங்க அங்காடி) தனது இரண்டாவது வருடத்தை நிறைவேற்றி மூன்றாவது ஆண்டினை ஆரம்பிப்பதை முன்னிட்டு கோடைகால கொண்டாட்டத்தை (Summer Festival) கடந்த ஜூலை 24, 25ஆம் சனி, ஞாயிறு தினங்களில் கோலகலமாக கொண்டாடியது.

ஜூன் 16, 2008 இல் தனது Grand Opening ஐ ஸ்காபரோ நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டெரிக் லீ, மற்றும் மார்க்கம் நகர Councillor திரு. லோகன் கணபதி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் தமிழ் சமுதாயத்தின் பல வியாபா முன்னோடிகளும் மற்றைய சமூகத்தின் தலைவர்களும் இந்த விழாவில் கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும் ஒரு வருட முடிவில் ஓகஸ்ட் 16, 2009 இல் இரண்டாவது வருட கோடைகாலக் கொண்டாட்டம் இலவச barbecue உடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வருடம் ஒருபடி மேல் சென்று கட்டிடத்தின் வெளிப்பகுதியில் மேடை அமைத்து சில நிகழ்வுகளும் உட்பகுதியில் பல நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. முதல்நாள் நிகழ்வில் திரு. George Smitherman (முன்னாள் ஒன்ராரியோ சுகாதார அமைச்சர் மற்றும் ஒக்ரோபர் 25, 10 இல் நடைபெறும் நகரசபைத்தேர்தல் போட்டியிடுபவர்) சமூகமளித்திருந்தார். இவ்விரு நாட்களும் குறிப்பாக சிறுவர்களுக்கென பல நிகழ்ச்சிகள், போட்டிகள் நடைபெற்றன. ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி என்பனவும், நடனம், Magic Show, Face Painting என்பன நடைபெற்றது. இதில் சிறுவர்கள் மிகவும் உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கலந்துகொண்டு பல பரிசில்களும் பெற்றார்கள். மேலும் பரதநாட்டியம், ஆடை அலங்கார நிகழ்ச்சி, மேடைப்பாடல், Bangara Dance, என்பனவும் மக்களை மிகவும் கவர்ந்த நிகழ்ச்சிகளாக அமைந்தன. சனி, ஞாயிறு தினங்களில் GTA Square Mall மக்கள் திரளாக காணப்பட்டது என்று கூறினால் மிகையாகாது.

இக்கொண்டாட்டம் அடுத்த வருடம் மேலும் சிறப்பாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.






























# திருவாலங்காடு...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த அர்த்தமும் இந்த இடத்துக்கு பொருந்தாது, காளங்காடு என்ற சொல்லே 'ஆலங்காடு' என திரிந்திருக்கக் கூடும் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். இடுகாட்டை குறிக்க காளவனம், காளங்காடு முதலிய சொற்கள் பயன்பட்டு வந்ததை அவர்கள் ஆதாரமாகக் காட்டுகின்றனர். அத்துடன் காரைக்கால் அம்மையாரின் சுடுகாட்டு வருணனைகள், காலத்தை காக்கின்ற காளி, சிவபெருமானின் ஊர்த்துவதாண்டவம் இவையெல்லாம் ஆலங்காடு, காளங்காடு என்றே அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது என்கிறார்கள்.





ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ மனமும் உடலும் செம்மையாக இருக்க வேண்டும். இவை இரண்டையும் ஒரே நோக்கில் கொண்டு செல்லும் இடங்களாகத்தான் பெரும்பாலான திருக்கோவில்கள் இருக்கின்றன. ஒருவகையில், தமிழகத் திருத்தலங்கள் அனைத்தும் மனிதனின் ஆரோக்கிய வளர்ச்சியையே முன்னிறுத்துகின்றன எனவும் சொல்லலாம். பல அரிய மூலிகைகளை அறிந்திருந்த நம் முன்னோர்கள், அவற்றின் பயன்களை அனைவரும் அறிந்துகொள்ளவும், எதிர்கால சந்ததிக்கு அவற்றின் சிறப்பைத் தெரிவிக்கவும் அவற்றை பாதுகாக்கவும் அவற்றை கோவில்களில் வைத்து தலவிருட்சங்களாக வழிபட்டனர். அப்படி திருவாலங்காட்டில் அமைந்துள்ள தல விருட்சம் பலாமரம். பலா முக்கனிகளில் ஒன்றாகும். இங்குள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் தேவஸ்தானம் சார்பில் ஒரு சித்த வைத்திய சாலையும் உள்ளது. கோயிலின் வெளிப்பிரகாரத்தில் சந்தன மரங்கள் உள்ளன. பிரதி திங்கள், வியாழக்கிழமைகளில் காலை வேளைகளில் மக்களுக்கு தேவஸ்தானம் சார்பாக இலவச சித்த மருத்துவம் பார்க்கப்படுகிறது. ரத்ன சபையில்தான் இந்த சித்த மருத்துவ முகாம் நடைபெறும். ரத்தின சபையில் உள்ள ஸ்படிக லிங்கமும், சிறிய மரகத லிங்கமும் சித்த மருத்துவ சிறப்பு வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகச் சரித்திரத்தின் முக்கியமான பகுதியை வெளிப்படுத்திய செப்பேடுகள் திருவாலங்காட்டில் கிடைத்துள்ளன. ஒரு பெரிய வளையத்தில் சேர்த்து சோழ முத்திரையுடன் தமிழிலும் வடமொழியிலும் பொறிக்கப்பட்ட சாசனங்களுடன் கிடைத்த அந்த 22 செப்பேடுகள் சோழ வம்ச சரித்திரத்தை நன்கு புலப்படச் செய்வன. இவை இன்று சென்னை அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

திருவாலங்காடு வடாரண்யேஸ்வரரை ஐப்பசி மாதம் பௌர்ணமி நாளில் தரிசனம் செய்தால் எல்ல வகையான இன்பங்களும் கிடைக்கும் என்கிறது தல புராணம். இது கணவன் - மனைவி இடையே ஒற்றுமையை பலப்படுத்தும் தலம் என்றும் நம்பப்படுகிறது. மார்கழி திருவாதிரை இங்கு மிகச் சிறப்பானது. இது தவிர சிவனுக்குரிய அனைத்து விசேஷங்களும் இங்கு கொண்டாடப்படுகிறது.

இந்த திருவாலங்காட்டுக்கும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்கும் சம்பந்தமுள்ளது என்கிறார்கள். அதனையும் திருவாலங்காட்டுக்கு அருகிலேயே இருக்கும் பழையனூர் நீலியையும் அடுத்த இதழில் பார்ப்போம். அத்துடன் இன்னொன்றும் உள்ளது. அது, அரக்கோணம் திருவாலங்காடு தவிர இன்னொரு திருவாலங்காடும் தமிழ்நாட்டில் உள்ளது. அங்கும் வட ஆரண்யேச்வர் கோவில் உண்டு. அங்கும் வண்டார்குழலிதான் அம்மன். அதுவும் புகழ்பெற்ற சிவ ஸ்தலம்தான். மயிலாடுதுறை அருகே இருக்கும் அந்த திருவாலங்காட்டைப் பற்றியும் அடுத்த இதழில் பார்ப்போம்.

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

சென்னையிலிருந்து 59 கிலோமிட்டர் தொலைவில், சென்னை - அரக்கோணம் ரயில் பாதையில் உள்ளது திருவாலங்காடு ரயில் நிலையம். இந்த நிலையத்தில் இருந்து 4 கி.மி. தொலைவில் சிவஸ்தலம் கோவில் உள்ளது. ரயில் நிலையத்தில் இருந்து கோயில் செல்ல ஆட்டோ வசதிகள் உண்டு. திருவள்ளூரில் இருந்து அரக்கோணம் செல்லும் பேருந்தில் சென்று, திருவாலங்காடு நிறுத்தத்தில் இறங்கினால் கோவில் அருகிலேயே சென்றுவிடலாம். திருவள்ளூரில் இருந்து 18 கி.மி. தொலைவிலும், அரக்கோணத்தில் இருந்து 14 கி.மி. தொலைவிலும் திருவாலங்காடு உள்ளது. காஞ்சிபுரம், அரக்கோணம், திருவள்ளூர் ஆகிய ஊர்களில் இருந்தும் திருவாலங்காட்டுக்கு பேருந்துகள் உள்ளன.

கோயில் நடை காலை 6 மணி முதல் 9 மணி வரை திறந்திருக்கும். கோயில் முகவரி: திருவாலங்காடு அஞ்சல், அரக்கோணம், திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் - 631210, தமிழ்நாடு, இந்தியா - தொலைபேசி: 91 44 2787 2443.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

தரத்திலும்




ஆரோக்கியத்திலும்

# NO 1

நா நரம்புகள் சிலிர்த்திடும்

சுவை

# நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

Niru Niru
நிரு பிராண்ட்

# அது ஒரு கனாக் காலம்!

வாழ்க்கை, ஏதோ ஒரு பொழுதில் எல்லோர் மனதிலும் பசுமையைத் தூவி விட்டு நகர்கிறது, அப்படி ஒரு சுகந்தமான "விழியில் விழுந்து, இதயம் நுழைந்த" அனுபவம் தான் "அலைகள் ஓய்வதில்லை". படம் வெளியான ஆண்டு 1981. சாதாரண கத்தோலிக்க/இந்துக் காதல் என்று ஒதிக்கி விட முடியாத படம். இந்தப் படம் முடிந்து வெளியே வந்து, கண்ட முதல் பையனையோ/பெண்ணையோ காதலிக்க ஆரம்பித்தவர்கள் பலர்!

படம் பார்க்காதவர்களுக்கு (இருக்கிறார்களா என்ன?):
பதின்வயது இந்து பிராமணப் பையனுக்கும் (விச்சு-கார்த்திக்-முதல் படம்!) கத்தோலிக்க பெண்ணுக்கும் (மேரி-ராதா-முதல் படம்!) காதல், இது தான் படத்தின் One Liner!

இன்னும் பலர் மனதில் "அலையடித்துக் கொண்டிருக்கும்" இந்தப் படத்தின் திரைக்கதை, இயக்கம் பாரதிராஜா. ஆனால் கதை, வசனம் - மணிவண்ணன்!
அருமையான திரைக்கதைக்கு, அற்புதமான வசனங்கள் அமைந்து படத்தின் அலைகளைப் பேரலைகளாக மாற்றி இருந்தன!



படத்தின் "அலைகளை" என் முன்னே கொட்டி, எந்த "அலை" பிடித்தது என்று கேட்டால்.... என் மனதை ஈரப்படுத்திய "அலைகளை" (காட்சிகள்/வசனங்கள்) கீழே உங்களுக்காக "நனவை" செய்து பிடித்து வந்திருக்கிறேன்.

"பரீட்சைக்குப் போற வழியில பிள்ளையாருக்கு இந்தத் தேங்காய உடைச்சிட்டுப் போடா", என்று விச்சு அம்மா (கமலா காமேஷ்) சொல்ல - "தேங்கா வில ரெண்டு ரூபாமா, உனக்கும் எனக்கும் ஒரு வாரத்துக்கு ஆகும். ஒண்ணு பிள்ளையார் என் கூட பரீட்சை எழுதணும், இல்ல என் பேப்பரையாவது திருத்தணும் ரெண்டும் இல்லாம, அம்போன்னு அரச மரத்தடியில உட்காந்திருக்காரு, அவரை ஏம்மா distrub பண்ணிண்டு", என்று விச்சு பதில் சொல்லிவிட்டு நழுவிச் செல்லும் காட்சி தொடங்கி, படு இயல்பான வசனங்கள் படம் முழுவதும்.

ஆரம்பத்தில் மேரியை காதலிக்கும் முயற்சிகளில் விச்சு இருக்கும் போது அவன் நண்பன் சொல்வது:
மரம் மரமா எழுதுமா, அவ உன்ன லவ் பண்ண மாட்டா, அது Old Style, Modern Styley அவ மனசில எழுதணும்டா, அவ நெஞ்சில எழுது!
(இப்போது e-mail அல்லது Text பண்ணு என்பார்களோ?)

---

ஆட்டீரல் கறியை விச்சு வந்து மேரிக்குக் கொடுக்க, மேரி மறுக்கிறாள்.
விச்சு: "ஏன் உனக்கு இதல்லாம் பிடிக்காதா"
மேரி: எண்ணைக்கு உன்ன எனக்கு பிடிக்க ஆரம்பிச்சுதோ, அண்ணையில இருந்து எனக்கு இதெல்லாம் பிடிக்கிறதில, விச்சு நீயும் நானும் ஒண்ணாயிட்ட பிறகு உனக்குப் பிடிக்காதது எனக்கு மட்டும் எப்படிப் பிடிக்கும்?
என்று சொல்லும் போது, விச்சு கண்ணிலிருந்து ஒரு துளி கண்ணீர் மேரி கன்னத்தில் விழும் காட்சி உருக்கம்!

---

கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு வரும் விச்சுவிடம் மேரி: நான் பரீட்சையில பாஸ் ஆகணும்னு வேண்டிக்கிட்டியா?
விச்சு: இல்ல மேரி, நீ பரீட்சையில பாஸ் ஆயிட்டின்னா College போயிடுவே, அப்புறம் நான் உன்னப் பார்க்க முடியாது. (அப்பாவியாக..) அதனால நீ fail ஆகணும்னு வேண்டிகிட்டேன்!

---

படத்தில் மேரியின் அண்ணியாக (சில்க்)ஸ்மிதா. இவர் படங்களில் எப்போது "நடித்தார்" என்று யோசிப்பவர்கள் ஒரு முறை இந்தப் படம் பாருங்கள்!
நடுராத்திரியில் வீட்டு மொட்டைமாடியில் விச்சுவை சந்தித்து விட்டு வரும் மேரியை அண்ணி கன்னத்தில் அறைய, அவள் "அம்மா" என்று கத்துகிறாள்!
அண்ணி: அறைஞ்சவுடன அம்மாவைக் கூப்பிட்டியே, இப்போ போய் பேசிட்டு வந்தியே, அப்போ யாரையடி கூப்பிட்டுக்கிட்டே?

---

தங்கை மேரி காதல் தெரிந்து அவளை "வெளுத்துக் கட்டுகிறார்" அண்ணன் தியாகராஜன். அதன் பின்னரும் உறுதியுடன் இருக்கும் மேரி இடம்....
அண்ணி: உன் மனசில என்ன தாண்டி நினைச்சுக்கிட்டிருக்கே?
மேரி: என் விச்சுவைத் தான்! அடி விழுகிறப்போ என் அம்மாவை நினைச்சிருந்தா நான் அழுதிருப்பேன், ஆனா நான் என் விச்சுவைதான் நினைச்சேன்,



எனக்கு சந்தோஷமாத்தான் இருக்கு!
அண்ணி: உனக்கென்ன பைத்தியமா?
மேரி: பைத்தியம் தான், கல்யாணத்துக்கு முன்னாடி உங்க கழுத்தில எவ்வளவு நகை இருக்குன்னு தான் எங்க அண்ணன் பார்த்திருப்பாரு, உங்களுக்கு எங்க அண்ணன் எவ்வளவு நகை போடுவாருன்னு நீங்க பார்த்திருப்பீங்க. அது கல்யாணம், இது காதல்! அவனுக்கு என்ன மனசிருக்குன்னு தான் நான் பார்த்தேன், எனக்கு என்ன மனசிருக்குன்னு தான் அவன் பார்த்தான். பணத்தைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கிட்ட உங்களுக்கு மனசப் பார்த்து சிநேகமா இருக்கிறது, பைத்தியக்காரத் தனமாத் தான் தெரியும்.

---

இந்து பிரமாணப் பெண்ணான விச்சுவின் அம்மா, தேவாலயம் வெளியே நின்று பிரார்த்தனை செய்து விட்டு "மனசில பயம் வந்தா, எந்த சாமி எங்கே இருக்கிறார்னு தெரிவதில்லை, எல்லா சாமியும் எனக்கு ஒண்ணாத் தான் தெரிகிறது" என்று சொல்லும் காட்சி நெகிழ்வு!

---

படத்தின் climax:
உயிர் கொடுக்கத் தயாராக இருக்கும் 5 நண்பர்கள் (ஒரு நண்பன் கிடைப்பதே கஷ்டம்!) பாதுகாத்து நிற்க "இந்த குக்கூ சத்தம், அடிக்கிற அந்த அலையோட சத்தம், துடிக்கிற நம்ப நெஞ்சோட சத்தம், எப்பவும் கேட்டுகிட்டே இருக்கும், நமக்கு சாவே கிடையாது", என்று சொல்லும் விச்சுவின் வசனம் கேட்கும் ஒவ்வொரு முறையும் புல்லரிக்கிறது!



வருடங்களும், வாழ்க்கையும் ஓடி விட்டாலும் கடல் அலைகளைப் பார்க்கும் போதெல்லாம் இந்தப் படத்தின் நினைவுகள் ஓடி வருகின்றது. அந்த நினைவலைகள் இன்னும் ஓயவே இல்லை!

நாமே கிழித்துக் கொண்ட கோடுகள் நாமே வகுத்துக் கொண்ட எல்லைகள் அந்தக் கோடுகளும் எல்லைகளும் சௌகரியமான பயணத்துக்குச் சம்மதிக்காத போது அவை அழிக்கப்படும் அல்லது அகலப்படுத்தப்படும்!

**- கிறிஸ்ரி-**


YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# இன்னொரு... ஆச்சி வீடு

## பகுதி 2

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

கடந்த இதழ் தொடர்ச்சி...

நேரம் 3 மணியிருக்கும். திலகம் இன்னமும் நித்திரைதான். என்னவென்று தெரியவில்லை, வழமைக்கு மாறாகத் திலகம் அந்தப் பின்நேரவேளையிலும் நல்ல தூக்கத்தில் இருந்தாள். நாயகமும் இன்னமும் வீட்டுக்கு வரவில்லை. இதுவும் வழமைக்கு மாறுதான். இனியனைக் கூட்டிச் சென்ற இராமலிங்கம் இன்னமும் வரவில்லை. அவர்கள் வருவதற்கு இன்னமும் இரண்டு மணித்தியாலங்கள் என்றாலும் எடுக்கும்.

இன்பன் நாகராசனைக் கேட்டான், "ராசுமாமா, வாங்கோ ஆச்சிவீட்டுக்குப் போய் விளையாடுவோம்".
ஆச்சிவீடு!

திலகத்தின் பேத்தியார் வாழ்ந்த வீடு. அங்குதான் திலகத்தின் தாயாரும் திலகமும் பிறந்து வளர்ந்தார்கள். நல்ல இராசியான மண்வீடு. திலகம் தனது பேத்தியாரை ஆச்சி என்று அழைத்ததால் பேத்தியார் வாழ்ந்த அந்த வீடு இப்போது எல்லோராலும் ஆச்சிவீடு என அழைக்கப்படுகின்றது. ஆச்சிவீடு தூரத்தில் இல்லை. திலகத்தின் வீட்டு வளவுக்குள்தான் இருந்தது. திலகத்தின் பெரிய கல்வீட்டில் இருந்து ஒரு பத்துப் பதினைந்து யார் தூரத்துக்குள்தான் இருக்கும். திருமணம் புரியும் வரையில் திலகமும் அந்த மண்வீட்டில்தான் வசித்து வந்தாள். திலகத்தின் திருமணத்துடன்தான் புதியதாகக் கல்வீடு கட்டி அங்கு குடிவந்தார்கள்.

◊ சி.வி. நாதன் ◊

திலகத்தின் பேத்தியாரும், தாயாரும் இறந்ததின் பின்னராக ஆச்சிவீட்டில் எவரும் வசிப்பதில்லை. பனை ஓலையால் கூரை வேயப்பட்டு இருந்த அந்த மண்வீட்டின் மேல் திலகத்திற்கு நல்ல விருப்பம். ஆச்சியின் வீடு என்பதால் அதனை பக்குவமாக பாதுகாத்து வருகின்றாள். நல்ல துப்பரவாக உள்ள அந்தவீட்டில் தனிக் குடித்தனம் கூட நடத்தலாம். நல்ல வெய்யில் நாட்களில் நாயகம் குடும்பத்தினர் ஆச்சிவீட்டில் காற்று வாங்குவதற்காக வந்து தங்குவதும் வழக்கம்.

ஆச்சிவீட்டை தனக்குத்தான் தரவேணும் என்று இராமலிங்கம் தமக்கையைக் கேட்பான். நாயகம் "அதை உனக்கேனடா. இந்த வீட்டை நீ வைச்சிரு நாங்கள் அங்கை போறோம்" என்பார்.

அந்த ஆச்சி வீட்டிற்குத்தான் நாகராசனை விளையாடக் கூப்பிட்டிருந்தான் இன்பன்.

வீடு கொஞ்சம் உயரமாகவும் சாதாரணமான மண் வீடுகளையும் விடக் கொஞ்சம் பெரியதாகவும் இருந்தது. முன்புறத்தில் வாசல் நடுவாக வடக்குத் திசையைப் பார்த்த வண்ணம் அமைந்திருக்க, வாசலின் இரு புறமும் மண்ணினால் ஆன திண்ணைகள் இருந்தன. உறவினர்கள் விருந்தனர்கள்




வந்தால் அத்திண்ணைகளில்தான் பாய் விரித்து இருப்பார்கள். வடக்குப் பக்கமாக பார்த்துக் கொண்டிருந்த வீட்டின் முன் புறம் முழுவதும் திறந்தே இருந்தது. கிழக்குப் பக்கமாகவும் மேற்குப் பக்கமாகவும் தடுப்பு ஒன்றுமேயில்லை. நன்றாக மெழுகிச் சுத்தமாக இருந்த திண்ணைகளில் இருந்தால் நல்ல காற்றோட்டமாகவும் உடம்பிற்குச் சுகமாகவும் இருக்கும். களைப்புடன் வந்து அவ்விடத்தில் அமர்ந்தால் தங்களை அறியாமலே எவரும் நித்திரையாகி விடுவார்கள்.

கிட்டத்தட்ட பதினைந்தடி நீளமான அந்த முன்பகுதிக்குப் பின்னால் நடுவில் ஒரு சிறிய விறாந்தை போன்ற ஒன்று வடக்குத் தெற்காக இருக்க, விறாந்தையின் இரண்டு புறமும் மும்மூன்று அறைகள் இருந்தன. இந்த விறாந்தையின் முடிவில் ஒரு பெரிய அறை, அதைத் தாய் அறை என ஆச்சி கூறுவாள், இருந்தது. தாயறை, முன்புறமிருந்த திண்ணைகளின் அளவிற்கு அகண்டு பெரியதாகிப் பின்புறம் முழுவதையும் மூடி, வீட்டினை ஓர் ஒழுங்கான அமைப்பில் காட்டியது. விறாந்தையின் முன்புறத்தில், திண்ணைகளின் நடுவே யிருந்த, நிலத்தினை ஒட்டியதாக இருந்த நடைபாதை போன்றதன் பின்பகுதியில் ஒரு கதவு இருந்தது. விறாந்தையில் இருந்து ஒவ்வொரு அறைகளுக்கும் போவதற்குக் கூடத் தனித்தனியே கதவுகள் இருந்தன. மற்றும்படி, அறைகளுக்குள் வேறு எந்தத் தொடுப்புகளும் இல்லை.

அறைகளுக்குப் பெரிய சாளரங்கள் இருந்ததினால் அறைகள் நல்ல வெளிச்சமாக இருந்தன. சுமாராக எட்டு அடி உயரமளவில் தீராந்திகள் போடப்பட்டு, அதில் மரச் சலாகைகள் அடிக்கப்பட்டு வீட்டின் மேற்பகுதி காணப்பட்டது. மரச் சலாகை களில்தான் பனை ஓலைகள் ஒழுங்காகப் போடப்பட்டு இருந்தன. இப்படியாக அமைந்திருந்த ஆச்சிவீட்டை திலகம் பராமரித்துக் கொண்டு வந்தாள். இப்போது சில நாட்களாக ஒரு பெண் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வந்து வீட்டைத் துப்பரவு செய்து வருகின்றாள்.

வீட்டுக்குக் கிழக்குப் பக்கமாக, வாசலின் முன்பாக, மேற்குப் பக்கம் பார்த்த வண்ணமாக தூர்ந்து போன நிலையில் பழைய குசினி இருந்தது. தாய்வீட்டுக்கும் அடுக்களையிற்கும் தொடுப்பு ஏதும் இல்லை. ஆனாலும் சிறிய தாழ்வாரம் ஒன்று தாய்வீட்டில் இருந்து அடுக்களையிற்குப் போனதற்கான அடையாளம் தெரிந்தது.

அடுக்களையின் பின்புறமாகச் சற்றுத் தூரத்தில் திலகத்தின் காணியின் கிழக்குப் புற எல்லை இருந்தது. அவ்வெல்லையை ஒட்டிக் கிராமத்தின் பெரிய வீதி போய்க் கொண்டு இருந்தது. அவ்வீதியின் கிழக்குப் பக்கமாகப் பெரிய பரப்பளவில் தோட்டக் காணிகள். ஏறக்குறைய வருடம் முழுவதுமே அக்காணிகளில் ஏதாவது பயிர்கள் இருந்து கொண்டே இருக்கும். தனி ஒருவரது காணி யாக இல்லாமல் பலரது தோட்டக்காணிகள் ஒன்றாக இருந்ததினாலேயே அவ்வளவு பெரிய பரப்பளவில் அத்தோட்டப் பகுதி தெரிந்தது.

நாகராசனும் இன்பனும் அந்த வீட்டின் உள்ளே விளையாடிக் கொண்டு இருந்தார்கள். இன்பன் ஏதாவது ஒரு அறைக்குள் ஒளிந்து கொள்ள, நாகராசன் தேடிப்பிடிக்க வேண்டும். பின்னர் முறை மாறி விளையாட்டுத் தொடரும். நாகராசனும் சின்னப் பிள்ளை போல விளையாடிக் கொண்டு இருந்தான். அதுதானே அவனது தொழில். அதற்காகத்தான் நாயகம் அவனுக்குச் சம்பளம் கொடுக்கிறார்.

பத்துப் பதினைந்து நிமிடங்கள் கடந்திருக்கும்... - இன்னமும் வரும்


விற்பனையாகின்றது குறமகளின்

•கூதிர்காலக் குலாவல்கள்

•அகணிதன் அல்லது நதியின் பிழையன்று

என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்

தொலைபேசி இலக்கம்: 416.282.8059

GTA Square - 5215 Finch Ave. E., #201

Middlaefield & Finch



APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!

Clean, family building, FREE parking.

Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818

# தூறல்

**வானரன்**

# Bliss (Turkey)

இந்தப் பெயரில் சுமார் 11க்கு மேற்பட்ட படங்கள் வெளிவந்துள்ளன. Mutluluk என்பது இதன் மூலப் பெயர். இப்படம் 2007ல் வெளிவந்தது. Ömer Zülfü Livaneli எழுதிய நாவலை மையமாகக் கொண்டது இந்நாவல். இவர் ஓர் இசையமைப்பாளர், இயக்குனர், அரசியல்வாதி. இதனால் இவரது நாவல்கள் சமூக விமர்சனங்களைக் கொண்டிருக்கும். இப்படத்தை இயக்கியிருப்பவர் Abdullah Oguz.



ஒரு அதிகாலை. மப்பும் இருளும் சூழ்ந்து கொண்டிருந்த அந்த காலைப் பொழுதில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த முதியவர் ஒரு இளம் பெண் மயங்கிய நிலையில் இருந்ததை கண்டார். அது இப்பெண் மரியம் என்பதைக் கண்டுகொண்ட அந்த முதியவர், மரியத்தின் வீட்டிற்கு மரியத்தை கொண்டு செல்கின்றார். மரியத்தின் தாய் இறந்து விட, தந்தை மறுமணம் செய்து கொண்டார். வழமை போல் சித்திக் கொடுமை இங்கேயும் உண்டு. சித்தி மரியத்தை யாரோ பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர் என்பதைக் கண்டு கொள்கின்றார். ஒரு அறைக்குள் மரியம் பூட்டப்படுகின்றாள். ஒவ்வொரு முறையும் அறைக்குள் செல்லும் பொழுதும் மரியத்தை திட்டுவது சித்தியின் வழமை. ஒரு நாள் அவளது உடல் மணக்குது என்கின்றாள். மரியம் சாப்பிட மறுக்கின்றாள். மற்றொரு நாள் மரியத்தின் சித்தி மரியத்தை தற்கொலை செய்யுமாறு கயிறு ஒன்றைக் கொடுக்கின்றாள். மரியத்தை பல தடவைகள் சித்தி கேட்டும் தன்னை யார் இந்த நிலமைக்கு ஆளாக்கியது என்பதை மரியம் தெரிவிக்கவில்லை. சித்தி யன்னல் ஊடாக மரியம் தற்கொலை செய்கின்றாளா என பார்த்துக் கொண்டிருந்தாள். மரியம் கயிற்றை கட்டிவிட்டு கடவுளை கும்பிட்டுவிட்டு கயிற்றுக்குள் தலையை கொடுத்தவள் என்ன நினைத்தாரோ தெரியாது தற்கொலை செய்யவில்லை. பின்னர் சித்தி உன்னால் எங்களது குடும்ப மானம் சந்தி சிரிக்கின்றது என கத்தத் தொடங்கி விட்டாள்.

அக்கிராம தலைவனின் மகன் காமல் இராணுவத்திலிருந்து வீட்டிற்கு வருகின்றான். கிராமத் தலைவன் காமலிடம் மரியத்தை துருக்கியின் தலைநகரான இஸ்ரன்புல்லில் வைத்து கொலை செய்து விடுமாறு கூறுகின்றார். மரியத்தை ஊத்தை தேய்த்து குளிக்க வைத்து காமலுடன் தலை நகரம் அனுப்புகின்றனர். அங்கு காமல் முதலில் தனது தமையனின் வீட்டிற்கு செல்கின்றான். தமையன் அதற்கு உடன் பட மறுக்கின்றான். ஒரு உயரமான கட்டிடம் ஒன்றில் இருந்து தள்ளி விட முயற்சிக்கின்றான். இறுதி நேரத்தில் அவளை காப்பாற்றி விடுகின்றான். பின்னர் தனது முன்னாள் இராணுவ வீர நண்பனிடம் உதவி பெற்று ஒரு கடற்கரையை ஒட்டிய ஓர் இடத்தில் சில நாட்கள் தங்குகின்றான். அங்கிருந்து பின்னர் தற்செயலாக சந்திக்கும் இர்பன் என்றவரின் ஒரு படகில் இருவரும் தங்குகின்றனர். இர்பன் ஒரு பேராசிரியர். தனது மனைவியிடமிருந்து ஒதுங்கி நகரத்தை விட்டு விலகி கடலில் நாட்களை கழிக்கின்றார். 60பது களை ஒட்டிய வயது. பேராசிரியர் மரியத்துடன் பழகுவதை காமல் விரும்பவில்லை. பேராசிரியர் காமலுக்கு மரியத்தின் மீது காதல் என்பதை காமலுக்கு தெளிவுபடுத்துகின்றார். காமலும் இதனை ஒத்துக் கொள்கின்றான். இதற்கிடையில் காமலின் தந்தை இவர்களை கண்டுபிடிக்க எடுக்கும் முயற்சியில் கண்டுபிடித்து விடுகின்றார். காமல் மரியத்தை இவர்களிடமிருந்து காப்பாற்றும் பொழுது, மரியம் காமலின் தந்தை தான் தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்பதை தெரிவிக்கின்றாள். இதனை அறிந்த மரியத்தின் தந்தை கிராமத்தலைவரை சுட்டுக் கொல்கின்றார்.

கைகளில் தொலைபேசி, ஈ-மெயில், இணையம், கார் கொக் ரெயில் பார்ட்டி என வேகமாக உலகம் மாறினாலும் கிராமங்களில் முண்டாசு கட்டியவர்களும் பாட்டிகளும் கைத் தொலைபேசி என மாறினாலும் பழைய சடங்குகளும் மூட நம்பிக்கைகளும் மாறவில்லை. தலைவரை பணிதல், பெண்கள் மீதான காட்டுமிராண்டித் தனங்கள் மாறவில்லை. வெகு அண்மையில் ரைம் சஞ்சிகை தலிபான் ஒரு பெண்ணின் மூக்கை வெட்டியதாக குற்றஞ்சாட்டியிருந்தது. தலிபானின் இச் செயல் காட்டுமிராண்டித்தனமானது. ஆனால் பொதுவாகவே கீழைத்தேய நாடுகளில் பெண்கள் மீதான பார்வையும் நடவடிக்கைகளும் காட்டு மிராண்டித்தன மானவை. பேராசிரியர் காமலிடம் ஒரு தடவை கூறுகின்றார், There are no women's jobs and men's jobs on my boat." என. இதுவே பெண்ணை பார்க்கும் பண்புகளின் வேறுபாட்டை தெளிவாக காட்டுகின்றது.

மரணத்துடன் பயணிக்கும் ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பதிவு இது. தன்னை கொலை செய்யவுள்ள காமலுடனான மரியத்தின் பயணம் துணிச்சலா? இயலாமையா? இதுதான் இன்று கீழைத்தேய நாடுகளில் உள்ள நிலைமை. தகப்பனாலேயே தனது மகளின் மரணத்தை தடுக்க முடியாமல் மதமும் சடங்குகளும் தடுக்கின்றன.

எதிர்ப்பின்மை என்பதே இன்று உலகில் மலிந்துள்ள அராஜகத்திற்கு காரணம். மரியத்தை கொலை செய்ய விரும்பாத காமல் தனது தந்தையிடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் ஒதுங்கி ஓடுதல், பேராசிரியர் தனது மனைவியிடமிருந்தும் அவளது உயர் சமூகத்திடமிருந்தும் ஒளிந்து ஓடுதல் என்பவை, இவர்களுக்கு பரந்த தெளிவான சமூகப் பார்வையிருந்தும் சமூகத்தை எதிர்க்க சக்தியின்மையை காட்டுகின்றது. கதையின் மூல ஆசிரியர் ஒரு சமூகப் போராளி என்பதால் தனது பாத்திரங்களை விசாரணைக்குட்படுத்து கின்றார். சடங்குகளும் நம்பிக்கைகளும் தங்களை காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்பதற்காக தீவிரப்படுத்தப்படுகின்றது. இதன் உருவாக்கம் கூட சுய நலத்தன்மையுடையவை. இங்கும் கிராமத் தலைவன் தன்னைக் காத்துக் கொள்ளவே சடங்குகளை காரணம் காட்டி மரியம் கொல்லப்படவேண்டும் என கட்டளையிடுகின்றான்.

மீண்டும் ஒரு தடவை முஸ்லீம் மத சடங்குகள் நம்பிக்கைகள் அதனை காவிச் செல்பவர்களின் சுய நலம், நகர கிராம நம்பிக்கை வேறுபாடுகள், சமூகத்தின் எதிர்ப்பின்மை போன்ற பல விடயங்களை மரணத்துடன் பயணிக்கும் மரியத்துக் கூடாக மீள் விசாரணைக்குட்படுத்தியுள்ளார் இயக்குனர்.

இப் படத்தை காலம் செல்வத்திடம் பெற்றுக் கொள்ளலாம் 416-731-1752.

பாலு மகேந்திராவின் கதை நேரம் தொலைக் காட்சித் தொடரின் திரைக் கதைகள் புத்தகமாக வெளிவந்துள்ளது. சினிமா மீது தேடல் மிக்கவர்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய புத்தகம். அபூர்வ ராகங்கள், சேது, வெயில் போன்ற பல வித்தியாசமான படங்களின் திரைக் கதைகளும் வெளிவந்துள்ளன.

திரைக் கதை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என அறிய இவை சிறந்த நூல்கள். ரொரண்ரோவில் காலம் செல்வத்திடம் இந் நூல்களை பெற்றுக் கொள்ளலாம்.416-731-1752. இல்லையேல் இணையத் தளங்களில் தேடி பதிப்பாளரிடமிருந்து நேரடியாக பெற்றுக் கொள்ளலாம்




213

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



கா..கா..கா..
என ஆடி அமாவாசைக்கு காகக் கூட்டத்தை கூவியழைத்து தொண்டை நோதலுடன் சாப்பிட்ட காலத்தை நினைத்துப்பார்த்தபடி யன்னலோரம் நின்றார் உலகர்.

'என்ன உலகண்ணை..ஆடி அமாவாசைக்கு எத்தினை காகம் பறக்குதெண்டு எண்ணுறியளே..' எனச் சிரித்துக்கொண்டு கேட்டா ..செக்கண்ட் புளோர் செல்லம்மா..
செல்லம்மா.. இடைக்கிடை பேப்பர் பார்க்கேக்கைதான் தெரியுது ஆர் இருக்கினம் ஆர் மறைஞ்சிட்டின..மெண்டு.. முதியோரில்லத்திலை.. இருக்கிற பெற்றோர் இறந்ததே தெரியாமல் பிள்ளையள் இருக்கிற இந்தக் காலத்திலை ஆடியமாவாசை வந்துபோனதே கனபேருக்குத் தெரியாது..





அங்கை இத்தினை வருசமும் செல்லடிக்கு. பயந்து கன காகங்கள் வெளிநாடு பறந்திட்டுதுகள்.. சிங்களக்காகங்கள்தான் இந்தமுறை ஆடியமாவாசைச் சோறு.. சாப்பிட்டிருக்குங்கள்..

அது சரி உலகண்ணை சிங்களக்.. காகங்களை.. என்ணெண்டு கூப்பிடுறது.. என செக்கண்ட்புளோர் செல்லம்மா.. கேக்க அது இன்ரப்பிறிற்ரரை வைச்சுக்கூப்பிடலாம் என்றபடி.. தனது கோபத்தைக் கொட்டித்தீர்த்த ஆட்டிலறி அன்னம்மா..



இன்னும் 2.. 3 கிழமைதான் வெய்யில் பழையபடி அதே வின்ரர் உடுப்பு. யாராவது காரில் வந்து கோயில் குளமெண்டு கூட்டிக்கொண்டு போனால் சரி. இல்லாட்டி வழமைபோல ரி.வி. நாடகங்களையும் பற்பசை, குழந்தைகளின் டைப்பர், லொக்கரில் வாங்கிவைக்கும் நகைக-ளின் விளம்பரங்களையும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்.



உலகர் கோயில் தேர் தீர்த்தம் திருவிழாக்களில் தேடியும் பல கூட்டாளிகளைக் காணவில்லை. புள்ளைகள் பேரப்பிள்ளைகளின் படிப்பு வேலை ஊர் கடந்து உறவுகளைப்பிரிந்து நாடு கடந்து அகதியாகி மீண்டும் நட்புகளும் உறவுகளையும் சேர்த்து பேஸ்மென்ட எப்பாட்மென்ருகளில் சேர்ந்து வாழ்ந்து தனித்து வீடு வாங்கி, பெரியவீடுவாங்கி... பிள்ளைகள் வளர்ந்து பழையபடி அவர்கள் சிறிய கொண்டோ வாங்க.. உறவுகள் சிறுக்க கவலைகள் பெருக்க தொடர்ந்து இடம்பெயர்வு...


## விற்பனையாகின்றது!

### லலிதா புருடியின்

**"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"**

எனும் அரிய நூல்
மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய அருமையான நூல்




**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்**
**தொலைபேசி இலக்கம்: 416.282.8059**
***GTA Square - 5215 Finch Ave. E., #201***
***Middlefield & Finch***



# Served Over 15 Years In Toronto
# Now in Richmond Hill




# NTE AUTO INC.
## New Trade Engineering

## MS7 Quality Used Car Sales

**346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575**
**416-399-6640**

**சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்**
**தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....**

| | |
|---|---|
| Front Brake Service From . . . . . . . . . | $109. 95 |
| Rear Brake Service From . . . . . . . . . | $109.95 |
| Transmission Service From . . . . . . . | $ 99.95 |
| Lube & Oil Service From . . . . . . . . . | $ 29.95 |
| Tire Change & Balancing From . . . . . | $ 14.95 |
| Engine Tune up from . . . . . . . . . . . | $159.95 |
| Air Conditioning Service From . . . . . | $ 49.95 |
| Computer Scanning from . . . . . . . . . | $ 39.95 |

We do BMW Service & Maintenance

**எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.**




Many more special, please contact for more information.

# சங்க இலங்கியங்களில் தமிழர் திருமண மரபு

## தமிழர் திருமணம்

கடந்த இதழ் தொடர்ச்சி

பழந்தமிழர் திருமண மரபை அறிவதற்கு அக நானூற்றின் 86 வது பாடலும், 136வது பாடலும் மிக முக்கியமான வரலாற்று இலக்கியச் சான்றுகளாக எமக்கு அமைகின்றன. தீவலம் போன்ற சடங்குகளோ, மறையோரோ இல்லாமல், உறவினருக்கு விருந்து படைத்து, முதியபெண்களே மணமக்களைச் சேர்த்து வைக்கும் நடைமுறையை நாம் இங்கு காண்கின்றோம்.

வைத்திய கலாநிதி இ. லம்போதரன்
Knowingourroots@hotmail.com

**உழுந்துதலைப் பெய்த கொழுந்தனி மிதவை, பெருஞ் சோற்று அமலை** நிற்ப என்று உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த குழைவான பொங்கலொடு கூடிய விருந்து தொடர்ந்து நடைபெறுதலையும், நிரை கால், தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி, மனை விளக்குறுத்து, மாலை தொடரி என்று வரிசையாக பந்தல் கால்களை நட்டு, குளிர்ந்த பெரிய பந்தலினை அமைத்து, கொண்டு வந்த மணலைக் கீழே பரப்பி, மனையிலே விளக்குகளை ஏற்றி, மாலைகளைத் தொங்க விடுதலையும், கனை இருள் அகன்ற கவின்பெறு காலை கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள், கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென என்று சந்திரன் உரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய திருமண நன்னாளையும், நற்பொழுதான காலை வேளையையும், உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர், பொது செய் கம்பலை முது செம் பெண்டிர் என்று மண்ஞ்செய்து வைக்கும் முதிய



மங்களப் பெண்கள், தலையில் நிறை நீர்க் குடத்தினையும், கைகளில் மண்டை என்னும் அகல் விளக்கினையும் ஏந்தியவர்களாக வந்து ஒருங்கு கூடுதலையும், முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர என்று முன்னே தருவனவற்றையும், பின்னே தருவனவற்றையும் முறை முறையாக அவர்கள் எடுத்துத் தந்த வண்ணம் இருந்ததையும், புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று, வால் இழை மகளிர் நால்வர் கூடி, "கற்பினின் வழாஅ, நற் பல உதவிப், பெற்றோற் பெட்கும் பிணையை ஆக!" என, நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி, பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க, வதுவை நல் மணம் கழிந்த பின்றை என்று தூய அணிகலன்களை அணிந்த, தாய்மைப் பேறடைந்த மகளிர் நால்வர் கூடி நின்று, "கற்பில் வழுவாது, நல்ல பலவற்றிலும் உதவியாக இருந்து, நின்னை மனைவியாகப் பெற்ற நின் கணவனைப் பேணிக் காக்கும் பெரு விருப்பத்தை உடையவளாயிருப்பாயாக" என்று நீரோடு குளிர்ந்த இதழ்களை உடைய மலர்களை நெல்லோடு சேர்த்து, மணமகளது தலையிலே தூவி வாழ்த்துவதோடு திருமணம் நிறைவு பெறுவதையும் இந்த எண்பத்தாறாவது அக நானூற்றுப் பாடலினூடாகக் காண்கின்றோம். இத்தோடு கல்லென் கம்மையர், ஞெரேரெனப் புகுந்து, "பேர் இற்கிழத்தி ஆக" எனத் தமர் தர, ஓர் இற் கூடிய உடன் புணர் கங்குல் என்று திருமணம் நிறைவுற்ற பின்னர் சுற்றத்தினர் கல்லென்ற ஒலியினராய் விரைந்து வந்து "பெருமனைக் கிழத்தி ஆவாய்" எனக்கூறி, ஓர் இல்லில் மணமக்களை புணர்ச்சிக்குரிய முதல் இரவுக்காக கூட்டியதையும் கூட இந்தப்பாடல் தெளிவாகக் கூறுகின்றது. திருமணத்துக்காக மணமகள் அணியும் புதிய பட்டுப் புடவை பற்றிய குறிப்பை கொடும் புறம் வளைஇ, கோடிக் கலிங்கத்து ஒடுங்கினள் என்ற தொடரும் இப்பாடலின் வரிகளினூடாக எமக்கு அறியக்கிடைக்கின்றது.

இதேபோல மைப்புறப் புழுக்கி னெய்க்கனி வெண்சோறு, வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி என்று நெய்மிக்க வெண்மையான சோற்றினை இறைச்சியுடன் சேர்த்துக் குற்றமற ஆக்கி, அளவற்ற வள்ளன்மையுடன் உயர்ந்தோரை உண்பிப்பதையும், புள்ளுப்புணர்ந்து இனிய ஆக என்று பறவைகளின் நன் நிமித்தம் பார்ப்பதையும், தெள் ஒளி, அம்கண் இருவிசும்பு விளங்க, திங்கட் சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து என்று வானம் தெளிவாக விளக்கமுறத் திகழ்ந்த, உரோகிணி

தொடர்ச்சி 40ஆம் பக்கம்



ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா,
லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை
நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி,
உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம்,
திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை,
வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள்,
எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம்,
பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம்
அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# “தமிழில் எதார்த்த சினிமாக்கள் வரும்”

## சந்திப்பு: இயக்குனர் பாண்டியராஜ்



‘பசங்க’ படத்தின் இயக்குனர் என்று சொன்னால் போதும்... தமிழக முதல்வர் கருணாநிதி முதல் கடைக்கோடி ரசிகன் வரைக்கும் தெரியும். அந்தளவுக்கு ஒரே படத்தில் எல்லோரது கவனத்தையும் பெற்றுவிட்டார், பாண்டிராஜ். புதுக்கோட்டை மாவட்டத்தின், விராச்சிலை ஊரில் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர், மகேந்திரன், பாரதிராஜா போன்றோரின் பாதிப்பில் சினிமா தாக்கம் பெற்று, ‘பாக்யா’ பத்திரிகையில் பணிசெய்து பாக்கியராஜின் கவனம் பெற்று, சின்னச் சின்ன கவிதைகள் எழுதி, சேரன் மற்றும் தங்கர் பச்சான் இருவரிடமும் உதவி இயக்குனராக பணிபுரிந்து, ஒரு வாய்ப்புக்காக காத்துக் கிடந்தவர், இன்று தமிழ் திரையுலகின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர்.

பாண்டிராஜ் புதிதாக இயக்கும் ‘வம்சம்’, தமிழக முதல்வர் மகன் தமிழரசு தயாரிக்க, முதல்வர் பேரன் அருள்நிதி நடிக்கும் படம். ‘வம்சம்’ வெளியீட்டுக்கு தயாராக இருக்கும் நிலையில் பாண்டிராஜை சந்தித்தோம். பார்த்தால், கல்லூரி படிப்பு முடிந்து சென்னைக்கு வேலை தேடி வந்து இறங்கியிருக்கும் கிராமத்து இளைஞன் போல்தான் இன்றும் இருக்கிறார், ஆனால், தெளிவாகவும் ஆழமாகவும் பேசுகிறார்.

கலைஞர் மகன் தயாரிக்கிறார், பேரன் நடிக்கிறார், தலைப்பு வேற ‘வம்சம்’ என்றிருக்கிறது. இந்த மூன்றும் சேர்ந்து பெரிய எதிர்பார்ப்புகளை உருவாக்குகிறதே?

பாண்டிராஜ்: “நீங்க இந்தக் கேள்வியைக் கேட்பீங்கன்னு தெரியும். ஆனால், முதல் கேள்வியாகவே இதைத்தான் கேட்பீங்கன்னு நினைக்கலை. (சிரிக்கிறார்) நீங்க மட்டுமல்ல, முதல்வர் கலைஞர் குடும்பத்தினர் படம் என்பதால், தலைப்பு பற்றி பலரும் கேட்கிறாங்க. ஆனா, அப்படி எதுவும் வித்தியாசமாக இதில் இல்லை. இந்த ‘வம்சம்’ என்பது முழுக்க முழுக்க கதைக்கான தலைப்புதான். படத்துல பதினைந்து வம்சங்கள் இருக்கு, இவங்களுக்குள்ள உண்டாகிற காதல், மோதல், போராட்டம், ஆத்திரம், இழப்பு, அவமானம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த வடிவம்தான் வம்சம். ‘அன்பரசு’ என்பவன்தான் கதையின் நாயகன். அவனுக்குள் உண்டாகும் போராட்டம், பிரச்சினைகள், போட்டிகள், அவன் சார்ந்த வம்சத்துக்குள்ளாற என்ன நிலவுதுன்ற கதைதான் இந்த வம்சம்.”

உங்க முதல் படத்துலயே, தமிழ் திரை சரித்திரத்திலேயே இல்லாத ஒரு துணிச்சலான காரியத்தைச் செய்தீங்க. ‘பசங்க’ மாதிரியான ஒரு குழந்தைகள் கொடுக்கும் நம்பிக்கை, தைரியம் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தது?

பாண்டிராஜ்: “முழுக்க முழுக்க மக்கள் மேல இருந்த நம்பிக்கைதான். நல்ல படம் எந்தக் காலத்திலேயும் ஜெயிக்கும். ‘சேது’, ‘அழகி’ மாதிரியான படங்களை ஜெயிக்க வெச்ச மக்கள் நிச்சயம் என்னோட ‘பசங்க’ளையும் வெற்றி பெற வைப்பாங்கன்ற நம்பிக்கைதான். அதுவும் இந்தக் கதைய எல்லாத் தயாரிப்பாளர்கள் கிட்டயும் சொல்லலை. ஒரு இயக்குநரா இருந்து தயாரிப்பாளரா இருக்கிறவர்கிட்டதான் சொல்லணும்னு முடிவு பண்ணி வெச்சிருந்தேன். ‘சுப்ரமணியபுரம்’ ஓடிட்டு இருந்தது. அந்தப் படத்திலயும் தமிழ் திரை சரித்திரத்தில் பதியும்படியான ஒரு துணிச்சலான காரியத்தை அவர் செய்திருந்தார். இவர்தான் நம் கதைக்கு சரியான தயாரிப்பாளராக இருக்க முடியும் என்று சசிக்குமார் அவர்களைச் சந்தித்தேன். அவருக்கு இந்தச் சப்ஜெக்ட் பிடிச்சிருந்தது. அப்படியான சந்தர்ப்பத்துலதான் இது சாத்தியப்பட்டது.”

பொதுவாக தமிழ் சினிமா தயாரிப்பாளர்கள் இயக்குநர்களையே இயக்கக் கூடியவர்கள் என்கிற ஒரு கருத்து இருக்கு. அதுவும் உங்கள் தயாரிப்பாளர் ஒரு புகழ்பெற்ற இயக்குநராகவும் இருந்திருக்கிறார். அந்த விதத்தில் ‘பசங்க’ படத்தில் இடையூறுகள் ஏற்பட்டிருக்கா?

பாண்டிராஜ்: “சுத்தமாக இல்லை. சசிகுமார் எனக்கு முழு சுதந்திரம் தந்தார். அவரைப் போன்ற நல்ல சினிமா பற்றி நன்கு தெரிந்த ஒருவர் தயாரிப்பாளராக கிடைத்ததால்தான் அந்தப் படம் சாத்தியமானது.”

‘வம்சம்’ படம் முதல்வர் குடும்பத்தினர் தயாரிக்கும் படம். இதிலேயும் அப்படிப்பட்ட இடையூறுகளுக்கு வாய்ப்பு இருந்திருக்குமே? ‘பஞ்ச் டயலாக் வைக்கணும்’, ‘இப்படிப்பட்ட பேமிலியில இருந்து வராரே அதுக்கு ஏத்த மாதிரி சில சீன்கள்’ என்று...

பாண்டிராஜ்: “நான் ‘பசங்க’ முடிச்ச உடனேயே எழுதி முடிச்ச ஸ்கிரிப்ட்தான் வம்சம். அப்பவே ‘வம்சம்’ என்ற தலைப்பையும் வைத்துவிட்டேன். அருள்நிதி சார் நடிக்கப் போறாரு, தமிழரசு சார் தயாரிக்கப் போறார்னும் அப்ப எனக்குத் தெரியாது. இன்னும் ஏன், இந்த நிமிஷம் வரைக்கும் தயாரிப்பாளருக்கு ‘வம்சம்’ படத்தின் கதையே தெரியாது. அந்தளவுக்கு என் மேல நம்பிக்கை வைத்திருக்காங்க. தங்களோட மகனை நல்ல படியா கொண்டு வந்துருவேன்கிற எண்ணத்தில முழுமையான சுதந்தரமும், எல்லாவிதமான வசதிகளையும் செஞ்சு தந்திருக்காங்க. ‘பஞ்ச் டயலாக்’ போன்ற எந்த இடையூறுகளையும் நான் பார்க்கல. ஒரிஜினல் ஸ்கிரிப்ட்ல என்ன இருக்கோ அதை அப்படியே படமாக எடுத்துட்டு வர்றோம். கண்டிப்பா நல்லா வரும்கிற நம்பிக்கை இருக்கு. தயாரிப்பாளராக தமிழரசு சார் எங்களுக்குக் கிடைச்சது சசிகுமார் மாதிரியே ஒரு பெரிய பரிசுன்னுதான் சொல்லுவேன். இதுபோல் பல பரிசுகள் இந்தப் படத்தில் டெக்னீஷியன்களாக எனக்குக் கிடைத்திருக்காங்க.

‘சித்திரம் பேசுதடி’, ‘அஞ்சாதே’ போன்ற படங்கள்ல கேமராமேனாக இருந்த மகேஷ் முத்துசாமி இந்தப் படத்துலயும் பணிபுரிந்திருக்கார். ஆர்ட் டைரக்டர் ஏ.தேவராஜ் என்று மிஸ்கின் சாரோட யூனிட்டில் பலரும் இதில் வேலை பார்த்திருக்காங்க. ‘பசங்க’ படத்த நான் ஒவ்வொரு சீசன்ல நடக்கிற மாதிரி அமைச்சிருப்பேன். இந்த வம்சத்துல திருவிழா தொடர்ந்து வந்துட்டு இருக்கிற மாதிரி அமைச்சிருக்கேன். ஆர்ட் ஒர்க் பிரமாதமாக பேசப் படும்ற நம்பிக்கை இருக்கு. எடிட்டர் யோக பாஸ்கர். பசங்களில் பணிபுரிந்த அதே எடிட்டர் தான். இசையமைப்பாளர் தாஜ்நூர், ஏ.ஆர்.ரகுமானின் உதவியாளர். ரொம்ப பிரமாதமா பாடல்கள கொடுத்திருக்கார்.”

உங்களை ஒரு எதார்த்த சினிமா இயக்குநர் என்று சொல்லலாம் என நினைக்கிறேன். எதார்த்த சினிமாவின் எதிர்காலம் தமிழில் எப்படியிருக்கும்?

பாண்டிராஜ்: “நிச்சயமா பிரகாசமா இருக்கும். ஆனால், யதார்த்த சினிமா பற்றி தமிழில் சில தவறான புரிதல்கள் உள்ளன. உதாரணமா கிராமத்தில எடுக்கிற படங்கள் எதார்த்தம்னும் நகரத்துல நடக்கிற படம் எதார்த்தம் இல்லைன்னும் நினைக்கிறாங்க. அப்படி சொல்ல முடியாது. ‘அங்காடித் தெரு’ முழுக்க முழுக்க நகரத்துல எடுக்கப்பட்ட படம்தான். அதில் எதார்த்தம் இல்லையே? அது மாதிரி சிட்டிலயும் யதார்த்த சினிமா எடுக்கலாம். ஆனால், இன்னொரு பக்கம் இன்னிக்கு வரைக்கும் தமிழில் எதார்த்த சினிமாவ யாரும் எடுக்கலேன்னுதான் சொல்லணும். ‘பசங்க’ சினிமாவுக்கான அத்தனை விஷயங்களையும் உள்ளடக்கி வந்த ஒரு படைப்புதான். ஈரான், ஈராக் படங்கள்ல இயல்பாவே பதிவு பண்ணப்பட்டிருக்கும் எதார்த்தம் இங்கே இன்னும் வரலை, நாம இன்னும் அதை பிந்தொடரலை.”





நேர்காணல் - சிவதாணு




SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

# சிறுகதையின் இலக்கண வடிவம் என்ன?

## ஒரு சமையல் குறிப்பு - சிறுகதை

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

சிறுகதையின் வடிவத்துக்கு ஐந்து அடிப்படைகள் உண்டு என்பது மரபான இலக்கணமாகும்

1. சிறுகதையின் "உடல்" ஒருமை கொண்டதாக இருக்கும். தேவையில்லாத விடயங்களோ அதில் இருக்காது. அது நேராக ஒரு முடிவை நோக்கிச் செல்லும்.

2. சிறுகதையின் முடிவு வாசகன் ஊகித்திராத ஒன்றாக இருக்கும். இதுவே "திருப்பம்" என்பது. சிறுகதையின் மையம் என்பது திருப்பத்திலேயே உள்ளது.

3. திருப்பம் நிகழ்வது வாழ்க்கையின் ஒரு புள்ளியிலேயே. ஆகவே சிறுகதை வாழ்க்கையின் "ஒரே ஒருபுள்ளியை" மட்டுமே எடுத்துக் கொள்ள முடியும். சிறுகதை "ஒன்றை மட்டுமே சொல்லக் கூடிய" இலக்கிய வடிவம். திருப்பம் மூலம் வெளிப்படும் அந்த மையத்தை தவிர வேறு எதை அது சொல்லத் தொடங்கினாலும் கதை சிதறி, ஒருமை இல்லாமலாகும்

4. சிறுகதை வாசகனிடம் எதையாவது சொல்வதற்காக உருவான வடிவம் அல்ல. வாசகனை கதையில் பங்கெடுக்க வைப்பதற்காக உருவான வடிவம். வாசகனை எந்த அளவுக்கு கற்பனைசெய்ய வைக்கிறதோ அந்த அளவுக்கு சிறுகதை வெற்றி பெறுகிறது. சொல்லப்படும் விடயம் சிறுகதையில் இருக்கக் கூடாது. வாசகனே ஊகித்துச் சென்றடையும் விடயமே சிறுகதையின் மையமாகும்.

5. சிறுகதை அதன் கடைசி வரிக்குப் பிறகு வாசகன் மனதில் மீண்டும் தொடங்குகிறது.

சிறுகதை வடிவத்தின் உறுப்புகள்

சிறுகதையில் வழக்கமான வடிவத்தில் உள்ள உறுப்புகள் என்னென்ன?

அவற்றை கீழ்க்கண்டவாறு வரையறுத்து கூறலாம்.

1. மையக்கதாபாத்திரம். [ Protagonist ]

ஒரு கதையைப் பற்றிப்பேசும் முன் "இது யாருடைய கதை?" என்ற கேள்வி மிக முக்கியமானது. உதாரணமாக ஜெயகாந்தனின் "அக்கினிப்பிரவேசம்" கங்காவின் கதை. இவ்வாறு ஒரு மையக் கதாபாத்திரத்தை வரையறுத்துக்கொள்வது ஒரு சிறுகதையின் வடிவ ஒருமைக்கு இன்றியமையாததாகும்.

மையக்கதாபாத்திரத்தை நோக்கி வாசகனின் கவனம் இருக்கும்படி கதை அமைய வேண்டும். அந்த மையக்கதாபாத்திரத்தின் குணச்சித்திரம் ஆசிரியனால் கதையில் கொடுக்கப்படுகையில் கதைக்கு ஒரு குவிமையம் அமைகிறது.

மேலே சொன்ன கதையில் "காகம்" மையக் கதாபாத்திரம். இது அக்காகத்தின் கதை. அக்காகம் எப்படிப்பட்டது, அதற்கு என்ன நடந்தது என்பதுதான் கதை. வரி 1 மையக்கதாபாத்திரத்தையும் அதன் குணச்சித்திரத்தையும் அறிமுகம் செய்கிறது. இப்போதுதான் உண்மையில் கதை தொடங்குகிறது.

2. எதிர் கதாபாத்திரங்கள். [Antagonists ]

சிறுகதையில் மேலே சொன்ன மையக் கதாபாத்திரத்தை நேர்நிலை [positive] என்று வைத்துக்கொள்வோம். அதன்மீது குறுக்காக வெட்டும் கோடுகள்தான் பிற கதாபாத்திரங்கள். எதிர்நிலை [negative] கதாபாத்திரங்கள். "இவர்கள் மையக்கதாபாத்திரத்திற்கு அளிக்கும் பாதிப்பு மூலம்தான் கதையின் சிக்கல், நெருக்கடி ஆகியவை உருவாகின்றன. சிறுகதையில் இத்தகைய கதாபாத்திரங்கள் ஒன்று அல்லது இரண்டாக இருப்பது நல்லது. வடிவ ஒருமை எளிதாக உருவாகும்.

**ஜெயமோகன்**

மேலே சொன்ன கதையில் நரி எதிர்கதாபாத்திரம். வரி 3 அக்கதாபாத்திரத்தை அறிமுகம் செய்கிறது.

இப்போது கதையின் நேர்சரடும் எதிர் சரடும் உருவாகிவிட்டன. இவற்றை மோதவிட்டோ, பின்னியோ கதையை கொண்டுசெல்லலாம். இங்கே ஒருவிடயத்தைச் சொல்லியாக வேண்டும். மையக்கதாபாத்திரம் "நல்ல" கதாபாத்திரமாகவும் எதிர் கதாபாத்திரம் "கெட்ட" கதாபாத்திரமாகவும் இருக்க வேண்டுமென்பது இல்லை. மையக் கதாபாத்திரத்தை வெட்டிசெல்வதாக எதிர் கதாபாத்திரம் இருக்கவேண்டும் அவ்வளவுதான்.

3. கதைக்களம். [context]

கதை நடக்கும் சூழல், காலம் ஆகியவையே கதைக்களம். கதையின் மையக்கருவையும் கதாபாத்திரங்களையும் ஒரு வாழ்க்கைச் சூழலில் நம்பகமாக பொருத்திக்காட்ட வேண்டியது கதைக்கு அவசியம். கதை எங்கே நடக்கிறது, எப்போது நடக்கிரது என்றகேள்விக்கு கதையில் பதில் இருக்க வேண்டும். அதற்கேற்ப கதையின் சித்தரிப்புகள் இருக்கவேண்டும்.

அச்சூழல் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். சமகாலமாக இருக்கலாம். இறந்தகாலமாகவோ எதிர்காலமாகவோ இருக்கலாம். மண்ணாக இருக்கலாம். விண் வெளியாக இருக்கலாம். வாசகன் அச்சூழலை நம்பும்படியாக எழுத்தாளன் அதைச் சித்தரிக்கவேண்டும்.

ஆனால் சிறுகதை என்றவடிவம் விரிவான சித்தரிப்புகளுக்கு இடம் கொடுக்காது. ஏற்கனவே சொன்னதுபோல திருப்பம்தான் அதன் மையம். அதை நோக்கி அது ஓடிக் கொண்டிருக்கவேண்டும். விரிவாக விவரித்துக் கொண்டிருந்தால் வடிவஒருமை கைகூடாது.

ஆகவே சிறந்த சிறுகதைகள் அதிக சொற்கள் இல்லாமல் கதையோட்டத்தின் போக்கிலேயே கதைக்களத்தையும் சித்தரித்துச் செல்லும். எவ்வளவு சுருக்கமாக சொல்லமுடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்வது நல்லது. ஆனால் கதைக்களம் தெளிவாக உருவாகவும் வேண்டும்.

பழையகாலக் கதைகளைப் பார்த்தால் முதலில் கதைக்களம், பிறகு மையக் கதாபாத்திரம். பிறகு எதிர் கதாபாத்திரம் என்று சம்பிரதாயமாக கதையைச் சொல்வதைக் காணலாம். "சிங்கப்பூர் விமானநிலையம்! பத்து நிமிடத்திற்கு ஒரு விமானம் ஒரு இறங்கும் இடம் அது என்பதனால் ஒரே கூட்டம். உலகம் முழுக்க உள்ள பலவகையான மனிதமுகங்கள். "என்றெல்லாம் கதைக் களத்தை வர்ணித்துவிட்டு "எட்டுபத்துக்கு வந்துசேர்ந்த விமானத்தில் நிர்மலா வந்து இறங்கினாள். நிர்மலாவுக்கு வயது இருபது. அழகானவள். எம்பிஏ படித்திருக்கிறாள். கண்டிப்பானவள்." என்று மையக்கதாபாத்திரத்தை அறிமுகம் செய்து, அதன் பின் "நிர்மலாவை வரவேற்க ஹரி வந்திருந்தான். அவளது காதலன். அவளுக்கு நேர் எதிர். எதிலும் ஒழுங்கில்லாதவன்" என்று எதிர் கதாபாத்திரத்தை அறிமுகம் செய்து அதன் பின் பிரச்சினையை சொல்லி கதையை நடத்துவது இன்றும்கூட கல்கி, விகடன் கதைகளில் காணக்கிடைக்கிறது. இது மிக பழைய ஒரு "அமெச்சூர்' எழுத்து முறையாகும்.

குறைவான சொற்களில் போகிறபோக்கில் சொல்லிச்செல்வதே சிறுகதைக்கு வடிவ நேர்த்தியை உருவாக்கும். மேலே சொன்ன கதையை இப்படி எழுதிப்பார்க்கலாம். "வி-மானநிலையத்துக்கு ஹரி சீவாத தலையுடன் வந்திருந்தான். "லக்கேஜை நான் எடுத்துக் கொண்டுவருகிறேன்" என்றவன் ரகசியமாக" நீ ரொம்ப அழகாக இருக்கிராய்" என்றான். "சும்மா சோப்பு போடாமல் வேலையைபார்" என்று அவனை கைப்பையால் அடித்துவிட்டு நிர்மலா வாட்சைப்பார்த்தாள். எட்டுபதினைந்து"

பல சிறுகதைகளில் கதைக்களம் ஓரிரு வார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்கும். சில கதைகளில் ஊகிக்க விடப்பட்டிருக்கும். சிலகதைகளில் கதைக்களம் முற்றிலும் மறைந்திருக்கும். ஆனால் கதை எங்கே எப்போது நிகழ்கிறது என வாசகன் உணர்ந்திருப்பான்.

மேலே சொன்ன கதையில் "ஒரு ஊரில்" என்பதுதான் கதைக்களம்.

சிறுகதையில் ஒரே ஒரு கதைக்களம் இருப்பது வசதி. ஒருமுறை கதைக்களம் மாறுவதும் பெரிய சிக்கலைக் கொடுக்காது. அதற்குமேல் கதைக்களத்தை மாற்றினால் சிறுகதையின் ஒருமை சிதறும். வாசகன் கதையை "இழுவை"யாக உணர்வான்

3. கதைமுடிச்சு

கதை எதைப்பற்றியது என்பதுதான் கதை முடிச்சின் அடிப்படை. மேலே சொன்ன கதையில் கதைமுடிச்சு ஏமாளித்தனம் பற்றியது. யாரை யார் ஏமாற்றுகிறார்கள் என்பதுதான் கதையின் கேள்வி.

காகத்தை ஏமாற்ற நரி முயல்கையில் கதைமுடிச்சு விழுகிறது. சொற்றொடர் 4 ல் கதைமுடிச்சு விழுகிறது.

கதையின் மையமான நிகழ்ச்சி நடக்கும் போது முடிச்சு உருவாகலாம். மையமான கேள்வி எழும்போது முடிச்சு உருவாகலாம்.

பெரும்பாலும் மையக்கதாபாத்திரத்தை ஒட்டித்தான் முடிச்சு உருவாகும். அதற்கு எதிர்கதாபாத்திரம் காரணமாக இருக்கும்.

4. திருப்பம்.

மேலே சொன்ன முடிச்சை கதை எப்படி அவிழ்க்கிறது என்பதுதான் கதையின் இறுதி. சிறுகதையில் அது எப்படி அவிழும் என்று வாசகன் ஊகிக்கிறானோ அதற்கு அப்பால் சென்று புதிய ஒரு கோணத்தில் அதை அவிழ்ப்பதே திருப்பம் ஆகும்.

சொற்றொடர் 6 ல் அத்தகைய திருப்பம் உள்ளது. இது வாசகனை சற்று அதிர வைக்கிறது. நிலைகுலையவைக்கிறது. அவனது சிந்தனையை உசுப்புகிறது. அவனை மேலே சென்று கற்பனை செய்ய வைக்கிறது.

5. தலைப்பு.

கதையின் தலைப்பு என்பது ஒரு மனிதருக்கு பெயர் போடுவதுபோல ஓர் அடையாளம் மட்டுமே. நினைவில் நிற்கும் தலைப்பு போடுவது நல்லது

ஆனால் தலைப்பில் செய்யக்கூடாதவை சில உள்ளன.

அ. கதையின் மையம் என்ன, சாரம் என்ன என்றெல்லாம் ஆசிரியனே சொல்வதுபோல தலைப்பு வைப்பது தவறு. உதாரணம் " மனமே மருந்து!"

ஆ. எல்லாரும் போட்டு தேய்ந்து போன பாணியில் தலைப்பு போடக்கூடாது. உதாரணம் "கற்க மறந்த பாடங்கள்" "தோணியும் வண்டியில் ஏறும்"

இ. கதையின் சாரத்தை படிமம் மூலம் சுட்டும் தலைப்பு வைக்கலாம். அது கதையை நினைவில் நிறுத்த உதவும். ஆனால் அது மிக வெளிப்படையாக இருக்கக் கூடாது. வாசகனின் கற்பனைக்கு அது தடையாகும்.

இதுவே சிறுகதையின் உறுப்புகள்.

- தொடரும்




*Markham and Progress* — *Drive thru open 24 hours*
*Markham and Finch* — *Drive thru open 24 hours*
*Markham and Highglen* — *Drive thru open 24 hours*
*Port Union and Kingston Rd* — *Drive thru open 24 hours*
*Malvern Town Centre*
*Markham and Steels Wal Mart*

**Not valid with any Extra Value Meal or Happy Meal®.**

For a limited time only. At participating McDonald's® restaurants in Canada.

"Coca-Cola Zero" is a registered trademark of Coca-Cola Ltd., used under license.

©2010 McDonald's.

i'm lovin' it®

# சங்க இலங்கியங்களில்

36ஆம் பக்கத்தொடர்ச்சி

நட்சத்திரத்துடன்
சந்திரன் கூடி நிற்கின்ற, எல்லா இடர்களையும் நீக்கும் நன்னாள் திருமண நாளாவதையும்,



கடிநகர் புனைந்து என்று மணமனையை அழகு படுத்துவதையும், கடவுட் பேணி என்று கடவுளை வழிபடுதலையும், படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ, வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று என்று மண முழவுடன் பெரிய முரசமும் முழங்க, மங்கல மகளிர் மணமகளுக்கு மண நீராட்டுதலையும், பூக்களும் இமையார் நோக்குபு மறைய என்று அவர்கள் தமது கூர்மையான கண்களால் மணமகளின் அழகை இமையாது பார்த்துச் சென்றதையும், மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை, பழங்கன்று கறித்த பயம்புஅமல் அறுகைத், தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற, மண்ணுமணி அன்ன மாஇதழ்ப் பாவைத், தண்நறு முகையடு வெண்நூல் சூட்டி, தூஉடைப் பொலிந்து மேவரத் துவன்றி, மழைபட் டன்ன மணல்மலி பந்தர், இழைஅணி சிறப்பின் என்று மணமக்களுக்கு அறுகம் புல்லுடன் கூடிய மலர்களை வெண்மையான நூலில் தொகுத்து அணிவித்து, புத்தாடையால் பொலிவுறச் செளிணிது, மணப்பந்தலிலே அமர்த்தி சிறப்பான அணிகலன்களை அணிவிப்பதையும், பெயர்வியர்ப்பு ஆற்றி என்று பந்தலில் அமர்ந்துள்ள மணமக்களின் வியர்வையை ஆற்றுதலையும், தமர்நமக்கு ஈத்த தலைநாள் இரவின் என்று இவ்வாறாக மணவினையினூடாக கொடுக்கப்பட்ட மணமகளுடன் கூடும் முதல்நாள் இரவினையும் அகநானூற்றின் நூற்று முப்பத்தாறாவது பாடல் கூறுகின்றது.

எமது தாயகக் கிராமங்களிலே "சோறு கொடுத்தல்" என்னும் எளிமையான உறவினர்களின் ஒன்றுகூடல் விருந்துடன் தாலி, தீ வலம் வருதல் போன்ற சடங்குகள் இல்லாமல் மணமக்கள் ஒன்று சேர்க்கப்பட்டு வருகின்ற வழமையினூடாக இன்றும் இம்மரபு எம்மிடையே தொடர்வதை நாம் காண்கின்றோம்.

- தொடரும்

# இவர்கள் இப்படித்தான்

19ஆம் பக்கத்தொடர்ச்சி

அறுபது லட்சம் ரூபாய் கேட்க, அறுபது லட்ச ரூபாயில் படத்தையே முடிக்க திட்டமிட்டிருந்த சீமான் உதவியாளர், என்ன செய்வதென்று தெரியாமல், தென்னிந்திய சினிமா வர்த்தக சபை பஞ்சாயத்துக்குப் போயிருக்கிறார்.

சினிமாக்காரர்களில் நடிகர்கள் நாசர், ரோகிணி, பாடலாசிரியர்கள் நா.முத்துகுமார், கபிலன், யுகபாரதி, வசனகர்த்தா பாஸ்கர்சக்தி, இயக்குநர்கள் பாலுமகேந்திரா, பாலாஜி சக்திவேல் ஆகியோரை சென்னை இலக்கியக் கூட்டங்களில் அடிக்கடி பார்க்கலாம். நடிகர்கள் கமலஹாசன், பார்த்தீபன், இயக்குநர் மகேந்திரன், நடிகை ரேவதி ஆகியோர் பேச்சாளர்களாகவோ அல்லது புத்தகம் வெளியிடுபவர்களாகவே அழைக்கப்பட்டால் ஆர்வமுடன் இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்வார்கள்.

இயக்குநர் சீமானும் 'ஆனந்த விகடன்' ஆசிரியர்



ரா.கண்ணனும் நல்ல நண்பர்கள். தற்போது சீமான் சிறையில் இருக்கும் நிலையில், 'விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு... சீமான் என் தோழன். சில வேளை உணவுக்கு உட்காரும்போது, சிறையில் அண்ணன் என்ன உண்பான் எனத் தோணும். சாப்பாட்டுத் தட்டில் என் கைகள் கோலம் போடும்!' என்று தன் 'பேஸ்புக்' குறிப்பில் எழுதியுள்ளார் ரா.கண்ணன்.








